Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු සතියේ පුවත්පත

பக்கம் 20

13-19.06.1993

ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 3

உள்ளே



தகவல் பெட்டி


பொஸ்னிய முஸ்லிம்களும் போரிடும் சேர்பியர்களும்!

சிறுகதைகள்

வாசக சாலை

சிரிவிசித்திரம்

## பிரபாகரன் பேச்சுக்கு வருவாரா?
## மரணத்துள் வாழும் மக்களுக்கு விடிவு ஏற்படுமா?





சைக்கிள் ஓடவும் தலைக்கவசம் வேண்டும்!
- ஆச்சரியமான தகவல்கள்

இலக்கிய நயம்

இந்தியா ...... பதில்கள்

லேடீஸ் ஸ்பெஷல்



படக்கதையோடு பாப்பா முரசு

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு-
வணக்கம்.
காதலர்கள் பரிமாறிக் கொள்ளும்
முத்தங்கள் போல-
தினமுரசு வாரமலருக்கு
வாசகர் கடிதங்கள்.
தித்திக்க வைக்கின்றன- மழையாய்
பொழிந்து- அன்பில்
நனைய வைக்கின்றன.

■

உள்ளூர் எழுத்தாளர்களின்
தரமான படைப்புகளுக்கு
தினமுரசு நிச்சயமாக
சிறப்பிடம் வழங்கும்.
இந்த இதழே
அதற்கு சான்று பகரும்.

■

செக்ஸ் சற்று கூடுதல் என்று
ஒரிரு கடிதங்கள் வந்தன.
செக்ஸ் ஒன்றும் அருவருப்பானதல்ல.
கல்லூரிகளில் கூட
செக்ஸ் கல்வி அவசியமென
உணரப்படும் காலமிது.
காலமாற்றத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள்
கவலைப்படட்டும்- நமக்கு கவலையில்லை.
செக்ஸ் பற்றிய புரிதல்கள்
வக்கிரங்களை தடுக்கும்.
ஒட்டி நின்று பார்த்து
ஒழுக்கம் மீறாமல் தடுக்கும்.
ஆயினும்- தினமுரசு வாரமலர்-அதை
வழங்குவதிலும் ஒரு நாகரிகமான முறையை
கடைப்பிடிக்கும்.

■

போதனை நடத்த- நாங்கள்
மகான்கள் அல்ல.
சாதாரண மனிதர்கள்.
ஆனால்-
விரிந்து வரும் உலகின்
வெளிச்சமாற்றங்களை
உள்ளே வராமல்தடுக்கும்
சன்னல்கள் சில
திறக்கப்பட வேண்டும்.
அதுவே எம் விருப்பம்.

■

வான் இடிந்தது போல்
கொட்டிய மழை
இயற்கையே உனக்கு
இரக்கமில்லையா என்று
நினைக்கவைத்துவிட்டது.
வெள்ளப் பெருக்கால் உடமைகள்
அள்ளிச் செல்லப்பட்டும்
வீடு-வாசல்களை விட்டு வெளியேறியும்
அவதிப்படும் மக்களுக்கு
அரசு உதவுகிறது.
தொண்டர் நிறுவனங்கள் உதவுகின்றன.
மேலும் தேவையான நிவாரணங்கள்
வழங்கப்பட வேண்டும்.

■

அடுத்து வரும் இதழில்
கவிதைப் போட்டி இல 2
முடிவுகள் தரப்படும்.
உங்கள் கவிதா தாகம்
உள்ளபடியே
வியக்கவைக்கிறது.
தேன் கிண்ணம்-அடுத்த
இதழ் முதல்
உங்கள் வண்ணமான
எண்ணங்களை ஏந்திவரும்-என்ன,
இனிப்பான செய்திதானே?

மீண்டும் சந்திப்போம்

அன்புடன்
ஆசிரியர்.

### தொட்டவுடன் பிரமிப்பு

ஓர் வாரத்திற்கு முன் உன் விளம்பரம் கேட்டேனே வானொலியில்
ஓடிச் சென்றேன் கடையடிக்கு
அன்று உன் தரிசனம் கிடைக்கவில்லையே?
என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்
மொட்டவிழ்த்து எப்போது மலர் மலருமென்று
உன்னைக் கண்டவுடன் சந்தோசம்
தொட்டவுடன் பிரமிப்பு.

எல்.சசிகுமார்
வத்தளை.

### தொடரட்டும் துணிச்சல்

அரசியல் செய்திகளைத் துணிச்சலோடு பக்க சார்பின்றி வெளியிடவும், அதன் குறைநிறைகளை உரிய முறைப்படி ஆராயவும் பத்திரிகை ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. தங்கள் பத்திரிகை அவ்வாறு செயற்பட்டு மக்கள் மனதில் இடம்பிடிக்க வேண்டும்.

எஸ். சலாகுதீன்
கொழும்பு -13

என் இதய பூங்காவில் பூத்துவிட்ட புதுமலர் நீ.

எஸ். சந்திரசேகர்
நானுஓயா.


தினமுரசில்
விளம்பரம்
செய்யுங்கள்
வியாபாரத்தைப்
பெருக்குங்கள்
போன்: 820265


### வாசகர்களுக்கு பணிந்தது தினமுரசு

கொழும்பிலிருந்து வெளிவரும் தினமுரசு வாரஇதழ் வாசகர்களுக்கான பரிசுப் போட்டிகளை அறிவித்தது. போட்டிகளுக்கான விடைகளை அனுப்புவோர் தினமுரசில் வெளியாகும் முகவரிக் கூப்பன்களை வெட்டி அனுப்புமாறு கேட்கப்பட்டனர்.

பாதுகாக்கப்பட வேண்டிய பத்திரிகையை முகவரி கூப்பனுக்காக வெட்டச் சம்மதியோம் என்று பெருந்தொகையான வாசகர்கள் கடிதங்கள் மூலம் அதன் ஆசிரியருக்கு உறுதியாகத்தெரிவித்து விட்டார்களாம்.


வாசகர்களின் உறுதியைக் கண்ட ஆசிரியர் பெரும்பான்மையோர் முடிவுக்கு கட்டுப்படுவதாக கூறிவிட்டாராம். இனிமேல் தினமுரசில் முகவரிக் கூப்பன்கள் இடம் பெறாது என்பது சர்வ நிச்சயமாம். (ஹி.ஹி.ஹி செய்தி எப்படி? சந்தோஷம் தானே?)

## கவிதைப் போட்டி-இல03



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். உங்கள் உணர்வுக் குதிரைகளைத் தட்டி விடுங்கள். **விரைவாக விளங்கிக் கொள்ளும் நயத்தோடு அதிவேக வீச்சோடு வார்த்தைகள் வந்து வசீகரிக்கட்டும்.**

கவிதைப் போட்டி இலக்கம் மூன்றிற்கான உங்கள் ஆக்கங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் திகதி 19.6.93 என்பதை நினைவில் கொள்ளுங்கள். சிறந்த கவிதைகளைத் தரும் மூவருக்கு தலா நூறு ரூபா பரிசுப் பணமாகத் தரப்படும்.



# வாசக சாலை

ஏர் முரசு கேட்டோம் போர் முரசு கேட்டோம்
மதிமயங்கும் இளமுரசு கேட்டோம்.
எம்முரசு கேட்டினும் கிடைக்காத மனத்திருப்தி
தினமுரசு கிடைத்ததும் திருப்தியாய்க் கேட்டது.

எம். சுரேஷ்
கொழும்பு -15.

மாற்றங்களைப் பெரிதும் விரும்பும் வாசகர்களுக்கு மாறுதலான பத்திரிகை.

ஏ.குத்தூஸ்
பதுளை.

புதிய நோக்கில் புதிய அம்சங்களோடு வெளிவரும் தினமுரசு நல்ல வரவேற்பைப் பெறவேண்டும். பத்திரிகைச் சுதந்திரம் பயமின்றி பாவிக்கப்பட வேண்டும்.

எஸ். ஆனந்தராஜா
கொழும்பு -11

**இனிமை தரும் இன்ப மலர்**

இளமையும், இனிமையும் தாங்கி வரும் இன்பமலர் தினமுரசு வாரமலர்.

வே.சண்முகநாதன்
கொழும்பு -11

கவிதைப் போட்டிகள் மூலம் நம் கவிதை உற்பத்தி அதிகரிக்க உறுதுணையாய் விளங்குகிறாய்.

எம்.எச்.எம்.சாயித்

**இதயச் சுவர்களில் நீ**

அன்பே தினமுரசு என் இதயச் சுவர்களில்
ஆணி அடித்து அமர்ந்து கொண்டாய்.

பி.சிவகுமார்.
நுவரெலியா.

ஆரம்பம் முதல் இறுதி வரையான அம்சங்கள் யாவும் சுப்பர் குட். தித்திக்கவும் வேண்டும் திகட்டாமலும் இருக்கவேண்டும்.

எஸ்.செல்வகுமார்
கண்டி.

தினமுரசு தனித்தமிழ் முரசு.
நம் இனமுரசு கலைத் தமிழ் முரசு
தித்திக்கும் தேன்தமிழால் என்றென்றும்
திக்கெட்டும் கொட்டட்டும் புகழ் முரசு

ஜெயந்தி மனோகரன்
இராஜகிரிய.

உன்வரவு நல்வரவாகட்டும்
ஆரம்பமே அமர்க்களம்.
நீ முன்னெடுத்து நடத்த இப்போதே முகவுரை போட்டிருக்கும்
ஆக்கங்களுக்கு நன்றி.

வே.ராஜன்
கலகஹா

தமிழக சஞ்சிகையோ என்று வெளிவந்திருக்கும் வண்ணமலர் தினமுரசு. ஈழத்துச் சஞ்சிகையுலகில் ஒரு விடிவெள்ளி.


எஸ்.எம். அன்சார்
கொழும்பு -12.

உண்மைச் செய்திகளைப் பிரசுரம் செய்வதன் மூலம் தினமுரசு வாரமலர் தலைதுக்கி நிலைத்து நிற்க நிற்க நிச்சயம் இடமுண்டு.

ச.கிரஹரி
நாவலப்பிட்டி.

## இறக்குமதிச் சிரிப்பு





## யாழ் குடாநாட்டில் அதிர்ச்சி - ஐம்பது வீதமான மக்களின் மனநிலை பாதிப்பு

# நோர்வே வைத்திய நிபுணரின் அதிர்ச்சி தரும் கணிப்பு

**யா**ழ் குடாநாட்டில் யுத்த சூழ்நிலையின் நிமித்தமாக மனநிலை பாதிக்கப்பட்டு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள சூழ்நிலையின் காரணமாக மனநிலை பாதிப்படைந்தவர்களுக்குப் போதிய சிகிச்சை வழங்க முடியாமல் இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டர் நிறுவனங்கள் நோர்வேயிலுள்ள வைத்திய நிபுணர் ஒருவரைக் கடந்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்தன.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நோர்வே வைத்திய நிபுணர் அங்கு மனநிலை பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தினார். அதனை அடுத்து அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதிர்ச்சி தருகின்றனவையாக இருக்கின்றன.

யாழ் குடா நாட்டில் ஏறக்குறைய ஐம்பது வீதமான மக்களின் மனநிலை பாதிப்படைந்துள்ளதென்று அவர் கூறியுள்ளார்.

இன்று உள்ளதைப் போன்ற யுத்த சூழ்நிலை மேலும் சில காலத்திற்கு நீடிக்குமேயானால் யாழ்குடாநாட்டு மக்களின் மனநிலை வெகு வேகமாகப் பாதிப்படையும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## பொறியியலாளர் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 27ம் திகதி பொறியியலாளர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள மட்டுவில் என்னும் இடத்தில் அப்பயங்கரம் நிகழ்ந்துள்ளது. தனிப்பட்ட தகராறே கொலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் பொலிஸ் பிரிவு போன்ற ஒரு அமைப்பை நடத்தி வருவது தெரிந்ததே. அந்த அமைப்பிற்கு முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான நடேசன் என்பவர் பொறுப்பாக இருந்து வருகிறார். அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மரணத்தின் பிடியில் மழலைகள்

# போசாக்கின்மையே பிரதான காரணம்

வடபகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொண்டர் நிறுவனம் ஒன்றின் ஆய்வின்படி நெஞ்சை உலுக்கும் உண்மை ஒன்று வெளியாகி இருக்கிறது.

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் போசாக்கின்மை காரணமான விளைவுகளால் சாவின் விளிம்பில் இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் ஏற்கனவே சில குழந்தைகள் பலியாகியும் இருக்கின்றன.

வடபகுதிக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் குழந்தைகளுக்கான பால்மா வகைகளையும் ஒழுங்காக அனுப்பி வருவதாக அரசாங்கம் கூறுகிறது.

மக்களுக்குச் சேர வேண்டிய உணவுப் பொருட்களை புலிகள்தான் அபகரித்துக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை எடுத்துக் கொள்வதன் மூலம் சாதாரண மக்களைப் பட்டினி போடுகிறார்கள். இப்படியும் ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. ஏனைய தமிழர் அமைப்பினரே அந்தக் குற்றச்சாட்டைக் கூறுகின்றனர்.

அரசாங்கத்தால் வடக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்கள் பழுதடைந்த நிலையில் வந்தடைகின்றன என்று புலிகள் கூறுகிறார்கள்.

வடக்கிற்கு அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்களில் ஒரு பகுதியைப் புலிகள் எடுத்துக் கொள்கிறார்கள் என்பது யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரை பரகசியமான விடயம்.

ஆயினும் வடக்கிற்கு அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்கள் உரிய நேரத்தில் உரிய முறையில் அங்கே போய்ச் சேருகின்றனவா? வடக்கே புலிகள் ஒரு பகுதி உணவுப் பொருட்களை எடுத்துக் கொள்வது போல் தேற்கேயும் ஏதாவது குளறுபடிகள் நடக்கின்றனவா என்பது அரசாங்கம் கூர்ந்து கவனிக்க வேண்டிய விசயமாகும்.

முன்னர் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் திரு.பிரட்மன் வீரக்கோன் கேள்வி ஒன்றிற்குப் பதில் சொல்லும் போது உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பதில் எதாவது மோசடி நடைபெற்றதா என்று விசாரிக்கப்படும் என்று கூறி இருந்தமை குறிப்பிடத்தக்கது.


வடக்கில் நாளைய சந்ததியை சாவின் வாசலில் நிறுத்தி வைத்துள்ள போசாக்கின்மைப் பிரச்சினையானது மாபெரும் மனிதாபிமானப் பிரச்சனையாகும்.

## கொலையாளியை இனங்காண தமிழ் அமைப்புக்களின் உதவி கோரப்படுகிறது

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் படுகொலைக்குக் காரணமான கொலையாளி யார் என்பதைக் கண்டறிந்துள்ள இரகசியப் பொலிசார் மேலும் விபரங்களைக் கண்டறியவும், கொலையாளியோடு தொடர்புடையவர்களைக் கண்டறிவதிலும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

யாழப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் வீரக்குமார் என்ற பெயருடைய தற்கொலைக் கொலையாளியின் மேலதிக விபரங்களை அறியும் வகையில் தமிழர் அமைப்புக்களின் உதவியும் நாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதி கொலை குறித்தும் அந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் யார் என்பது குறித்தும் தமிழர் அமைப்புக்களின் கருத்தும் அறியப் பட்டு வருகிறது.



தற்கொலைக் கொலையாளி

## ஒலி பெருக்கிகள் பாவிக்க புலிகளிடம் அனுமதி பெற வேண்டும்

யாழ் குடா நாட்டில் இம்மாத ஆரம்பத்திலிருந்து பொதுமக்கள் ஒலி பெருக்கிகளைப் பாவிப்பதற்குத் தம்மிடம் அனுமதி பெறவேண்டும் என்று புலிகள் அறிவித்துள்ளார்கள்.

அவ்வாறு அனுமதி பெறாமல் ஒலிபெருக்கிகளைப் பாவிப்போர் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கிகளைப் பாவிக்க அனுமதிப் பத்திரம் வேண்டுமானால் புலிகளிடம் அதற்குப் பணம் செலுத்த வேண்டும்.

# எங்கே மாத்தையா?

# தமிழர் அமைப்புக்கள் கூறுவது சரிதானா?

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவரான மாத்தையா தொடர்பான எவ்வகையான செய்திகளையும் தற்போது யாழ்ப்பாணத்தில் அறிய முடியவில்லை.

புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் மாத்தையாவிற்குமிடையே முரண்பாடுகள் காணப்படுவதாகவும், அந்த முரண்பாடுகளின் நிமித்தமாக மாத்தையா யாழ்ப்பாணத்திலுள்ள சிறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்றும் தமிழர் அமைப்புக்கள் சில கூறி வருகின்றன.

முன்னரும் இவ்வாறான கூற்றுக்களைச் சில தமிழர் அமைப்புக்கள் பெரும் பிரச்சாரமாகவே மேற்கொண்டன.

இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் இருந்தபோது பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் இடையே வன்னிக் காட்டில் மிகப் பெரிய மோதல் வெடித்ததாக வதந்திகள் பரப்பப் பட்டன. அன்றைய வதந்திகள் தான் உயிரோடு தான் இருக்கிறேனா என்று பிரபாகரனே தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொள்ளும் அளவிற்கு வேகமாகப் பரவி இருந்தன.

அதற்குப் பின் வந்த ஆண்டுகளில் பிரபாகரனும் மாத்தையாவும் ஒன்றாக இணைந்து புகைப்படங்கள் வெளியிட்டதோடு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றிலும் இணைந்து தோன்றினார்கள்.

தற்போது பிரபா-மாத்தையா மோதல் என்று தமிழர் அமைப்புக்கள் சில கூறிக் கொண்டிருப்பதும் அவ்வாறானது தானோ என்ற சந்தேகம் எழாமல் இல்லை.

ஆயினும் முன்னர் போல் அல்லாது மாத்தையா பற்றிய சந்தேகங்களுக்கு நீண்டகால மௌனம் ஒன்றை புலிகள் கடைப்பிடித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் செல்லுகின்ற பத்திரிகையாளர்களையும் மாத்தையா விடயம் சம்மந்தமான கேள்விகளை எழுப்புவதற்கு விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் இடம் கொடுப்பதில்லை.

வடக்கில் உள்ள மக்கள் மத்தியில் மாத்தையா உயிரோடு இல்லை என்பது போன்ற அபிப்பிராயமே மேலோங்கி இருக்கிறது.

மக்கள் மத்தியில் தோன்றுவதற்கு அஞ்சுகின்றவர் என்று ஏனைய அமைப்புக்களால் கடுமையாகக் குற்றஞ்சாட்டப் பட்ட நிலையில் அதனைப் பொய்யாக்குவதற்காகப் பிரபாகரன் வெளியே வரவேண்டி இருந்தது.

அவ்வாறான நிலையில் தனக்கு அடுத்ததாகக் கருதப்பட்ட தலைவர் ஒருவர் தன்னால் கொலை செய்யப்பட்டார் என்ற குற்றச்சாட்டை பிரபாகரன் விரும்புவார் என்று கருத முடியாது.

மேலும் மாத்தையாவை மறைத்து வைத்திருக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் கருத முடியாது.

மோதல்கள் நடைபெறும் போது மாத்தையா காயமடைந்திருந்தால் கூட அதனை மறைப்பதைவிட வெளிப்படுத்துவதே புலிகளுக்குச் சாதகமாக இருக்கும். களத்தில் நின்று தமது இயக்கத்தலைவர்கள் போராடுவதாக வெளிப்படுத்துவதன் மூலம் மக்களின் அனுதாபத்திலனச் சேகரித்திருக்க முடியும். ப்ரச்சார யுக்திகளில் கைதேர்ந்த புலிகளுக்கு அது ஒன்றும் தெரியாத விடயமல்ல.

ஆகவே முன் எழுந்த வதந்திகளைப் போல் அல்லாமல் மாத்தையாவிற்கு ஏதாவது நடந்திருக்கக் கூடும் என்கின்ற சந்தேகம் பலமாக வேரூன்றி இருக்கிறது.

எங்கே மாத்தையா? இக்கேள்விக்கு பிரபாகரன் மட்டும் தான் பதில் சொல்ல முடியும்.



## மீண்டும் வருமா இந்திய இராணுவம்?

இந்திய இராணுவத்தை மீண்டும் இலங்கைக்கு வரவழைத்து புலிகளுக்கெதிரான போரில் பயன்படுத்த வேண்டுமென்று கொழும்பிலுள்ள முக்கிய பிரமுகர்கள் சிலர் அரசாங்கத்தை வலியுறுத்தியதாகச் சில செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

அவ்வாறு வெளியான செய்திகள் வெறுமனே ஊகங்களை அடிப்படையாகக் கொண்டவை என்றும் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வெளிநாட்டு இராணுவங்களின் உதவி எதனையும் அரசாங்கம் நாடாது என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர்கள் அச்சம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இரவு நேரங்களில் புலிகள் வந்து போவது வழக்கமாக இருக்கிறது.

புலிகளின் தாக்குதலொன்று மேற்கொள்ளப்படலாம் என்று கருதிப் பாதுகாப்புப் படையினர் உஷார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையே தமிழர் இயக்கங்கள் சிலவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் முன்விரோதங்களை மேற்கொள்வதாகப் பரவலான ஒரு குறை மட்டக்களப்பு மக்களிடையே இருக்கிறது.

பாதுகாப்புப் பிரிவினர் மீதான அதிருப்தியை விடத் தமிழர் இயக்கங்கள் சிலவற்றின் மீது சற்றுக் கூடுதலான அதிருப்தி காணப்படுகிறது.

மட்டக்களப்பிலுள்ள தமிழர் இயக்கங்கள் சிலவற்றின் முக்கியஸ்தர்கள் சிலரோடு தொடர்பு கொண்டபோது புலிகளின் ஆதரவாளர்களே அப்படியான வதந்திகளைப் பரப்புகிறார்கள் என்று கூறுகின்றனர். சில தவறுகள் நேர்ந்திருக்கின்றன. அதற்காக எல்லாமே தவறு என்று எப்படிக் கூறுவது என்பதே அவர்களது வாதம்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர்கள் மத்தியில் அச்சம் காணப்படுகிறது. கிழக்கில் முன்னர் கைதானவர்கள் குறித்து இதுவரை விபரங்கள் அறியப் படாத நிலையில் கைதுகள் குறித்து அவர்கள் அச்சம் கொண்டுள்ளார்கள்.

"குற்றமில்லாதவர்கள் அச்சப் படத் தேவையில்லை. பயங்கரவாதம் நிலவும் வரை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியமானவையே. குற்றமற்றவர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள். விசாரணைகளை விரைவாக்கி சந்தேகம் இல்லாதவர்களை விடுதலை செய்வதில் அக்கறை காட்டுகிறோம்" என்று கிழக்கின் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நம்ம ஊரு.. நல்ல ஊரு..




**ரத்தி**

"எட நாச மறுப்பான் வருஷப் பிறப்புமா அதுவுமாய் இழவைப் பற்றியே எழுகிறது?"

பெரியவர், பெரியவர், கொஞ்சம் பொறுங்கோ. உங்கட ஆத்திரம் நல்லாய் விளங்குது. நல்ல நாட்களில நல்லதையே பேசி நல்லதையே செய்யச் சொல்லித் தான் நாங்கள் படிச்ச ஸ்கூலிலயையும் படிப்பிச்சவை. ஆனால் நல்லதையே எழுதச் சொல்லி மிஸிஸ் முருகேசு (தமிழ், சமயம், சமூகக்கல்வி, சுகாதாரம் எல் லாத்துக்கும் உவதான் டீச்சர். நல்ல காலம் பி.டி.யுக்கு மட்டும் வேற வாத்தியைப்போட்டிட்டினம்) சொல்லித்தர மறந்திட்டா போலக் கிடக்கு. அது தான் எனக்கு இந்தக் குணம்.


இதில பாருங்கோ பெரியவர், இந்த சாகிற வர ரிக்வெஸ்டுக்கு காரணமே நாங்கள் வாழுற இந்த நாடுதான். இப்ப சாம்பிளுக்கு போன கிழமையான் ஸ்ரீஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்ரீமுக வருஷப் பிறப்பையே எடுத்துப் பார்ப்பம். ஒரு செவ்வாய்க் கிழமை வந்தது.

இதுக்குள்ள பகிடி என்னெண்டால் செவ்வாயும், புதனும் அட்டமி, நவமி. அதனால கோயிலுக்கு வராதியள். நவமி கழிய சனி, ஞாயிற்றுக்கிழமை ஆறுதலாய் வாங்கோ எண்டு பத்திரிகையில மகா கனம் பொருந்திய எங்கட குருக்கள் அறிக்கை விடுயினம். காரணம்தான் ஏனெண்டு விளங்கயில்லை பெரியவர்!

சாமியிட்ட போறத்துக்கு ஏனப்பா அட்டமியும் நவமியும்? நான் கேக்கயில்லை. என்னுடைய தர்ம பத்தினி கேட்கிறாள். குருக்களே! பிளீஸ்-பதில் சொல்லுங்கள்.

ஏன் இந்த வீக்- என்ட் பண்டிகை கோலம் எங்கள் கனடிய தமிழ் சமூகத்தை பிடிச்சுக் கொண்டுது? எல்லாரும் பிஸி,பிஸி எண்டு உழைப்பிலேயே கண்ணாய்த் திரியிறமோ? (வெல்பெயார் காரார் மன்னிக்கவும்) இல்லாட்டில் கட்டுநாயக்காவில் கையைக் காட்டிவிட்டு வெளிக்கிட்டதோட கலாசாரம் கை கழுவிப் போச்சுதோ?

ஆனால் தவறு என்னையும் உங்களையும் போல சாதாரண ஆட்களில இல்லை பெரியவர். எங்கட சமயத்திலதான் இருக்குதெண்டு நான் நினைக்கிறன். முந்திய காலத்திலயிருந்து தமிழ்ச் சமூகத்தின்ற கலாசாரத்துக்கு சமயம் தான் ஒரு பக்கபலமாய் இருந்து வந்திருக்குது.




கோயில்கள்தான் கலாசாரத்தின் முக்கியத்துவத்தை சமயம் மூலம் பொது மக்களுக்கு சொல்லித் தந்தவை. ஆனால் ஐம்பதாயிரம் தமிழர் வாழ்கிறார்கள் என்று சொல்லுகிற எங்கட கிரேட் டொரோன் டோவில் இருக்கிற மூன்று சைவ சமயக் கோயில்களிலையும் எத்தனை கோயில்கள் சமயத்தையும் கலாசாரத்தின் முக்கியத்துவத்தையும் கனடியன் கல்ச்சரில ஒன்றிடத் துடிக்கும் எங்கட இளைய தலைமுறைக்கும், அதே வழியைப் பின்பற்றி வளர்ந்து கொண்டிருக்கிற டமில் பிள்ளையளுக்கும் ஒரு அறிவுரையா, பாடமாய் சொல்லித் தர முன்வந்திருக்கினம்? கோயில் கட்டிவிட்டால் போதுமா? வருஷத்துக்கு வருஷம் விழா எடுத்து வடம் இழுத்தால் போதுமா? விழாவின் அர்த்தம் எமக்கு விளங்க வேண்டாமா? வீக்டேயோ, வீக்- என்டோ -பண்டிகைதான் என்று சொல்லித்தர வேண்டாமா? இதையெல்லாம் சாதாரணமான நானும் நீங்களும் செய்ய முடியாது பெரியவர். எங்கட கோயில் நிர்வாகங்கள் செய்ய முன்வரேவண்டும். நல்லவற்றை நினைந்து விழாக்கொண்டாடுவதை விட அதை ஏன் கொண்டாடுகிறோம் என்று நாலு பேருக்கு சொல்லித் தருவது தான் சமயத்தின் நோக்கம்.

பண்டிகை மட்டும் தான் இப்படி எண்டால் மனுசருக்கு சுகமில்லாமல் வந்து படுத்த படுக்கையாய் இருந்தால் கூட சனி, ஞாயிறில அடிச்சுத்தான், மச்சான் உயிரோட இருக்கிறியோ எண்டு கேக்குறாங்க. தற்செயலா மண்டையைப் போட்டுவிட்டால் சனிக்கிழமை எடுத்தால் தான் கடைசி அஞ்சலிக்கும் சனம் வரும் போலக் கிடக்குது. தாயே! செத்தாலும் கனடாவில் சனிக்கிழமை சாக வரம் வேண்டும்.

நன்றி- கனடா ஈழநாடு

# கண்டியில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் அங்கலாய்ப்பு
## மகா வித்தியாலயம் கட்ட மத அமைப்பு தடை?

**(கண்டி நிருபர்-ஐ.ஏ.ரஸாக்)**

கண்டி நகரில் தமிழ்-முஸ்லிம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகத் தரமான மத்திய மகாவித்தியாலயம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதில் அடிக்கடி இடம்பெறுகின்ற சர்ச்சைகள் இன்னும் தீர்ந்த பாடில்லை.

தமிழ் முஸ்லிம் மாணவர்களுக்கு தனித்தனியான மத்திய மகாவித்தியாலயங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று கண்டியிலுள்ள தமிழ் பேசும் மக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

அரசியல்வாதிகளையும் மற்றும் பொது நல அமைப்புக்களையும் சந்தித்துத் தமது கோரிக்கையை அவர்கள் வலியுறுத்தியும் இருக்கின்றனர்.

அமைச்சர் திரு.எஸ். தொண்டமானை கண்டி இந்து வாலிபர் சங்கமும் கண்டியிலுள்ள ஏனைய இந்து அமைப்புக்களும் சில வருடங்களுக்கு முன்னர் சந்தித்துப் பேசினார்கள். மத்திய மகாவித்தியாலயம் ஒன்றை உருவாக்கும் தமது கோரிக்கையை எடுத்துக் கூறினார்கள்.

அமைச்சர் அது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு சிலர் முட்டுக்கட்டைகள் போடுவதாகக் கண்டியிலுள்ள தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். கண்டி வாழ் தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மகாவித்தியாலயம் ஒன்று கூட இற்றை வரை ஏற்படுத்தப் படாதது குறித்தும் அதிருப்தி நிலவுகிறது.

இதே போன்ற ஒரு நிலை தான் முஸ்லிம் மாணவர்களுக்கும் ஏற்பட்டுள்ளது. கண்டி நகரில் முஸ்லிம் ஆண் மாணவர்களுக்காக தரமான பாடசாலை ஒன்றை உருவாக்கித் தருமாறு கண்டி முஸ்லிம்கள் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் அதற்குரிய இடமும் தெரிவு செய்யப்பட்டது. ஆனால் பௌத்த மத அமைப்புக்கள் சிலவற்றின் தலையீட்டால் அந்த முயற்சிகை கூடவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே கண்டி நகர வர்த்தகப்பிரமுகர்கள் அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத்தை மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள். அதன் பலனாக கண்டி கட்டுகஸ்தோட்டை வீதியில் மாபணாவத்துர என்னும் இடத்தில் நிலம் பெறப்பட்டது. நிர்மாணிப்பு வேலைகளும் தொடங்கப்பட்டன. அனால் பௌத்த மத அமைப்புக்கள் சில அதற்குத் தற்போது எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

## நெத்தியடி

மூதூர் படகு விபத்துக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்பட்டிருந்ததே காரணம்.

*-சில்வா கமிஷன் அறிக்கை.*

***அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்று படகோட்ட ஆசைப்பட்டதும் பிரதான காரணம் தானே.***

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் சாத்தியம் பற்றி ஆராயுமாறு அமைச்சர் சவான் சொன்னார்.

*-தமிழக முதலவர் ஜெயலலிதா.*

***அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்? அதையும் சொன்னால் நன்றாக இருக்குமே. அதுசரி அம்மணி, தேன்நிலவின் போது பேசிக் கொண்டதை இப்போது உடைக்கிறீர்களாக்கும்.***

சமாதான நல்லெண்ண முயற்சியில் வெளிநாட்டு ஆயர்குழு ஈடுபடும்.

*-செய்தி*

***பத்திரிகைகளுக்குத் தீனியான செய்திதான். இந்த முயற்சியும் போன மச்சான் திரும்பி வந்த கதையாக இல்லாவிட்டால் சரிதான்.***

பொலன்னறுவை- மட்டு எல்லைப்பகுதியில் பாதுகாப்பு மீண்டும் வலுப்படுத்தப்படுகிறது.

*-செய்தி.*

***யார் உங்களை தளர்த்தச் சொன்னது?***

வுவனியாவில் கொல்லப்பட்ட அனைவரும் புளொட் இயக்கத்தினர்.

*-யாழில் -புலிகளின் குரல்*

***புளொட் இயக்கத்தினர் யாழில் இருந்து வர நீங்கள் எப்படி பாஸ் கொடுத்தீர்கள்?***

4 பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை.

*-செய்தி.*

***வேலியே பயிரை மேய்ந்தால் நிலை என்னவாகும்? தலைகீழாய்த்தானே இருக்கும். நடவடிக்கை அவசியம்தான்.குட்.***

ஐ.தே.க.வுடன் மோதலில் ஈடுபட மாட்டேன்

*-மேல்மாகாண முதல்வர் சந்திரிகா.*

***பத்திரிகைகளுக்கு சுவையான செய்திகள் இல்லாமல் போனால் எப்படி ஃப்ளீஸ் ஃபைட். பத்திகையாளர்கள் பேனாக்களோடு காத்திருக்கிறார்கள்.***

புலிகளின் சிறையில் சிங்களப் பொலிசார் சாகும் வரை உண்ணாவிரதம்.

*-செய்தி*

***சரி. தமிழ் பொலிசார்? அவர்கள் உண்ணாவிரதமிருந்தால் புலிகள் அவர்களை உண்ணும் விரதத்தை ஆரம்பித்து விடுவார்களோ?***

கொழும்பு ஆஸ்பத்திரியில் பத்திரிகையாளர் மீது தாக்குதல். பணிப்பாளர் மன்னிப்பு கோருகிறார்.

*-செய்தி*

***பத்திரிகையாளர் என்றால் தட்டிப்பார்க்கும் துணிச்சலாக்கும். திருப்பிப் போட்டால் தெரியும் போடு.***

கைதாகும் மலையக இளைஞர்களை இம்சிக்க வேண்டாம்.

*-சென்னன் எம்.பீ*

***உள்ளே வைத்திருக்கலாமோ? கூடாது எனில் கட்சிப் பலத்தை பயன்படுத்தி முனையலாம். முனைக!***

வடக்கு-கிழக்கில் சர்வோதய நடவடிக்கைகள் நிறுத்தம்

*-செய்தி-*

***அப்படியானால் அப்பகுதிகளின் பெயரால் வெளியுலகில் வாங்கப்பட்ட பணம்?***

## புகார் பெட்டி

### தொலைக்காட்சித் தமிழ் பிரிவு தூங்கிக் கொண்டிருக்கிறதா?

நமது நாட்டின் அரசாங்கத் தொலைக்காட்சியாம் ரூபவாஹினியில் உள்ளூர் கலைஞர்களின் தரமான ஆக்கங்களைத் தரிசித்து நீண்டகாலமாகிறது. தரமான தமிழ்க் கலைஞர்கள் நமது நாட்டில் இருந்தும் கூட தரம் வாய்ந்த நாடகங்கள் மற்றும் பல்சுவை அம்சங்களை வழங்க முடியாமைக்குக் காரணமென்ன? சிலநேரங்களில் நாளைய நிகழ்ச்சி நிரல் என்று போட்டு விட்டு அன்றைய நிகழ்ச்சி நிரல் காண்பிக்கப்படுவதும் உண்டு. தமிழ்ச் செய்தி வாசிப்பின் போதும் தவறான உச்சரிப்புக்கள், செய்தியை ஒட்டிக்காண்பிக்கப்படும் வரைபடங்களில் தவறுகள் என்பன நிகழ்வதும் உண்டு. சம்மந்தப்பட்டவர்கள் கவனித்துச் சீர் செய்வது நன்று.

**தகவல்: ஆர். தர்ஷனி பண்டாரவளை**

**புகார் பெட்டியில் இடம்பெறும் கருத்துக்கள் இருந்தால் எழுதி அனுப்பலாம். (ஆதாரத்தோடு)**

### விடை சொல்லத் தாமதம் ஏன்? மலையக மாணவர்கள் வினாக்கணை

பத்தனை சிறீபாத கல்விக் கல்லூரியில் 1993ம் ஆண்டு புதிய மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கடந்த பெப்ரவரி மாதம் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. அதன் முடிவுகள் என்னவாயிற்று?

இப்படிக் கேட்கிறார்கள் மலையக தமிழ் பேசும் மாணவர்களும் பெற்றோர்களும்.

கணித, விஞ்ஞான ஆரம்ப மூன்றாண்டு காலப் பயிற்சிக்காக க.பொ.த.உயர்தரம், க.பொ.த. சாதாரணதரம் ஆகிய தகமைகளைக் கொண்ட மலையக மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. நேர்முகப் பரீட்சையும் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைபெற்று முடிந்தன.

இந்நிலையில் தமது நேர்முகப் பரீட்சை முடிவுகளை எதிர் பார்த்து நிற்கும் மாணவர்கள் வேறு தொழிற்துறைகளில் ஈடுபடவோ அல்லது உயர்கல்வியைத் தொடரவோ முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நேர்முகப் பரீட்சை முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏனென்று மாணவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதே வேளையில் தற்சமயம் அங்கு பயிலும் மாணவர்களுக்கு உரிய விரிவுரைகளும் சீராகக் கிடைப்பதில்லையாம்.

**தகவல்: ஐ.ஏ.ரஸாக் கண்டி.**


### சொன்ன சொல்லை மறந்திடலாமோ?

நாங்கள் வசிக்கும் ஹிகியான கந்த தோட்டம் முன்னர் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்தது. பின்னர் தனியார் துறைக்கு பாரம் கொடுக்கப் பட்டது. பல சலுகைகளை வழங்குவதாக அறிவித்தபோதும் தனியார் துறையினர் இதுவரை எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. எமது குடியிருப்புக்கள் பழைய நிலமையில் தான் இருக்கின்றன.

**தகவல்: எம்.பரமேஸ்வரன் நோபொட**



## அலசுவது – இராஜதந்திரி



# பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வருவாரா?
# மரணத்துள் வாழும் மக்களுக்கு விடிவினைத் தருவாரா?

இலங்கையில் மிக முக்கிய விவகாரமாக இருக்கும் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு ஒரு முடிவை எவ்வாறு கொண்டுவர முடியும்? என்பதே அனைவரையும் இன்று உறுத்திக் கொண்டிருக்கும் ஒரு முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

அரசியலாளர்கள், ஆட்சியிலிருப்போரை விட, வடக்கு-கிழக்கில் வாழுகின்ற பொதுமக்களே "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?" என்ற ஏக்கத்துடன் தமது உயிரைக் கையில் பிடித்தவர்களாக ஒரு விடிவை நோக்கிப் பிரார்த்தித்த வண்ணமிருக்கின்றனர்.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இந்த கொடிய உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக உயிர்-உடைமைகளை இழந்து பரிதவிப்போர் பல்லாயிரமாகப் பல்கிப் பெருகியுள்ளனர்.

தீர்வு முயற்சிகள் என்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளெல்லாம் வெறும் கண்துடைப்பாகவே மாறிவிட்ட நிலையில், மக்களின் துயரமே கண்ணீரும், கம்பலையுமாக எஞ்சியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

புதிய ஜனாதிபதி திரு. டி.பி.விஜேதுங்க இலங்கையின் வடக்கு-கிழக்கு விவகாரம் விரைந்து தீர்க்கப்பட வேண்டிய தன் அவசியத்தை இதய சுத்தியாக நன்குணர்ந்தவர் போன்றே காணப்படுகின்றார்.

## வேங்கைக்கும்-வேடனுக்கும் நடுவே- புள்ளிமான் போல தமிழ் இனம்



கடந்த மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்றது முதல் தாம் கலந்து கொள்ளும் வைபவங்களில் வடக்கு-கிழக்கப் பிரச்சினை குறித்துப் பிரஸ்தாபிக்கும் போதெல்லாம், அப்பிரச்சினையை விரைவில் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை தமக்குண்டு என்றே கூறிவருகின்றார்.

அண்மையில் தம்மைச் சந்தித்த இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், மற்றும் ராஜதந்திரிகளிடமும் ஜனாதிபதி விஜேதுங்க, வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் விரைவுபடுத்தப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

எனவே இலங்கையில் அனைத்துத் தரப்பினரும், வடக்கு-கிழக்கு நிலவரம் எத்துணை அபாயகரமானதும், சிக்கலானதும் என்பதை நன்கு உணர்ந்துள்ளனர்.

அனால் அப்பிரச்சினையை எவ்வாறு? எப்படி தீர்த்து வைக்கலாம் என்பது குறித்தே திக்குத் திசை தெரியாதவர்களாக ஆட்சியிலிருப்போர் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் இதய சுத்தியுடன், அரசியல் லாபம் கருதாத நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமே தினமும் உயிர்ப் பலி எடுத்துவரும் வடக்கு-கிழக்கு விவகாரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரமுடியும்.

அமைச்சர் எஸ்.தொண்டமான் கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் வடக்கு-கிழக்கு விவகாரம் தொடர்பாக புலிகளுடன் பேசுவதில் ஆர்வங்காட்டியிருந்தார். ஆனால் அவருக்கு அந்த முயற்சியில் உற்சாகமளிக்கும் வகையில் தென்னிலங்கை அரசியலாளர்கள் நடந்து கொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் நேரடிப்பாதிப்புக்குள்ளாகியுள்ள அப்பிரதேச மக்கள் அமைச்சர் தொண்டாவின் முயற்சிகளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் இறுதியில் ஏமாற்றத்தையே தழுவியிருந்தனர்.

இதுதவிர சில மாதங்களுக்கு முன்னர் வடக்கிற்கு விஜயம் செய்திருந்த கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் அதிவண. கென்னத் பெர்ணான்டோ அவர்களும் புலிகளுடனான சமரசத்தில் உதவுவதில் ஆர்வங்காட்டியிருந்தார்.

ஆனால் வடக்கு நிலவரத்தின் தாக்கத்தை உணர்ந்து கொள்ள முடியாத தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் ஆயர் கென்னத் பெர்ணான்டோ மேற்கொண்ட அரசியல் சாராத அப்பளுக்கற்ற முயற்சிகளையும் ஏளனஞ் செய்திருந்தன.

ஆனால் இனி வரும் காலங்களிலும் இத்தகைய ஏளனங்களும், அர்த்தமற்ற எக்காளங்களும் எத்தகைய ஆரோக்கியமான சூழ்நிலையையும் கொண்டுவரப் போவதில்லை என்பதை ஆட்சியாளர்கள் நன்குணரவேண்டும். இதன் மூலமே வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அவர்களால் நன்கு திட்டமிட முடியுமெனக் கருதலாம்.

இதேவேளை தென்னிலங்கையின் அரசியல் சக்திகள் மட்டுமல்லாது, வடக்கில் இராணுவ ரீதியாக இயங்கிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும், அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் தமக்குள்ள கரிசனையை தகுந்த முறையில் வெளியிட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளையும், கொள்கைகளையும் தீர்மானிக்கும் அதிகாரத்தை தம்மிடமே கொண்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் தமிழர்களின் ஆயுத போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னை ஒரு இராணுவ ரீதியாக இயங்கும் அமைப்பாகவே வழிநடத்தி வந்துள்ளது.

பல்வேறு முயற்சிகள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென ஆராயப்பட்டு, பின்னர் இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்ற அடிப்படையில் முதலாவது பெரும் சமாதானத் திட்டமொன்று 1987ம் ஆண்டில் முன்வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் நிராகரித்திருந்தது. வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்வதாக அந்த ஒப்பந்தம் அமைந்திருக்கவில்லை என்று புலிகள் இயக்கத்தினர் அறிவித்ததோடு, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல் செய்ய இலங்கை வந்திருந்த இந்திய இராணுவத்தையும் புறமுதுகு காட்டச் செய்திருந்தனர்.

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மறைந்த நிலையில் ஓர் இரத்தப் பிரவாகமாகவே விரைந்து கொண்டிருக்கின்றது.


அண்மைக்காலங்களில் வடக்கே சென்று நல்லெண்ண நடவடிக்கைகளில் ஈடுபட்ட தென்னிலங்கை முக்கியஸ்தர்கள் சிலர் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே. பிரபாகரனையும் சந்தித்து உரையாடியிருந்தனர்.

இச்சந்திப்புக்களின் போதெல்லாம், வடக்கு- கிழக்குப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தமக்கிருக்கும் விருப்பத்தை திரு. பிரபாகரன் வெளியிட்டிருந்தார்.

ஆனால் சம்பிரதாயமற்ற, சாதாரண இச்சந்திப்புக்களிலேயே அவர் தமது விருப்பத்தை வெளியிட்டு வருகிறாரே தவிர, தாம் எதிர்பார்க்கும் ஒரு தீர்வை ஆணித்தரமாக அரசியல் களத்தில் முன்வைப்பதில் அக்கறையற்றவராகவே திரு. பிரபாகரன் காணப்படுகின்றார்.

எனவே திரு. பிரபாகரன் வடக்கு-கிழக்குப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் உண்மையிலேயே விருப்புடையவராகவும், அப்பிரதேச மக்களின் பாதுகாப்பான வாழ்க்கையில் அக்கறையுடையவராகவுமிருந்தால், அவர் தாமாகவே முன்வந்து தமது தீர்வு யோசனையை கால தாமதமின்றி முன்வைக்க வேண்டும்.

ஏனெனில் தெற்கிலுள்ளவர்கள் திரு. பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதையே பெரிதும் விரும்புகின்றனர்.



யாழ். மாவட்ட நீதி மன்று

### சட்டமும்-ஒழுங்கும் வடக்கே சீர்குலைந்துபோனமைக்குச் சான்றாக இடிந்து போன யாழ் நீதிமன்று

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தலைமையிலான அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது. இப்பேச்சுக்கள் மூலமாகவேனும் வடக்கு கிழக்கில் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படாதா என்று ஏங்கிய வேளை, மீண்டும் புலிகளுக்கும், அரசுக்குமிடையே மோதல்கள் வெடித்தன.

தற்போது இம்மோதல் பல பரிமாணங்களையும் பெற்று, பல்வேறு தரத்தில் பல்வேறு உயிர்களையும் பலியெடுத்த திரு. பிரபாகரன் தம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய நடுநிலையாளர்கள் இலங்கையில் காணப்படாதவிடத்து தமக்கு விரும்பிய வெளிநாடொன்றின், அல்லது சர்வதேச ஸ்தாபனமொன்றின் உதவியுடனாவது தமது தீர்வு முயற்சிகளை ஆரம்பிக்க முன்வர வேண்டும்.

தென்னிலங்கையில் இனப்பிரச்சினை தீர்வு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், ஆரோக்கியமானவையாகக் காணப்படவில்லை. இந்நிலையில் வடக்கேயிருந்து திரு. பிரபாகரன் அரசியல் ரீதியாக தமது முயற்சிகளை முடுக்கிவிட முன்வர வேண்டும்.

இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளிலும், செயல் திட்டங்களிலும் காண்பிக்கும் தீவிரத்தையும், சிரத்தையையும், அரசியல் ரீதியாகவும் வெளிப்படுத்த திரு.பிரபாகரன் முன்வர வேண்டும்.

இல்லையேல் மரணத்துடன் வாழுவதே வடக்கு- கிழக்கு மக்களின் நியதியாக அமைந்துவிடும்.

அண்மையில் வுவனியாப் பகுதியில் இடம்பெற்ற அனர்த்தம், பொதுமக்கள், அதாவது தமிழ்ப்பேசும் மக்கள் எவ்வளவு தூரம் ஒரு வாழ்க்கைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனைத் தெளிவாகப் புலப்படுத்தியிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் வடக்கேயிருந்து வவுனியா நோக்கிவந்த பொதுமக்களில் அநேகர் நடுவே அகப்பட்டு பரிதாபகரமான முறையில் உயிரிழந்தனர்.

இது தவிர வடக்கே குடாநாட்டைச் சென்றடைவதற்கு மேற்கொள்ளும் கிளாலியூடான கடல் வழிப்பயணத்திலும் அடிக்கொருதடவை அப்பாவிப் பொதுமக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் குடாநாட்டிலும் போதியளவு உணவு, மற்றும் மருத்துவ வசதிகளின்றி, ஆயிரக்கணக்கான மக்கள் மரணத்தின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

எனவே வடக்கே வாழும் தமிழினத்தின் நிலை, வேங்கைக்கும், வேடனுக்கும் நடுவே அகப்பட்ட புள்ளிமானின் பரிதாப நிலையையொத்ததாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் தனது பக்கமே நியாயமுண்டென திரு. பிரபாகரன் கருதியிருந்தால், அந்த நியாயத்தை அவர் அரசியல் களத்தில் உடனடியாக வெளிப்படுத்த முன்வர வேண்டும்.

இல்லையேல் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்ப் பேசும் மக்கள் எதிர்நோக்கும் அநியாயங்களுக்கு துணைபோனவராகவே திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனும் வரவாற்றில் இடம் பிடிப்பார்.



# ஜெயலலிதாவின் நாற்காலி ஆட்டம் காணுகிறது!

## ஆட்சியைக் கலைக்க காங்கிரஸ் கட்சி நாட்டம் காட்டுகிறது

தமிழ் நாட்டின் ஜான்ஸிராணி என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப் பட்டவர் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

இந்தியாவின் சுதந்திரத்திற் காகப் புயல் போல களம் புகுந்து இரத்தம் சிந்திப் போராடிய பெண் மணிதான் ஜான்ஸிராணி.

சினிமாவில் மட்டுமே வாளேந் திய ஜெயலலிதாவிற்கும் ஜான்ஸி ராணிக்கும் பெண் என்பதைத் தவிர வேறெந்த ஒற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் நாட்டில் புலிகளை ஒடுக்கியவர், ஓடவிரட்டியவர் என்ற பெருமையைக்கூறி அவரைப் புகழ்ந்தார்கள்.

அந்தப் பெருமை நிலைக்க வில்லை. இந்த வருடம் ஏப்ரல் மாதம் 29ம் திகதி இரவோடிரவாக தமது நான்கு சகாக்களை தமிழக பொலிசாரிடமிருந்து புலிகள் மீட்டுச் சென்றதோடு தமிழக ஜான்ஸிராணி பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கூடிய சாதனை தகர்ந்து போனது.

அரசியல் ரீதியாக மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரால் இந்திரா காங்கிரஸ் கட்சியோடு ஏற்படுத்தப்பட்ட உறவினைத் தமது பொறுப்பற்ற பேச்சுக்களாலும் செயல்களாலும் உடைத்து விட்ட ஜெயலலிதா இப்போது அதற்காக வருத்தப்படவேண்டிய நிலையில் இருக்கிறார்.

தமிழ் நாட்டில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி யைக் கலைப்பதற்கு இந்திய மத்திய அரசு கூறிய காரணங்கள் இப் போது ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்கவும் போதுமானவையாக இருக்கின்றன.



கறுப்புப் பூனைப் பாதுகாப்பு, சுற்றி இருப்பவர்களின் பந்தாக்கள், அளவுக்கு மீறிய ஆர்ப்பாட்ட விளம்பரங்கள் செல்வி. ஜெயலலிதாவின் செல்வாக்கை நகர்ப் புறங்களில் நசித்துப் போட்டிருக்கின்றன.

புலிகளோடு உறவு வைத்திருந் தது, புலிகளை ஒடுக்கத் தவறியது போன்ற குற்றச்சாட்டுக்களே கலைஞர் கருணாநிதியின் ஆட்சிக் குச் சுருக்குக் கயிறாக அமைந்தது. சுருக்குக் கயிற்றை மாட்டச் சொன்ன வர் ஜெயலலிதா.

அன்று ஜெயலலிதா இந்திய மத்திய அரசின் நண்பர். அப் போது பிரதமராக திரு. சந்திர சேகர் இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. ராஜீவ் காந்தியின் ஆதரவைப் பெறுவதற் காகவே ராஜீவ் ஊடாக ஜெய லலிதா விடுத்த கோரிக்கையை சந்திரசேகர் நிறைவேற்றி முடித் தார்.

இப்போது ஜெயலலிதாவின் கழுத்துக்கு மேலும் அதே சுருக்குக் கயிறு.

ஜெயலலிதாவிற்கு நெருக்க மானவர் என்று கூறப்படும் தமிழக கவர்னர் பிஷ்மநாராயண் சிங் மத்திய அரசால் இராஜினாமா செய்ய வைக்கப்பட்டதும் புதிய கவர்னர் நியமிக்கப்பட்டிருப்பதும் அந்தச் சுருக்குக் கயிறு அவரது ஆட்சியை நெருங்கிக் கொண்டி ருக்கிறது என்பதையே காட்டுகிறது.

தற்போதும் தமிழக கிராமப் புறங்களில் அமரர் எம்.ஜி.ஆரின் வாரிசாக ஜெயலலிதாவுக்குள்ள செல்வாக்கு நீடித்தாலும்கூட, ஆட்சி கலைக்கப்பட்டுத் தேர்தல் ஒன்று நடைபெறுமானால் வெற்றிக் கனி நிச்சயமாகச் செல்வியின் கரத்திற்குச் செல்லாது.

கறுப்புப்பூனைப் பாதுகாப்பு, சுற்றி இருப்பவர்களின் பந்தாக் கள், அளவுக்கு மீறிய ஆர்ப்பாட்ட விளம்பரங்கள் செல்வி. ஜெயலலி தாவின் செல்வாக்கை நகர்ப் புறங்களில் நசித்துப் போட்டி ருக்கின்றன.

அனைத்திற்கும் மேலாக சமீபத்தில் தனது இல்லத்தின் மேலாக விமானமொன்று வட்ட மிட்டது என்று அவர் கூறியது சிந்திக்கக் கூடியவர்களைச் சின மடைய வைத்துள்ளது.


இவற்றின் மத்தியில் பழுத்த அரசியல் இராஜதந்திரியான கலைஞர் கருணாநிதி மீண்டும் ஆட்சிக்கட்டில் ஏறுவதற்கு சோம்பல் முறித்து முகம் கழுவித் தயாராகிக் கொண்டிருக்கிறார்.

தோல்வியால் துவண்டு தூங்கப் போனவரை ஜெயலலிதாதான் தூக்கம் கலையச் செய்திருக்கிறார். தமிழ்நாட்டில் கலைஞர் கருணா நிதிக்கு அதிகபட்சமாக உதவி செய்வதற்கு ஜெயலலிதாவைத் தவிர வேறு ஆள் கிடையாது.

தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சி உட்பூசல்களால் அடிபட்டு இரத்தம் சிந்திக்கொண்டிருந்தது. ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் அவர்களையுயம் ஒன்று படுத்தி விட்டது. ஆட்சியைக் கலைத்து விட்டுதான் மறுவேலை பார்ப்ப தென்று இந்திரா காங்கிரஸ் கட்சி வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறது.

ஆகவே அங்கே அம்மாவின் நாற்காலி ஆடுகிறது. நஷ்டப் படாமல், கஷ்டப்படாமல் வந்து சேர்ந்த பதவியை இழக்கப் போகிறாரோ செல்வி?

## குறுக்கெழுத்துப் போட்டி இல—02



### இடமிருந்து வலம்

1. உடனடியாகப் பற்றிக் கொள்ளும்
4. இது உள்ளவன் அடிக்கடி சாகிறான். (மூன்றெழுத்து)
5. நன்றி உள்ள பிராணி திருடனைக் கண்டவுடன் இதைச் செய்யும்.
7. இதுவும் பால் தரும்.
8. கண்ணுக்கு நிறைவாக இருக்கும்போது சொல்லப் படுவது.
9. மண்ணுக்குள்ளும் இருக்கும் சமயத்தில் வயிற்றுக்குள்ளும் இருக்கும்.
10. பாப்பாக்களைக்கூட மறந்து விடாமல் பாடியவர்.
11. இதனைக்காட்டிக் குழந்தை களைச் சிரிக்க வைப்பார்கள்.

### மேலிருந்து கீழ்

1. சில தொழிற்சாலைகளில் இது நடப்பதுண்டு. இதனால் தொழிலாளர்கள் பாதிப்படை வார்கள்.
2. சிலர் சகிக்க முடியாமல் பேசும்போது அவர்களை இப்படியும் அழைப்பதுண்டு.
3. ஆதிகாலத்தில் பெரிய பிரபுக்கள் சிலர் மனிதர்களை இப்படி வைத்திருந்தார்கள்.
4. இதன் சொல்லை வைத்துச் சிலர் சகுனம் பார்ப்பார்கள்.
5. பாடசாலையில் எழுதிக் கற்பிக்க ஏதுவாக பலகையில் இதனைப் பூசுவார்கள்.
6. மேலே பறந்து பாடித்திரியும் இது.
8. இந்த மலையிலிருந்து வரும் தென்றல் சுகமானது.
12. முயற்சிகளுக்கு இதுதான் தடை (கீழிலிருந்து மேல் நோக்கி உள்ளது)

விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 19.6.93. தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகள் 25 பேருக்கு பரிசுப்பணம் 500/- ரூபா பகிர்ந்தளிக்கப்படும்.

## சூழலைப் பாதுகாக்கவும் - ஒரு 'ஹெலி' தாக்குதல்!

ஹெலிகாப்டர் என்ற வார்த்தையை 'ஹெலி' என்று சுருக்கமாகக் கூறி, அதனை ஒரு யுத்த சாதனமாகவே நம்மில் பலர் கருதுகின்றனர்.

ஏனெனில் நம்நாட்டில் 'ஹெலி' யின் உபயோகம் பெரிதும் யுத்த நோக்கம் கொண்டதாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் வடபகுதியில் ஹெலிகாப்டர் ஒன்று தாளப்பறந்து வருமானால், கருடனைக் கண்டு பாம்புகள் பொந்துகளுக்குள் சென்று நுழைவதைப் போலவே, பொதுமக்கள் பங்கர்களுக்குள் சென்று பதுங்கிக் கொள்வார்கள்.

ஆனால் மேற்கு நாடுகளில், குறிப்பாக வளர்ச்சியடைந்த தேசங்களில் ஹெலிகாப்டர்கள் மனிதர்களின் அன்றாட வாழ்வில் ஒரு முக்கிய சாதனமாக இடம்பிடித்துள்ளது.

வானுயர்ந்த கட்டிடங்களின் உச்சியில் கோடீஸ்வர வர்த்தகர்கள் போய் இறங்குவதற்கும், உல்லாசப்பயணங்கள், மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் போன்ற சிறந்த தேவைகளுக்கும் ஹெலிகாப்டர்களே பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

உலகில் சுற்றுப்புறச் சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை நன்குணர்ந்து சுவீடனில் சூழல் பாதுகாப்புக்கு மிகவும் முக்கியமளிக்கப்பட்டு வருகின்றது. தமது தேசத்தின் காடு, களனிகள், மலை மாருதம் என்பன நஞ்சாகிவிடக்கூடாது என்பதில் சுவீடன் மக்கள் விழிப்பாகவே இருக்கின்றனர்.

எனவே தமது நாட்டின் பசுமையைப் பாதுகாக்க பல்வேறு நடிவடிக்கைகளையும் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள். கைத்தொழில் நிலையங்களின் கழிவுகள் வெளியாகியதில் இரசாயனக் கலப்பு ஏற்பட்டு நன்னீர்த் தன்மையை இழந்து வந்த ஒரு விசாலமான ஏரியை இரசாயன ஆக்கிரமிப்பின் பிடியிலிருந்தும் காப்பாற்றும் நடவடிக்கையொன்று சுவீடனில் அண்மையில் இடம்பெற்றிருந்தது.

இந்த நடவடிக்கைக்கும் ஹெலிகாப்டர் ஒன்றையே சுவீடனின் சுற்றாடல் பிரியர்கள் பயன்படுத்தியிருந்தனர்.

இரசாயனக் கலப்பு ஏற்பட்ட ஏரியை சுத்தமாக்க ஹெலிகாப்டர்களிலிருந்தும் தூய்மையான வஸ்த்துக்கள் நிறைந்த மண்டலத்தை ஏரியின் நீர்ப்பரப்பின் மீது சுற்றாடல் பிரியர்கள் பிரயோகித்திருந்தனர்.

எனவே இப்பிரயோகம் மனிதகுலத்தின் பொது எதிரியாக சுற்றாடலில் நிறைந்துள்ள விஷத்தன்மையைத் தாக்கியளிக்க ஹெலிகாப்டரின் துணை கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆரோக்கியமான தாக்குதலாகவே காணப்பட்டது.



# அதிரடி ஐயாத்துரை



அதிகாரிகள் சிலருக்கு தூங்கி எழும்போது ஒரு சந்தேகமாம். காலை எழுந்தவுடன் அவசர அவசரமாகப் பத்திரிகைகளைப் புரட்டுகிறார்களாம். வேறு பதவிகளுக்கு அல்லது வேறு இடங்களுக்கு தாங்கள் தூக்கிப் போடப்பட்டிருக்கிறோமோ என்றுதான் அந்த ஆராய்ச்சி. மேலே உள்ளவர் செய்து வரும் அதிரடி மாற்றங்கள் அதிகாரிகள் வட்டாரத்தை ஒரு கலக்கு கலக்கித்தான் இருக்கு.

புலிகளின் எதிர் தரப்பிலிருந்தும் சினம் கொள்ளாமலும் அவர்களைப் பற்றி அதிகம் பேசாமல் சிக்கனமாகவும் இருந்தவர் யாரென்று ஆராய்ச்சி செய்தால் அது காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவாகத்தான் இருக்கும். அப்படியிருந்தும்......

முன்னாள் பெரியவரின் துணைவியார் இறுதிச் சடங்கில் வைத்து தனது அரசியல் எண்ணத்தைக் கோடிட்டுக் காட்டியது உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டிலும் சின்னதாக ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது. அமெரிக்க சஞ்சிகையொன்று சற்றுக் காட்டமான தலைப்புக் கொடுத்து விமர்சித்திருந்தது. அரசியல் நிலையாமைக்கு அவர் வழி தேடுகிறாராம். உள்நாட்டில் கூட சில முணுமுணுப்புக்கள் உண்டு. பச்சை வட்டாரங்களிலும் கூடத்தான்.

வெளிவிவகாரங்களுக்கு ஆலோசனை வழங்கும் சிறந்த இராஜதந்திரிக்கும் மாற்றம் வருமென்று முன்னர் சிலர் பேசிக்கொண்டார்கள். அது இப்போது பொய்த்து விட்டது. யாரோடும் வம்பு தும்புக்குப் போகாத நாகரீகத்தைக் கடைப்பிடித்ததும், கட்சி அரசியலுக்குள் தலையைப் போடாமல் இருந்ததும் அவரது நல்ல பெயரைக் காப்பாற்றி வருகிறது. வெளிவிவகார ஆலோசகர் விடயத்தில் மட்டுமல்ல வெளிநாட்டுக் கொள்கை விடயத்திலும் மாற்றமில்லை.

தினமுரசு வந்ததும் வந்தது பிரதிகளும் விற்றுத் தீர்ந்தது. பிரமித்துப்போன சிலர் தினமுரசுப் பாணியை மெல்ல மெல்ல பின்பற்றத் தொடங்குவது போல் தெரிகிறது. அதிலே வேடிக்கையான விசயம் என்னவென்றால் 'ரொம்ப கவர்ச்சியப்பா' என்று சொல்லிக்கொண்டே சிலர் கவர்ச்சியைத் தேடுவது.! எப்படியோ பழையன கழியட்டும், புதியன பூக்கட்டும்.

தேவமான அமைச்சர் தமிழ்ப்பணியில் காட்டிவரும் ஆர்வம் அளப்பரியது. சத்தம் காட்டாமல் சைலன்டாக இருக்கிறார். சீரியஸான பணிகளில் மட்டும் சித்தம் செலுத்துகிறார். அரசியலுக்கு அப்பாலும் அனைவராலும் பாராட்டப்படுகின்ற தொண்டு.

காலை எழுந்தவுடன் செய்தித்தாள் படிக்க நேரமில்லாமல் வதவதவென்று புறப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இலங்கை வானொலி கொடுத்த 'செய்தித்தாள் கண்ணோட்டம்' கை கொடுத்தது. புறப்படும் அவசரத்திலும் செய்திகளைக் கிரகிக்க முடிந்தது. அதுமட்டுமல்லாமல் கொழும்புச் செய்திகளை உடனடியாக அறிய முடியாமல் யாழ்ப்பாணம் போன்ற பல்வேறு பகுதி மக்களுக்கு அது ஒரு வரப்பிரசாதம் என்றும் சொல்லலாம். பற்றித் தட்டுப்பாட்டின் மத்தியிலும் யாழ்ப்பாண மக்கள் வானொலியில் கேட்க விரும்பும் அம்சங்களில் செய்தித்தாள் கண்ணோட்டமும் ஒன்று. இப்போது அதனை நிறுத்தி விட்டார்கள். புதிய தலைவர் இதைக் கொஞ்சம் கவனித்தால் என்ன?

வடக்கு கிழக்கு இணைப்பு விடயத்தில் தமிழக் கட்சிகள் யாவுமே ஒரே முடிவோடு இருப்பது இனப்பிரச்சினைத் தீர்விற்கு ஒரு பலமான அஸ்திவாரம் என்று வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் திருப்தி தெரிவித்தாராம்.

வெளிநாட்டுத் தூதுக்குழுவின் யாழ் விஜயத்தை இரண்டெழுத்து இயக்கம் பிரமாதமாக விளம்பரப்படுத்த எண்ணியிருக்கிறதாம். இனப்பிரச்சினை விவகாரத்திற்குத் தீர்வு காணும் எண்ணத்தை விட விளம்பர எண்ணம் மேலோங்கி இருப்பது கவலைக்குரிய விசயம் தான். இதில் இன்னொரு வேடிக்கை, தூதுக்குழு விஜயத்தை ஏற்பாடு செய்த கொழும்பிலுள்ள அமைப்பு பத்திரிகைகளுக்குச் செய்தி வெளியிட மறுத்து விட்டது. ஆனால் இரண்டெழுத்து இயக்கம் சகல விசயங்களையும் யாழப்பாணத்தில் அவுட்டாக்கி விட்டதாம்.

முன்னாள் தனித்துவமான அரசியல் தலைவரின் சமாதான முயற்சி விடயத்திலும் உப்பிடித்தான் நடந்ததுங்கோ. அவர் வெளியே எதையும் சொல்லவில்லை. ஆனால் யாழப்பாணத்தில்? அவர் எழுதியிருந்த கடிதத்தில் காணப்பட்ட சகல விசயங்களையும் ஆதியோடு அந்தமாய் நியூஸ் பேப்பர்களுக்கு றிலீஸ் பண்ணி விட்டார்கள். அது எப்படியோ இனவாதிகளின் காதில் விழ அவர்கள் கொக்கரிக்கத் தொடங்கி விட்டார்கள். பேச்சுக்களில் உடன்பாடு வருகிறதோ இல்லையோ பேச்சுக்கு முன்னராவது எதை வெளியே சொல்லுவது? எதைச் சொல்லக்கூடாது என்று ஒரு உடன்பாடு இருந்தால் நல்லதுதானே!

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

## தலைநகர நிலவரம்

-நாரதர்-

மேல் மாகாண சபையை ஒரு பகுதி எதிர்க்கட்சிகளின் கூட்டு கைப்பற்றிக் கொண்டு, முதலமைச்சர் சந்திரிக்கா தனது பணிகளை ஆரம்பித்தும் கூட பரபரப்பான அரசியல் மோதல் எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

பதவிக்கு வந்தவுடன் மத்திய அரசோடு மோதல் போக்கைக் கையாண்டு முதற்கோணலே முற்றும் கோணலாகி விடக் கூடாது என்பதில் திருமதி. சந்திரிக்கா சற்று உசாராகவே இருப்பது தோன்றுகிறது.

திருமதி. சந்திரிக்காவின் கணவர் காலஞ்சென்ற விஜய குமார ரணதுங்க தனது திரையுலகச் செல்வாக்கின் மூலமாகவும், ஜே.வி.பி.க்கு எதிரான அரசியல் மூலமாகவும் தனது இறுதிக் காலத்தில் அரசியல்வானிலும் பிரகாசிக்கத் தொடங்கி இருந்தார். என்றாலும் கூட அரசியல் தந்திரங்களில் அவருக்குப் பயிற்சி இருந்ததாகக் கூற முடியாது.

அக்காலகட்டத்தில் திருமதி. சந்திரிக்கா அரசியல் அரங்கில் வெளிப்படையாகத் தோன்றா



விஜயா

விட்டாலும்கூட தனது கணவருக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கினார் என்று கூறப்பட்டது.

திருமதி. சந்திரிக்கா சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் மத்திய அரசோடு தான் மோதல் போக்கைக் கடைபிடிக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார். அதன் மூலம் தனது அரசியல் சாதுரியத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

எதிர்க்கட்சியினருக்கு மேல் மாகாண சபை மட்டுமே ஆட்சி செலுத்தக் கூடியதாகக் கிடைத்திருப்பதனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அடுத்த தேர்தலுக்கான களமாக அதனைப் பயன்படுத்த வேண்டிய தேவையும் உண்டு. தம்மாலும் சிறந்த ஆட்சியை வழங்க முடியும் என்பதனை வெளிப்படுத்த இதனை விட்டால் அவர்களுக்கு வேறு களம் கிடையாது.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற பாணியில் செயற்பட்டு மத்திய அரசுடன் மோதலைக் கடைப்பிடிக்கும் போது நிர்வாகத்தில் கவனம் செலுத்துவதை விட அரசியல் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடவே நேரம் போதாமல் இருக்கும். சிறந்த நிர்வாகத்தை வழங்க முடியாது.

இவ்வாறான சிந்தனைகளின் அடிப்படையில் தான் அரசியல் சாணக்கியத்தோடு திருமதி. சந்திரிக்காவின் முடிவுகள் அமைந்திருப்பதாகக் கருதலாம். என்றாலும் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் முரண்பாடுகள் ஏற்படக்கூடும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும். ■

சமீபத்தில் தலைநகரில் பேசப்படும் பிரபலமான விசயம் இந்திய இராணுவம் மீண்டும் இலங்கைக்கு வரப்போகிறது என்பது. இலங்கை அரசும் இந்தியாவும்அப்படியான எந்த முயற்சியும் கிடையாது என்று தெரிவித்துள்ளன.

இந்திய அரசாங்கம் அன்று இலங்கைக்குப் படை அனுப்பி வைத்த நிலமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பிரதமர் நரசிம்ம ராவ் தலைமையிலான அரசு கயிற்றின் மேல் நடப்பது போல் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் இலங்கைக்குப் படை அனுப்புவது என்ற சுமையைத்தூக்கித் தோளிலே போட்டுக்கொள்ள இந்திய அரசு ஒரு போதும் விரும்பாது.


சொந்தப் பலத்தில் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதையே இன்றைய அரசாங்கத் தலைமையில் உள்ளவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்றே தெரிகிறது. இந்திய அமைதிப்படையை இலங்கையில் இருந்து வெளியேற்றுவேன் என்று கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா வாக்களித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்ட கிராமப்புற வாக்கு வங்கிகளை இழந்துவிட அது விரும்பாது. எனவே முன்னாள் ஜனாதிபதியால் முன் வைக்கப்பட்ட கொள்கைகளுக்கு மாறாக அவர்கள் செயற்பட மாட்டார்கள்.

இந்திய இராணுவம் இலங்கைக்கு மீண்டும் வருமா என்ற சந்தேகம் முன்னாள் ஜனாதிபதி உயிரோடு இருக்கும் வரை இங்கே எவருக்குமே எழவில்லை.

தனது இறுதிக்காலத்தில் முன்னாள் ஜனாதிபதி இந்தியாவின் பக்கம் மிகவும் நெருக்கமாகச் சென்றார். அதன்மூலம் தன்னை ஒரு இந்திய எதிரியாகச் சித்தரிக்க முற்பட்டமையை இல்லாதொழிக்க விரும்பினார். அப்படி இருந்தும் கூட முன்னாள் ஜனாதிபதிக்கு இருந்த சுதேசியக் கொள்கையின் வெளிப்பாடானது அவ்வாறான சந்தேகம் எழாமல் தடுத்திருந்தது.

எப்படியோ நெருப்பில்



அநுரா

லாமல் புகையாது என்பார்கள். உள்நாட்டு அரசியல் நிலவரம் சர்வதேச அரசியல் நிலவரம் என்பனவற்றை விளங்கிக் கொள்ளாமல் யாரோ சிலர் அப்பியான யோசனையை அரசின் முன் வைத்திருக்கலாம். எல்லா யோசனைகளும் ஏற்கப்படுவதில்லை அல்லவா. ■

வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உள்நாட்டவர்களை விட வெளிநாட்டவர்களின் ஆர்வம்தான் வியக்க வைக்கிறது. தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் தம் உயிரையே பணயம் வைத்துப் புலிகளின் குகைகளுக்குள் சென்றுவரத் துணிந்தமையானது அந்த



சந்திரிகா

வியப்பை மேலும் விரிவாக்கியிருக்கிறது. ■

கடந்த மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டியபோதும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இன்னமும் ஒற்றுமை ஏற்பட்டுவிடவில்லை.

மாகாணசபைத் தேர்தலில் பெற்ற வெற்றியை பகிர்ந்து கொள்ளும் அளவில் அக்கட்சியின் தலைவர்களுக்கிடையே பரஸ்பர உறவுகள் காணப்படவில்லை. திருமதி சந்திரிக்கா தனது சொந்த சகோதரியாக இருந்தும் கூட அவர் பெற்றுள்ள மகத்தான வெற்றியில் மகிழ்ச்சி அடைய முடியாதவாறு திரு. அநுரா பண்டாரநாயக்காவை அரசியல் வேறுபாடுகள் தடுத்துள்ளன.

கடந்தவாரம் 'சிலுமின' பத்திரிகைக்கு அவர் ஒரு மனந்திறந்த பேட்டியினை வழங்கி இருந்தார். கடந்த மாகாணசபைத் தேர்தலின் முடிவுகள் திருப்தி அளிக்கக் கூடியதாக இல்லை என்று அவர் சொல்லுகிறார். அதற்கான வாதங்களையும் அவர் முன்வைக்கத் தவறவில்லை.

1991ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபை தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தனித்துப் போட்டியிட்டது. அப்போது 36–37 வீதமான வாக்குகள் கிடைத்தன. ஆனால் நடந்து முடிந்துள்ள மாகாண சபைத் தேர்தலில் 36 வீதமான வாக்குகளே கிடைக்கப்பெற்றன. ஏனைய நான்கு கட்சிகளுக்கும் நான்கு வீதமான வாக்குகளைக் கழித்து விட்டுப் பார்ப்போமேயானால் 32 வீதமான வாக்குகளே சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்துள்ளன என்பது தான் திரு. அநுரா பண்டாரநாயக்கா முன்வைத்துள்ள வாதமாகும்.

திருமதி. பண்டாரநாயக்காவுக்குப் பின்னால் திரு. அநுரா பண்டாரநாயக்கா கட்சித் தலைமை மீது குறி வைத்துள்ள போதிலும் வெகுஜன செல்வாக்கைத் திரட்டக்கூடியவராக அவர் இல்லாமல் இருப்பது மற்றொரு போட்டியாளரான திருமதி. சந்திரிக்காவுக்குச் சாதகமாகவே இருக்கிறது. ●

# மருத்துவப் பக்கம்

# அறிந்து கொள்ளுங்கள்

## பகையாகும் புகை

உலகில் இன்று புகைப் பிடிப்போர் தொகை அதிகமாகி யிருக்கிறது.

"காதலியின் முதல் முத்தம் போல்
சிகரெட்டின் கடைசி இழுப்பு"

என்று புகைப்போரில் சிலர் புகழ்கிறார்கள். மேலைநாடுகளில் இளம் யுவதிகளும் புகைப்பிடிப்பது சர்வசாதாரணம். காதலனின் முதல் முத்தம் போல இருக்கிறதோ என்னமோ!

சிகரெட் பெட்டிகளை சின்னச்சின்ன சவப்பெட்டிகள் என்று தமிழக கவிஞர் வைரமுத்து சொன்னதாக ஞாபகம்.

எச்சரிக்கைகள்- புகைத்தல் உடல் நலத்திற்கு கேடாகலாம் என்று சிகரெட் பெட்டிமீதே மிகச் சின்ன எழுத்தில் உள்ள அறிவித்தல்கள் அனைத்தையும் மீறி, புகைமீது மோகம் கொள்வோர் தொகை அதிகரித்துள்ளது.

புகை பிடிப்பது உயிருக்கும் பகை என்பது மிகத் தெளிவான மருத்துவ உண்மை.

சிகரெட் (தமிழில் வெண் சுருட்டு) மீது தீராத மோகம் கொள்வதால் ஏற்படும் விளைவுகளில் சில- இதோ-

* 5 வருடம் தொடர்ந்து புகைத்தால் மாரடைப்பு ஏற்படும் சாத்தியம் உண்டு.
* 15-20 வருடம் என்றால் புற்று நோய் ஏற்பட இடமுண்டு.
* வறட்டு இருமல் வந்து தொல்லைப்படுத்தும். எந்த மருந்தாலும் அது நிற்காது.
* புகை பிடிப்பவர்-பக்கத்தில் இருப்பவருக்கு- சிகரெட் புகைத்தது போன்ற பாதிப்பு ஏற்படும்.
* உள்ளிழுக்கும் புகை நேரடியாக நுரையீரல் வரை சென்று தாக்கும்.

சாதாரண சிகரெட்டைவிட பில்டர் சிகரெட்டால் பாதிப்பு கிடையாது என்று சொல்வது தவறு. நிக்கோடின் தாக்குதல் வேண்டுமானால் குறையலாம். பாதிப்பு சர்வ நிச்சயம்.

பெண்கள் சிகரெட் குடிக்கும் போது கர்ப்பப்பை பாதிக்கப் படுகிறது. இதனால் பேறு காலத்தில் புகைபிடிக்காதீர்கள் என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

ஆக மொத்தத்தில் புகை உயிருக்கு பகை என்பது மாபெரும் உண்மை.



## முத்தமிடும் போது தொற்றிக்கொள்ளும் நோய்

ஈரலைத்தாக்கும் ஹெப்பட் டைட்டிஸ் 'பி' எனப்படும் கல்லீரல் அழற்சி நோய் இலகுவில் குணப்படுத்த முடியாத ஒரு நோயாகக் கருதப் படுகிறது. உலகனைத்திலும் 30 கோடி மக்களுக்காவது இந் நோய்க் கிருமிகள் இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் முக்கால் விதமானோர் சீனா, தைவான் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களே என்று தெரிய வருகிறது. இந்நோய் ஈரல் புற்றுநோய் மற்றும் ஈரல் அரிப்பு எனப்படும். சிரோஸிஸ் நோய்களையும் ஏற்படுத்தவல்லது. இந்நோய் ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 15 இலட்சம் பேரின் உயிரைப்பறிக்கிறது என்று கணக்கிட்டுள்ளனர்.

உலக சுகாதார நிறுவனம், 1991ம் ஆண்டில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கணக்கை வெளியிட்டுள்ளது. இதன்படி சீனாவில் 288, 286 பேரும் அவுஸ்திரேலியாவில் 3,652 பேரும் நியூஸிலாந்தில் 242 பேரும் சிங்கப்பூரில் சுமார் 200 பேரும் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அக்கணக்குக் காட்டுகிறது.

'எய்ட்ஸ்' நோயைப் பரப்புவதற்கான எச்.ஐ.வி கிருமிகளைப் போல உடலில் ஊறும் நீர் மற்றும் இரத்தம் போன்றவற்றின் மூலமே இக்கிருமிகள் பரவுவதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. உடலுறவு, இரத்த தானம், ஊசி மருந்து செலுத்தப்படும் ஊசிகள், அக்குப் பஞ்சருக்காகப் பயன்படுத்தப்படும் ஊசிகள் மற்றும் பச்சை குத்துவதற்காகப் பாவிக்கப்படும் ஊசிகள் போன்றவற்றால் இந்நோய் பரவ வாய்ப்பேற்படுவதாக அறியப் படுகிறது. ஆசியாவிலும் ஆபிரிக்காவில் சகாராப்பாலைவனப் பிரேதசத்திலுள்ள சில நாடுகளிலும் தாய் மூலம் கர்ப்பத்திலுள்ள குழந்தைகளுக்கும் பிறந்த குழந்தைக்கும் இக்கிருமிகள் கடத்தப்படுகின்றன. எச் ஐ வி கிருமிகள் பரவுவதைப் பார்க்கிலும் ஹெப்பட் டைட்டிஸ் கிருமிகள் பரவும் தன்மை வேகமானது. ஒருவர் பயன்படுத்திய சவரக்கத்தி போன்றவற்றை மற்றுமொருவர் பயன்படுத்தினாலும் இக்கிருமிகள் பரவ வாய்ப்புண்டு.



காதலர்கள் முத்தம் கொடுக்கும் போது உமிழ் நீரின் மூலமும் கிருமிகள் தொற்றக்கூடும்.

இந்நோய்வந்த பின்னர் குணப்படுத்துவதைப் பார்க்கிலும் ஏனைய உயிர் கொல்லி நோய்களான அம்மை, சுயரோகம் போன்றவற்றின் பரவலைத் தடுக்க மேற்கொள்ளப்படுவதைப் போன்று வருமுன் காக்கும் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதையே ஐ.நா. அமைப்பான உலக சுகாதார நிறுவனம் விரும்புகிறது. இதற்கான புதிய ஊசி மருந்து இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. 1997க்கு முன்னர் உலகளாவிய நிலையில் இவ்வூசி மருந்துகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இவ்வமைப்பு சிபார்சு செய்துள்ளது.

## வளரும் பிள்ளையிடம் துளிர்விடும் செயல்கள்



* பிறந்த ஆறாவது வாரம் குழந்தை சிரிக்கும்.
* பத்தாவது வாரம் கவிழ்ந்து விடும்.
* நாலாம் மாதம் தலையைத் தூக்கிப் பார்க்கும்.
* ஆறாம் மாதம் அமர்ந்திருக்கும்.
* பதினெட்டாம் மாதம் நடக்கத் தொடங்கும்.
* மூன்றாவது வருடம் வார்த்தைகளோடு பேசத் தொடங்கும்.
* நாலாவது வருடம் தானாகவே உடை அணிந்து கொள்ளும்.
* ஐந்தாம் வருடம் படம் வரையத் தொடங்கும்.

## எடையைக் குறைக்க எளியவழிகள் சில



காலை ஆகாரம்: ஒரு தட்டு பழம், இரண்டு முட்டை, ஒரு கோப்பி. தினமும் இதே ஆகாரம் இரண்டு வாரம் மட்டும்.

மதிய உணவு:- ஒரு கிண்ணம் சூப், ஒரு தட்டில் ¼ பங்கு. சோறு அதற்கு வேண்டிய இரசம்.

மாலையில் கோப்பி அல்லது தேநீர்.

வேண்டியளவு பச்சைக் காய் கறிகள் சாப்பிடலாம்.

இரவு உணவு:- ஒரு தட்டு பச்சைக் காய்கறிகள், மூன்று இடியப்பம். அல்லது ஒரு இட்லி, அதுவும் இல்லாவிட்டால் ஒரு தோசை ஒரு முட்டை.

கோப்பி, அல்லது தேநீர் அருந்தும் போது பால் சேர்த்துக் கொள்ளக்கூடாது. முட்டை சாப்பிடும் போது வேக வைத்துச் சாப்பிட வேண்டும். பொரித்துச் சாப்பிடக் கூடாது. எனினும் இந்த ஆகார முறையை இரு வாரங்களுக்கு மேல் தொடர வேண்டாம்.

## நாயும் உதவி செய்யும்!

காக்காய் வலிப்புள்ளவர்களின் உயிரைக் காக்க நாய்கள் முன்வருகின்றன என்று பிரித்தானிய மிருக மருத்துவ நிபுணர் தனது ஆராய்ச்சியின் முடிவில் தெரிவித்திருக்கிறார். ஆன்று எட்னி எனும் இந்த நிபுணரின் கூற்றுப்படி தனது எஜமானுக்கு காக்காவலி ஏற்படப்போகிறது என்பதை முன்னமே அறிந்து கொள்ளும் ஆற்றலை வளர்ப்பு நாய்கள் பெற்றிருக்கின்றன என்று தெரியவருகிறது. தனது எஜமானுக்குத் துன்பம் வரப்போவதை உணர்ந்து அவை உதவி கோரவும் முற்பட்டு விடுகின்றன என்றும் கூறுகிறார். தனது முடிவுகளை ஒரு சஞ்சிகையில் ஆன்ட்று எட்னி பதிவு செய்துள்ளார்.

காக்காய் வலிப்பு நோயுள்ளவர்களில் பலர் நாய்களை வளர்த்துவருகின்றனர். இவ்வாறு நாய்களை வைத்திருக்கும் இந்நோயாளிகள் 37 பேரிடம் ஆய்வாராச்சி நடத்திய பின்னரே தனது முடிவை எட்னி வெளியிட்டுள்ளார். இத்தகைய நாய்களுக்கு எத்தகைய பயிற்சியும் அளிக்கப்படவில்லை. இருப்பினும் இயல்பாகவே இவை செயற்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். "தனது எஜமானுக்கு நோய் கண்டதும் சுற்றாடலிலுள்ள எவருடைய கவனத்தையாவது ஈர்த்து தன் எஜமானுக்கு உதவும்படி தூண்டுகின்றன இந்நாய்கள்" என்கிறார் அவர்.

(ரோய்டர்)

## கண்ணுக்கு எது அழகு?

கண்கள் அழகாகவும் இருக்க வேண்டும் ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டும். அதுதானே உங்கள் விருப்பம். சில நேரங்களில் நம் விருப்பத்திற்கு விரோதமாக நமது விழிகளில் சில நோய்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

சிலருக்கு கண்புருவங்களின் மேற்பகுதியில் வெள்ளை நிறமுடைய சிறிய துணிக்கைகள் காணப்படுகின்றன.

தலையில் இருக்கும் சொடுகுகளின் சிதைவுத் துகள்கள் நம்மை அறியாமல் கண்புருவங்களில் தங்கி நிற்பதாலும் அப்படி ஏற்படக்கூடும். தொடர்ந்து அவ்வாறு இருக்கும் போது நாம் கவனியாது இருந்து விட்டால் அது கண்புருவப்பகுதியில் இருக்கும் ரோமப்பகுதிகளுக்கும் பரவும். அதனால் பாதிப்பு ஏற்படும்.

ஆனாலும் அவ்வாறான பாதிப்புக்குள்ளானவர்கள் கண்பார்வைக்குப் பழுது ஏற்படுமோ என்று பயப்படத்தேவையில்லை. என்றாலும் தகுந்த வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை பெறுவது நல்லது என்கிறார் டாக்டர் திரு.ஷாலியா பத்திரன.

கண்களை அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பது உங்களுக்கு அழகு.

## ஆயுசு நூறு

* ஒய்வு பெற்ற பிறகும், ஏதாவது வேலை செய்து கொண்டிருங்கள்.
* வயதாகிவிட்டதைப் பற்றிப் பேசாதீர்கள்; நினைக்காதீர்கள்.
* எப்போதும், இளைஞர்கள், சுறுசுறுப்பானவர்களுடன் பழகுங்கள்.
* முடிந்தவரை நன்றாகத் தூங்குங்கள்.
* புகை, குடி இரண்டையும் முழுமையாக ஒழியுங்கள்; முடியாவிட்டால் மட்டுப்படுத்துங்கள்.
* மன இறுக்கம், கவலையை விட்டொழியுங்கள்;
* பிள்ளைகளைப்பற்றி அதிகம் கவலை கொள்ளாதீர்கள்.
* அன்றாடம் 2 கிலோ மீட்டர் தூரமாவது நடவுங்கள்.
* குறைந்தளவே உணவு உண்ணுங்கள்.
* மாமிச உணவைக் குறைவாக உண்ணுங்கள்.
* பழம், கிழங்கு முதலிய இயற்கை உணவுகளை அதிகம் பயன்படுத்துங்கள்.

எனக்கு சில யார்களுக்கு அப்பால் .....அந்தப் பசுமையான புல்வெளியில் அவள் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். பக்கத்தில் யாரோ ஒருத்தி. அவளது தோழியாகவோ, உறவுக்காரியாகவோ இருந்துவிட்டுப் போகட்டும். எனக்குத் தேவை அவளல்ல.... என் 'அவள்' தான். எனது விழிகளின் இமைகள் அடிப்பதற்குச் சிரமப்படவில்லை!

சிரித்துச் சிரித்துக் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுற்றம் சூழலைப்பற்றி எந்த அலட்டலுமில்லாமல் அவர்கள் பாட்டில் கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். கதைக்கும், சிரிக்கும் சுதந்திரங்கள்(!) அவர்களைச் சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டுமென்பது என் மனதின் எங்கோ ஒரு மூலையின் ஆசையாய் அசைந்து கொண்டிருக்கிறது.

நான் வந்ததிலிருந்து அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவள் என்னைப் பார்த்ததாக, பார்க்க முயற்சிப்பதாக இதுவரை விளங்கவில்லை. என்னைத்தான் வேண்டாம், திரும்பி வேறெங்காவது பார்க்கலாம் தானே!... அவளுக்கு என்னைப் பார்க்க– என்னோடு கதைக்க விருப்பமென்றிருந்தால் எப்போதோ செய்திருப்பாளே!...... ஏக்கம் பாதியல்ல எனது முழுமையே அதே தான்!

அவளை எப்போதோ பார்வையால் சந்தித்து, பார்வையாலேயே 'அதை' ப் பரிமாறி... மனதென்னும் ஊஞ்சலில் ஊமையாய் ஆடிக் கொண்டிருந்த அந்த முன்னைய ஆண்டு நினைவுகள் மனதில் தோன்றித் தோன்றி மறைகின்றன. 'அவள் ஏன்...என் காதலைத் தெரிந்தும்... அவளுக்கும் விருப்பமிருந்தும் இன்றுவரை தெரியாதவள் போல் இருக்கிறாள்?......' இது விடைதேடும் கேள்வி தான்.

பின்னும் பின்னும்... அவளை பல முறை கண்டிருக்கிறேன். வழமைபோல் நானாக கதைக்க சொல்லிக் கொள்ளத் தெரியாமல் பார்வையோடு மாத்திரம் போயிருக்கிறேன். 'கோழைக்குக் காதலென்ன ஊமைக்குப் பாடலென்ன' இது எனக்கான பாடலாய் காதுக்குள் ஒலிக்கிறது.

நீண்ட நாட்களின் பின் மீண்டும் இப்போது அவளைப் பார்க்கிறேன். மௌனத்தைக் கலைக்கும் ஒரு தைரியம் என்னில் ஏறிக் கனக்கிறது.

சுற்று முற்றும் பார்க்கும் போதாவது என்னைக் காண என்பதற்காக அவளுக்குத் தெரியும்படியாக என்னை நிற்கவைத்துக் கொள்கிறேன்.

அதோ திரும்புகிறாள்... பார்க்கிறாள்...என்னப் பார்த்தே விட்டாள்...சற்று நெளிகிறாள்.... வார்த்தைகளுக்கு வரம்பிட்டுக் கொள்கிறாள். மெதுவாக எதனையோ பக்கத்தவளின் காதோடு பரிமாறுகிறாள். "நிச்சயமாய் இது.... என்னைப் பற்றிய கதைதான்" மனம் பூரிக்கிறது. இருந்தும் எதுவித நகர்தலுமின்றி அவரவர் அவரவர் இடத்தில்....

நான் அவளருகே வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பை அவள் முகம் காட்டுகிறது.

எனக்கோ அவள் வரவேண்டுமென்ற ஆசை. எதுவும் நடப்பது போல தெரியவில்லை. நின்று கொண்டேயிருக்கிறேன். அவள் எழும்புகிறாள். அந்த 'சிவ

## சிறுகதை

# கனவுகள் சுமப்பவன்

திருமலை ஷயோரா



பூசைக் கரடி' அவள் கையை இழுத்து மீண்டும் இருப்பாட்டுகிறாள்.

எல்லாம் இலையில் பனியின் இருப்போ...?

"அவள்மேல் எனக்கிருக்கும் ஆசையைப் போல் என்மேலும் அவளுக்கு ஆசை இருக்கிறதா என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்...."

"இன்றும்... அவள் என்னை கண்டு கொண்டும் அலட்சியப் படுத்தினால் சற்று வித்தியாசமாய் இறங்க வேண்டும்" சும்மா இருக்கத் தெரியாத மனது அதையும், இதையும் நினைக்கிறது.

நேரநகர்வில் நின்று நகரும் முள்ளாய் நானும்...இலக்கமாய் அவளும்..... எதுவுமே நடக்கவில்லை....பார்வை மட்டும் படர்கிறது.

இப்படி இருக்கையில் எனக்குத் தெரிந்த ஒருத்தி சற்றுத் தூரத்தில் வந்து கொண்டிருக்கிறாள். இது சந்தர்ப்பமென நினைத்து வருகிறவளை நானே எதிர்கொண்டு சந்தோஷமாய் அதையும் இதையும் கதைக்கிறேன். வந்தவளும் தெரிந்தவள். என் எதிர்பார்ப்பை விட நன்றாகவே.... 'அவள்' சந்தேகப்படும்படியாகக் கதைக்கிறாள்.

கதையின் இடையே அவளைப் பார்க்கிறேன். கன்னம் சிவந்து நனைந்திருக்கிறது. அழுகிறாள். எதிர்பார்த்ததுதான். உதடுகள் துடிக்க எதையோ சொல்லத்துடிப்பவள் போல் அழுகிறாள். அழு... எனக்காகத் தானே....இன்னும் இன்னும் அழு. பக்கத்தவள் ஏதோ சொல்லித் தேற்றிக் கொண்டிருக்கிறாள்.

*"தண்ணீரில் மீன் அழுதால்*
*கண்ணீரைத் தந்தது யார்*
*தனியாக நான் அழுதால்*
*என்னோடு அழுவது யார்..*
*யார்..யார்?"*

எத்தனை நாள் தனியே அழுதிருக்கிறேன் தெரியுமா? இன்றுமட்டும் தானே நீ அழுகிறாய்... அழு....

எனக்காக...என் காதலுக்காக ஆயுதம் தரித்திருக்கிறாள். (கண்ணீர்– பெண்களின் ஆயுதம்– அகராதிக்கு நன்றி) வாழ்க. வீர மறத்தி!

கதைத்தவளை அனுப்பி விட்டு என் பழைய இடத்துக்கு நகர்கிறேன். சந்தோஷம் 'கிச்சு கிச்சு' மூட்ட, ஓர் ஆண்மகனாய் கர்வத்தோடு நடக்கிறேன்..... "எக்ஸ்கியூஸ் மீ....

உங்களத்தான்...." குயில் குரல் கேட்டுத் திரும்புகிறேன்.

சீ... காகம் தான்!

"யெஸ்".... என்றுவிட்டு நிற்கிறேன். "அவ...கொஞ்சம் உங்களோட பேசணுமாம்" என்று என் 'அவளை'க் கையால் காட்டிவிட்டு... "எல்லா விஷயத்தையும் என்கிட்ட சொன்னா... நீங்களா வந்து சொல்றதத்தான் ஆசையோட எதிர்பார்த்திருந்தாளாம்... இப்ப...நீங்க வேறொரு 'கேர்ள்'ளோட பேசறதக் கண்டதும்... எதையோ பறி கொடுத்தவ மாதிரி அழத் தொடங்கிட்டா.. ப்ளீஸ்.... நீங்க வந்து ஏதாவது கதைங்க" ஒரு தூதுவனாய் (பொதுப்பால் தானே!) வந்து சேதி சொல்கிறாள்.

"றெக்க கட்டிப் பறக்கு தய்யா....."

சந்தோஷம் சிறகடிக்கிறது. அவளருகே செல்கிறேன். (எப்போதோ சென்றிருக்க வேண்டியது.) கண்டதும் உடனே எழுந்து விடுகிறாள்.

கண்கள், கன்னம் எல்லாமே சிவப்பாக இருக்கிறது. இன்னும் தேம்பித் தேம்பி அழுகிறாள். அவளால் கதைக்க முடியவில்லை. அழுகையாலேயே அனைத்தையும் சொல்கிறாள்.

அவளுக்கு முன்னால் ஓரடி இடைவெளி விட்டு நின்று அவள் கன்னத்தை கைகளில் தாங்குகிறேன். அவள் அழுகை இன்னும் அதிகரிக்கிறது. விரல்களால் கண்ணீரைத் துடைத்து விடுகிறேன். என் நெஞ்சில் முகம் புதைக்கிறாள். "ஐ லவ் யூ...மை டாலிங்" என்று கூறி கூந்தலைக் கோதி விடுகிறேன். (இந்தியச் சினிமா தோற்றது..... போங்கள்!)

"டேய்...டேய்...கெதியா எழும்புடா... வோடன் வாறார்" நண்பன் உசுப்ப கண்களைக் கசுக்கிக் கொண்டு எழும்பி வெறிச்சோடிப் போய்ப் பார்க்கிறேன். கண்டது கனவு என்று தெரிகிறது. மூன்று கட்டில்கள் போடப் பட்டிருக்கும் 'ரூமி'ல் அடைபட்டவனாய் நிற்கிறேன். எல்லாம் எல்லாமாக இருக்கிறது. நான் மட்டும் தான் மாறியிருக்கிறேன் போலத் தெரிகிறது. நண்பன் பரிதாபமாய் பார்க்கிறான். எனக்கு அழ வேண்டும் போல் இருக்கிறது. இருந்தும் வழமையான காரியங்களுக்குள் என்னை இணைத்துக் கொள்கிறேன்.

இன்றைய கனவு வழமையான கனவுகளைவிட பாரமாயிருக்கிறது. இருந்தாலும் இறக்கிவிட முடியவில்லை. எல்லாக் கனவுகளோடும் இதனையும் சுமக்க வேண்டியது தான்!

கனவுகள் வாழ்க்கையோடு வாழ்க்கையாய் ஒன்றிப்போய் விட்டபின் நிஜமான அவளைப் போய் உதறிவிடத் தெரியாமல் சுமந்து கொண்டிருக்கிறேன்.

எல்லாமே கனவென்றாகி விட்ட பிறகு அதைச் சுமக்கத் தான் பழகிக்கொள்ள வேண்டும். நான் எப்போதோ பழகி விட்டேன்.

*(நிஜம்+ கனவு = கதை)*

---

பாதாள உலகம் கண்டுபிடிப்பு

## ஈரேழு பதின்னான்கு உலகம்–பிழை

ஈரேழு பதினான்கு உலகங்களைப் பற்றி இந்து சமயப் புராணக்கதைகள் கூறுகின்றன. பதினான்கு மட்டுமல்ல அண்டத்தில் பல கோடிச் சூரியக்குடும்பங்கள் இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவற்றில் நாம் வாழும் உலகத்தைப் போல் பல உலகங்கள் இருக்கலாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அங்கெல்லாம் மனிதர்களைப் போல சீவராசிகள் வாழக்கூடுமென்றும் அவர்கள் நம்புகின்றனர்.

இதே வேளை பூமிக்குள்ளே பாதாளத்தில் ஒரு புதிய உலகம் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதில் உயிரினங்கள் வாழுகின்றனவா என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அண்மையில் சீனா பூமிக்குள் ஒரு அணுகுண்டை வெடிக்க வைத்தது. 0.66 மெகட்டன் எடையுள்ள இக்குண்டு வெடித்தபோது வீசிய அலைகளின் தன்மையை ஆராய்ந்த வல்லுநர்கள், பூமியின் மேற்தரையில் இருந்து கீழே 3,200 கிலோ மீற்றர் தொலைவில் பூமியின் தரைப்பகுதியிலுள்ள அதே ஆக்கக் கூறுகளைக் கொண்ட 'ஒரு கண்டம்' இருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர். இது 300 கிலோமீற்றர் நீளமுள்ளதாகவும் 130 கிலோமீற்றர் ஆழமுடையதாகவும் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## விவசாயி சொன்ன விளக்கம்!

ஹரியானா விவசாயி ஒருவர் தலையில் பெரிய மூட்டையுடன் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார்.

அவ்வழியாக மாட்டுவண்டியை ஓட்டிக் கொண்டுவந்த சர்தாருக்கு அவர்மீது இரக்கம் ஏற்பட்டது. உதவ முன்வந்தார். அவரை வண்டியில் ஏறச் சொன்னார்.

ஹரியானா விவசாயி நன்றி கூறிவிட்டு வண்டியில் ஏறி மூட்டையைத் தனது தலையில் வைத்துக் கொண்டார்.

"மூட்டையை ஏன் சுமக்கிறீர்கள்? இறக்கி வண்டியில் வைப்பதுதானே" என்று கேட்டார் சர்தார்ஜி.

"உங்கள் வண்டியில் ஏற்கனவே ஏகப்பட்ட பாரம் உள்ளது. உங்கள் மாட்டின் மீது என்னுடைய சுமையையும் ஏற்ற விரும்பவில்லை அதனால்தான்!" என்றார் விவசாயி.

நன்றி-குஸ்வந் சிங் ஜோக்ஸ்

## விவாத மேடை

- பாடசாலைகளில் – செக்ஸ் கல்வி அவசியமா?
- மாணவர்களுக்கு அரசியல் தேவையா?

இது– வாசகர்கள் பங்கு கொள்ளும் புதிய பகுதி.

உங்கள் கருத்துக்களை 'புள்ஸ்காப்' தாளில் ஒரு பக்கத்திற்கு மேற்படாமல், சுருக்கமாக– ஆனால் சுவையாக எழுதி அனுப்புங்கள். சிறந்தவை பிரசுரமாகும்.


அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திகதி19.6.93. எங்கே பார்க்கலாம்.

சிறந்த கருத்துக்களை வெளியிடும் வாசகர்களுக்கு சிறப்புப் பரிசுகள் நிச்சயம்!

---

அன்று குபேர ராணி
இன்று குடிசை வாசி
உண்மைக் கதை

## வரும் வாரத்தில்



கியூபா அதிபர்
காஸ்ட்ரோவின்
காதலி.
உணர்ச்சிகரமான
பேட்டி

# அரசியலே தடை! அதிரடி படை!

ராஜீவ் காந்தி கொலையோடு தொடர்புடையது போன்ற கதைதான் 'குற்றப்பத்திரிகை'. பெரிதும் வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டு பரபரப்பாக தயாரான படம்.

தணிக்கைப்பிரிவு அனுமதி கொடுக்கத் தயக்கம் காட்டுகிறதாம். சலித்துப்போன இயக்குநர் செல்வமணி அடுத்தபடத்தில் இறங்கிவிட்டார். தலைப்பு 'அதிரடிப்படை' தலைப்பே அச்சுறுத்தித் தொலைக்கிறது.

குற்றப்பத்திரிகைக்கு ஏன் தடை என்று விசாரித்ததில், சில அரசியல்வாதிகள் படம் தங்களையும் பாதிக்கும் என்று பயப்படுகிறார்களாம். அதிரடிப்படைக்கும் தலைப்பை பார்த்துவிட்டு தணிக்கைக்குழு தயக்கம் காட்டுமோ தெரியவில்லை.





## பெயர் மாற்றம் பெருலாபம்

வைதேகி என்ற பெயரில் அறிமுகமாகி பின்பு நந்தினி என்று பெயரை மாற்றிக் கொண்டதால் தனது காட்டிலே மழை என்கிறார் நந்தினி. பாலமார்க், அழகு சுந்தரம், காவியம் போன்ற படங்களில் பெயர் சொல்லக்கூடிய பாத்திரங்கள் கிடைத்திருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறார் நந்தினி. இத்தனைக்கும் காரணம் தன்னிடமுள்ள திறமை தான் என்று முன்னால் இருப்பவர்களின் தலையில் அடித்துச் சத்தியம் செய்கிறார் நந்தினி.

## மீனாவுக்கு அந்த குறி


மீனா குஷியாக இருக்கிறார். எஜமான் படத்தில் ரஜினியோடு நடித்ததால் இரசிகர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டதாம். சொல்லி வேலை இல்லை என்கிறார். தெலுங்கில் சிரஞ்சீவியோடு ஒரு படத்திலும், மலையாளத்தில் மம்முட்டியோடும் இணைந்து நடிக்கப்போகிறாராம். மீனா லேடி சுப்பர் ஸ்டாராக மாறுகிறாரோ இல்லையோ சுப்பர் ஸ்டார்களின் படங்களில் நாயகியாகும் வாய்ப்பைப் பிடித்திருக்கிறார்.



தர்ம சீலன் படத்தில் பிரபு

## தழுவி வரும் தலைப்புகள்

ரோஜா, சின்னமாப்ளே போன்ற படங்கள் வெற்றிகரமாக ஓடியதால் ரசிகர்களுக்கு ஒரு குழப்பம் காத்திருக்கிறது. தமிழ்த்திரையுலகில் ஒரு பழக்கம் இருக்கிறது. எந்த ஒரு படம் சிறப்பாக ஓடினாலும் அந்தப்படத்தின் தலைப்பை ஒத்ததாகப் புதிய படங்களுக்குப் பெயர்களைச் சூட்டி விடுவார்கள். தற்போது பதிவாகியுள்ள தலைப்புகள். சின்னமாப்ளே, சின்னரோஜா, பெரியமாப்ளே, என் இனியரோஜா, இதயரோஜா, சின்னத் தளபதி, சின்னக்கிளி, வண்ணக்கிளி, கிழிஞ்சது போ. ரசிகர்கள் முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுதான்.



'நட்சத்திரப் போராட்டத்தில்' அருண் பாண்டியன், பானுசந்தர், சுமன்

## வியட்நாம் காலனியில் வித்தியாசமான பிரபு

அப்பாவித்தனமான பாத்திரமா? கூப்பிடுங்கள் பிரபுவை என்னுமளவிற்கு ஒரு இமேஜை ஏற்படுத்தின பிரபுவின் படங்கள். சின்னத்தம்பி, சின்னவர், பாண்டித்துரை, செந்தமிழ்ப்பாட்டு என்பவற்றை உதாரணமாகச் சொல்லலாம். தற்போது அந்த இமேஜை உடைத்தெறியும் வகையிலும், பிரபுவினால் அப்பாவித்தனமான பாத்திரங்களில் மட்டுமன்றி வித்தியாசமான பாத்திரங்களிலும் அசத்த முடியும் என்று சொல்லக்கூடிய வகையில் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார்.

மலையாளத்தில் சக்கைபோடு போட்ட வியட்நாம் காலனி படத்தில் மலையாள சுப்பர் ஸ்டார்களில் ஒருவரான மோகன்லால் நடித்த பாத்திரம்-தமிழில் பிரபு நடிக்கிறார்.

படத்தை சந்தானபாரதி இயக்குகிறார். பிரபுவை சங்கிலியில் அறிமுகப்படுத்திய சி.வி. ராஜேந்திரன் தயாரிக்கிறார். கதாநாயகி அநேகமாக குஷ்புவாக இருக்கலாம்.

- தற்போது பா... கே.ஜே. ஜேசுதா... ஷதியம் 'பதி...
வளர்ந்து வரு... தனது சொந்... கொடுத்தார். ... வள்ளியில் வா...
- பிரபுவும், கா... என்று அழை...
- பாண்டியராஜ... பிரேமராஜன்.
- பெரிதாக எதி... அடைந்ததில் கா...
- மலையாள நடி... போது கையோ... ஆச்சரியமான ...
- தலைநகரம் ப... ஸ்ரீ வித்யா.
- இளையராஜாவு... சங்கீத ஸ்வர ...

நடிகர் செல்வா... கொழும்பிலிருந்து... வகுப்பு படிக்கும்... தினந்தோறும் கடி... எழுதுகிறார். அ... பதிவுத் தபாலும்... இந்த மாணவியி... சேர்த்து வைக்க... ஒன்று போட்டு... செல்வா.

# காதோடு சொல்லுகிறோம்

- பூ நடிகைக்கு சில தயாரிப்பாளர்கள் மீது பொல்லாத கோபமாம். சான்ஸ் தேடி அலைந்த போது தெலுங்கில் கொஞ்சம் முன்னபின்ன அப்பிடி இப்பிடி நடித்திருக்கலாம். அதையெல்லாம் இப்போது தமிழுக்கு மொழிமாற்றி ஏதோ கொஞ்சம் மறைத்து வைத்திருப்பதையும் காட்டி விடுகிறார்களே என்று சொல்லிக் கவலைப்படுகிறாராம். முற்பகல் நடித்தது பிற்பகலில் தெரிகிறது.

- இயக்குநர் சிகரத்திற்கும் பூ நடிகைக்கும் கச்சேரியாம் கலியாணமாம் என்று தமிழக சஞ்சிகை ஒன்று செய்தி போட்டு விட இயக்குநர் சிகரம் கோபத்தின் சிகரத்தில் ஏறிவிட்டாராம். அத்தனைக்கும் அது ஒரு ஏப்ரல் பூல் செய்தி என்று போடப்பட்டும் கூட சிகரத்தின் கோபம் தணியவில்லையாம்.

- செண்பக நடிகையின் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டியில் சுப்பர் நடிகரின் படம் கண்டால் போதுமாம். ஒரே பாய்ச்சலில்சென்று இச்..இச்.. தீவிர விசிறியாக்கும்! இணைந்து நடிக்க ஒரு சான்ஸ் கிடைத்தால் நிலைமை என்னாகும் என்கிறார்கள். என்னாகும்? கன்னம் சிவப்பு வண்ணமாகும்.

- முன்னேறி வரும் குமாரின் படம் ஒன்றில் நெப்போலியன் தான் வில்லன். வில்லன் நடிப்புக் கொஞ்சம் அசத்தலாக இருந்ததால் சில காட்சிகளை வெட்டி எறியும்படி சொல்லிவிட்டாராம் குமார். இத்தனைக்கும் அவரும் முன்னாள் ஒரு வில்லன் தான். அது தான் கொடுமை.

- சினி உலகையே ஒரு கலக்குக் கலக்கி விடுவதென்று பரமசிவனின் பெயரை தனது பெயரில் முன் பாதியாகக் கொண்ட ரஞ்சினி முடிவு செய்து விட்டாராம். இளமை இருக்கும் போது அதைக் காட்டுவதில் என்ன தவறு என்கிறாராம். இன்றைய திரை உலகிற்கு எது தேவை? இளமையா? திறமையா? இளமையின் திறமை.

- நட்சத்திர நாயகிகள் சிலர் துபாய் போன்ற நாடுகளுக்குச் செல்வதென்றால் துள்ளிக் கொண்டு போகிறார்களாம்.

- நகைச் சுவை மணிக்கும் அவருடன் நடிக்கும் நட்சத்திரங்களுக்குமிடையிலே விவகாரங்கள் வெடிப்பது கோடம்பாக்க சினிமா உலகில் சாதாரண கதையாகிவிட்டது. மணி ஒரு கில்லாடி என்கிறார்கள்.

''சினிமாவில் வசனம் என்பது எப்படியிருக்க வேண்டுமென்றால் அது ஒரு ஏழையின் தந்தி போல இருக்க வேண்டும்''
— அலெக்ஸாந்தர் கோர்டா

மலையாள சுப்பர் ஸ்டார்களில் ஒருவர் கோடி கோடியாக சம்பாதிக்கும்போதும் பீடி பிடிக்கும் நாயகன். இயல்பான நடிப்பில் விருப்பம் அதிகம்



மம்மூட்டி

ஸ்ரீதேவி வெகுநாள்களுக்குப் பிறகு தமிழில் நடிக்கப் போகிறார். ஜோடி மோகன்லால். தயாரிப்பாளர் பாலாஜி. பிரபுவும் நடிக்கலாம்.



தமிழகத் திரைவானில் இருந்து பம்பாய்க்கு தாவிய நட்சத்திரம் இன்னமும் தேதியில் அசைப்பதற்கு ஆள் கிடையாது



-ஸ்ரீதேவி-

## ஹொலிவூட்டின் கனவு நாயகன்

மெல் கிப்ஸன் அமெரிக்காவின் ஹொலிவூட் திரையுலகில் இப்போது கொடி கட்டிப்பறந்து கொண்டிருப்பவர். முடிசூடிக் கொள்ளாத சக்கரவர்த்தி. வசூலை அறுவடை செய்வதில், வனிதையர்களின் உள்ளங்களை ஆட்சி செய்வதில், அனைத்திற்கும் மேலாக ஒரு படத்தில் நடிக்க வாங்கும் சம்பளத்தில்-இப்படிப் பல விவகாரங்களில் அவர் சக்கரவர்த்தி.

ஒரு படத்திற்கு அவர் வாங்கும் சம்பளம் எவ்வளவு தெரியுமா? கேட்டால் சத்தியமாய் தலைசுற்றும். பத்து மில்லியன் அமெரிக்க டொலர். நம்மூர் பெறுமதி நாற்பத்தேழு கோடி ரூபாய். அரசாங்கத்திற்கே கடன் கொடுக்கலாம்.

கிப்ஸனின் சமீபத்திய சுப்பர் ஹிட் படம் "ஃபோர் எவர் யங்". இதற்கு முன்னர் வெளியான அவரது சுப்பர் ஹிட் திரைப் படங்களான "லெதல் வெப்பன்" மூன்று பாகங்களும் அவரைப் பணத்தின் மேல் தூங்க வைத்து விட்டன. கையோடு கையாக அவுஸ்திரேலியாவில் ஒரு பண்ணையை வாங்கிப் போட்டு விட்டார். பிற்காலத்திற்கு உதவும். கிப்ஸன் பிழைக்கத் தெரிந்தவர்.

கிப்ஸன் தற்போது தயாரித்து நடித்து அவரே இயக்கி வரும் திரைப்படம் 'த மான் வித்தவுட் எ பேஸ்'.

கிப்ஸனுக்கு 37 வயது. அமெரிக்காவில் கிப்ஸனின் படங்கள் திரையிடப்படும் திரையரங்குகளை யுவதிகள் முற்றுகை இடுகிறார்கள். அங்கு நடைபெற்ற கருத்துக் கணிப் பொன்றின்படி அதிகமான யுவதிகளால் கிப்ஸன் ஆழமாக நேசிக்கப்படுகிறாராம். கன்னிகள் மீது தூங்கும் கனவு நாயகன்.





## துகிலுரிவது தொடரும்

'உள்ளே வெளியே' சகல தரப்பாரையும் கவர்ந்து ஓடோஓடென்று ஓடிக் கொண்டிருப்பதில் பார்த்திபனுக்கு எக்கச்சக்கமான உற்சாகம். உள்ளே வெளியே வெற்றி பெற்றதற்கு பிரதான காரணம் ஐஸ்வர்யா விசயத்தில் பார்த்திபன் கடைப்பிடித்த கடுமையான துணிச் சிக்கனம். துணிச்செலவோ மிச்சம் தியேட்டருக்கு ரசிகர்களின் வரவோ எக்கச்சக்கம். அதனால் வசூலோ உச்ச பட்சம். இனிமேல் தணிக்கைக்குழு அனுமதித்தால் அணிந்து வரும் துணிகளை ஒரு பக்கத்தில் தனியே வைத்துவிட்டு ரசிகர்களை அசத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பார்த்திபன் அடுத்து வழங்க இருக்கும் படம் கருப்பண்ணசாமி. நாயகனும் அவர்தான். இயக்குநரும் அவர்தான். அவர் துகிலுரியப் போகும் நாயகி யாரோ?



…களில் அதிக தொகை வாங்குவது … பாடல் ஒன்றிற்கு அவர் வாங்கும் …ஆயிரம் ரூபாய்.

…நகைச்சுவை நடிகர் வடிவேலுக்கு கமல் …படமான தேவர்மகனில் வாய்ப்பு …போது ரஜினி தனது சொந்தப்படமான …க்கொடுத்திருக்கிறார்.

…தும் தங்களுக்குள் வாடா போடா … கொள்ளும் நண்பர்கள்.


…தனது மகனுக்குச் சூட்டியுள்ள பெயர்

…ர்த்திருந்த பொன்னுமணி தோல்வி …த்தில் கவலையோடு காணப்படுகிறார்.

…மம்முட்டி படப்பிடிப்புகளுக்குச் செல்லும் … கமெராவையும் கொண்டு செல்கிறார் …காட்சிகளைக் கண்டால் க்ளிக், க்ளிக்.

… முதலமைச்சராகத் தோன்றுகிறார்

… தெலுங்கில் சூட்டியுள்ள பட்டம் சக்கரவர்த்தி



சக்கரவர்த்தி படத்தில்
கார்த்திக்-பானுப்ரியா

# 'ஓநாய்க் கண்ணீர்' வடித்த இஸ்ரேலிய அமைச்சர்!

'ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் வடித்ததாம்' எனக் கூறப்படுவதுண்டு.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த இஸ்ரேலியத் துணைப் பிரதமரும், வெளிவிவகார அமைச்சருமான திரு. ஸிமொன் பெரஸ் பாலஸ்தீன மக்கள் குறித்து வெளியிட்ட கருத்தும், ஓநாயின் கண்ணீர் போன்றே விளங்கியிருந்தது.

புது தில்லியில் பாலஸ்தீன விடுதலைப் போராட்ட ஆதரவாளர்களுக்கு விடுத்த வேண்டுகோளில், "பாலஸ்தீன மக்களும் தமது போராட்டத்தை காந்திய வழியில் கொண்டு செல்ல வேண்டும். அவர்கள் அஹிம்சா வழியில் ஆயுதங்களைக் கைவிட்டு தமது பிச்சிசனையை அணுக வேண்டும்." என்று திரு. பெரஸ் குறிப்பிட்டிருந்தார்.

இதன் மூலம் பாலஸ்தீனர்களின் போராட்டத்தை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டுள்ளதென்பதனையும், ஆனால் பாலஸ்தீனர்களின் ஆயுதம் தரித்த நிலையே பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிவிட்டுள்ளதென்பதனைக் கூறாமல் கூறுவதாகவே திரு. பெரஸின் மேற்குறிப்பிட்ட கருத்து விளங்கியிருந்தது.

பாலஸ்தீனர்கள் ஏதோ முரட்டுத்தனமான ஆயுத பாணிகள், எனவே அவர்கள் ஆயுதங்களைக்கைவிட்டு மிதவாதிகளாக மாற வேண்டும் என்ற தோரணையிலேயே பெரஸின் கண்ணோட்டம் விளங்கியிருந்தது.

ஆனால் அப்பாவிப் பாலஸ்தீனர்களை அவர்கள் வாழ்ந்த பூமியிலேயே அந்நியர்களாக்கி அவர்களை ஆயுதமேந்திப் போராட்டத்தில் குதிக்குமளவுக்கு வழிவகுத்தவர்கள் இஸ்ரேலியர்களே என்பதை திரு. ஸிமொன் பெரஸ் நன்குணர்ந்திருக்க வேண்டும்.

எனவே வெளி உலகின் அனுதாபத்தையும், ஒத்துழைப்பையும் இஸ்ரேல் சம்பாதிக்கும் வகையில் பாலஸ்தீனர்கள் குறித்து திரு. ஸிமொன் பெரஸ் குறிப்பிட்டவை, பாலஸ்தீனர்களின் தாயக உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளோருக்கு ஒரு விநோதமான கருத்தாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

பாலஸ்தீனர்களைக் காணுமிடங்களிலெல்லாம் துப்பாக்கிகள் கொண்டு துரத்தியடிப்பதையே இஸ்ரேலியர்கள் வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

பாலஸ்தீனர்களின் குடியிருப்புகள் படிப்படியாக இஸ்ரேலியர்கள் வசமாகிக் கொண்டிருக்கின்றன .

பாலஸ்தீனர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சர்வதேச மட்டத்திலும், மற்றும் பல்வேறு பிராந்திய ரீதியிலான ராஜதந்திர முயற்சிகள் மூலமாகவும் கடந்த பல தசாப்தங்களாக பல்வேறு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவையாவற்றையும் புறக்கணித்து பாலஸ்தீனர்கள் என்ற ஓர் இனம் வாழ்ந்த அடிச்சுவடே இல்லாத நிலையை ஏற்படுத்துவது போலவே இஸ்ரேலியர்கள் நடந்து கொள்கின்றனர்.

எனவே பாலஸ்தீனர்களின் குரல்வளையை நெரிப்பது போன்ற நடவடிக்கைகளிலேயே இஸ்ரேலியர்கள் இறங்கியுள்ளனர்.

இந்த நெருக்குதலைத் தவிர்க்கவும் தாம் மேலும் துரத்தியடிக்கப்படாமலிருக்கவுமே பாலஸ்தீனமக்கள் ஆயுதமேந்தியவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்நிலையில் உண்மையிலேயே காந்தீயத்தை திரு. ஸிமொன் பெரஸ் மதிப்பவரானால், காந்தி அடிகள் உபதேசித்த கொல்லாமையை அனுசரித்து பாலஸ்தீனர்கள் மீதான அடக்குமுறைகளை இஸ்ரேலியர்களே முதலில் கைவிட வேண்டும் என்பதனை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டியவராகின்றார்.

## உலக ரவுண்டப்

### கம்யூனிஸத்தை சீர்குலைத்த கோர்பச்சேவ் சுற்றுப் புறச் சூழலை சீர்செய்ய முயலுகிறார்!



முன்னாள் சோவியத் யூனியனை சீர் செய்ய முயன்று, கம்யூனிஸ அமைப்பையே சீர்குலைத்த பெருமையைப் பெற்றவரே திரு. மிக்கேல் கொர்பச்சேவ் ஆவார்.

இவர் சில வருடங்களுக்கு முன்னர் இருந்ததைப் போல பிரமாண்டமான பிரபலத்துடன் இன்று காணப்படவில்லை. ஆயினும் தாம் பிறந்த பூமியிலேயே எதுவித செல்வாக்கும் செலுத்தமுடியாத நிலையில் பூலோகத்தின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் குறித்த நடவடிக்கைகளில் திரு. கோர்பச்சேவ் தற்போது இறங்கியுள்ளார்.

திரு. கோர்பச்சேவின் அண்மைக்கால நடவடிக்கைகள் யாவும் சுற்றுப்புறச் சூழலை மையமாகக் கொண்டதாகவே காணப்படுகின்றது. இதற்கென இவர் பல்வேறு நாடுகளுக்கும் விஜயங்களை மேற்கொள்கின்றார்.

அண்மையில் ஜப்பானில் சுற்றுப்புறச்சூழல் குறித்த மகாநாடொன்று இடம்பெற்றிருந்தது. திரு. மிக்கேல் கோர்பச்சேவும் இம்மகாநாட்டில் பங்குபற்றியிருந்தார். இம்மகாநாட்டில் இவர் உரையாற்றியதுடன் மட்டுமல்லாமல், சூழல் பாதுகாப்புக் குறித்துப் பாடல் ஒன்றையும் பாடிக் காண்பித்துள்ளார்.

எனவே திரு. கோர்பச்சேவ் தற்போது ஒரு முக்கிய சூழல் பாதுகாப்பு ஆர்வலராகவே உலக அரங்கில் இயங்கி வருகின்றார்.

உலகின் சுற்றுப்புறச் சூழல் இன்று பாரதூரமான அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. எனவே பூகோளம் மாசடைந்து தாவர மற்றும் உயிரினங்கள் மடிவதையும், காலநிலையில் சீரற்ற மாற்றங்கள் ஏற்படுவதையும் தடுக்க உலகளாவிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன்.

தேசத்தலைவர்கள் பலரும் சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்டுள்ளனர். அமெரிக்காவின் தற்போதைய உப ஜனாதிபதியான திரு. அல்கிரோ கூட சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் தீவிர ஆர்வமுடையவராகக் காணப்படுகின்றார்.

ஆகவே உலகில் ஒரு முக்கிய நபராகக் கணிக்கப்பட்ட திரு கோர்பச்சேவின் சூழல் பாதுகாப்புக் குறித்த ஆர்வம், ஏனைய சுற்றுச்சூழல் நலன் விரும்பிகளுக்கு ஓர் உற்சாகமாக விளங்கும் என்றே எதிர்பார்க்கலாம்.

கிளாஸ் நொஸ்ட், பெரஸ்தொய்க்கா என்ற கம்யூனிஸ மறுசீரமைப்புத் தத்துவங்ளை முன்னாள் சோவியத் யூனியனில் அறிமுகஞ் செய்து இன்று அந்த கம்யூனிஸ வல்லரசைச் சீர்குலைத்தது போல பூகோள இயற்கைச் சமநிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்தாதவரை திரு. கோர்பச்சேவின் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உலகம் ஆமோதிக்கவே செய்யும் எனக் கருதலாம்.

### ஒலிம்பிக்கை நடத்த முண்டியடித்து நிற்கும் சீனா

சீனா ஓர் உறுதிமிக்க வல்லரசாக மாறிவருவதையே இன்று அந்நாட்டில் இடம் பெற்று வரும் மாற்றங்கள் புலப்படுத்துகின்றன. தற்போது தமது சோஷலிஸ அமைப்பு முறையைக் காலத்துக்கேற்றவகையில் மாற்றுவதில் முனைப்பாக சீனா இருந்து வருகின்றது.

லெனினின் கம்யூனிஸ தத்துவங்களைக் கடைப்பிடித்த முன்னாள் சோவியத் யூனியன், இன்று லெனின் சிலைகளையே உடைத்தெறியும் நிலைக்கு கம்யூனிஸத்தை இருந்த இடம் தெரியாமல் செய்துள்ளது.

சீரமைப்பு நடவடிக்கைகள் என்ற ரீதியில் முன்னாள் சோவியத் யூனியனில் இடம் பெற்ற மாற்றங்கள், சோவியத் அமைப்பில் அங்கம் பெற்றிருந்த பதினைந்து மாநிலங்களையும் தனித்தனியே கூடுதல் தன்னாதிக்கம் கொண்ட பிரதேசங்களாக மாற்றியுள்ளன.

ஆனால் சீனாவில் இடம் பெற்றுவரும் மாற்றங்கள் அமைதியான–அதே வேளை நடைமுறைச் சாத்தியமான சீர்திருத்தங்களாகவே காணப்படுகின்றன.

மாணவர் புரட்சி என்ற பெயரில் கூடுதல் ஜனநாயக சுதந்திரம் வேண்டி சில வருடங்களுக்கு முன்னர் சீனாவில் கலகமொன்று வெடித்திருந்தது. ஆயினும் சீன அரசு அக்கலகத்தை தனது இரும்புக்கரங்களால் நசுக்கிவிட்டிருந்தது. இதில் பலர் கொல்லப்பட்டிருந்தனர். மேற்கு நாடுகள் இக்கொலைகளைப் பெரிதுபடுத்தி சீனாவை அவதூறுபடுத்த முயன்றன.

ஆயினும் சீனா தான் செய்ய வேண்டியதை நன்கே தெரிந்து வைத்திருந்ததுடன், தனது நடவடிக்கைகளிலும் உறுதியாகவே இருந்தது.

வெளிநாட்டுச் சக்திகள் தனது உள்விவகாரத்தில் ஊடுருவி அரசியல் ரீதியாக சேதங்களை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதில் சீன ஆட்சியாளர்கள் விழிப்பாகவே இருந்தனர்.

சீன ஆட்சியாளர்கள் கூட தமது நாட்டில் மாற்றங்கள் ஏற்படுவதை விரும்பியே இருந்தனர். ஆனால் வெளி உலக சக்திகளின் கைப்பாவைகளாக தம் நாட்டுமக்கள் செயல்படுவதையும், வெளிச் சக்திகள் மூலமாக உள்நாட்டில் மாற்றங்கள் எற்படுவதையும் சீன ஆட்சியாளர்கள் அனுமதித்திருக்கவில்லை.

தற்சமயம் சீன வர்த்தக மற்றும் சமூக பொருளாதாரத் துறைகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கூட்டு வர்த்தக மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் சீனாவில் தனியார்துறையினருக்கும் பெருமளவிலான வர்த்தக முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டுள்ளது.

எனவே சீனா தனது சோஷலிஸ அமைப்புக்கும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றது.

உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற காரணத்தினாலும், சர்வதேச ரீதியிலான தொடர்புகளை மேலும் விருத்தி செய்ய வேண்டுமென்ற அவாவினாலும் 2000ம் ஆவது ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் பந்தயத்தையும் சீனாவிலேயே நடத்தும்படி சீன மக்கள் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியை வற்புறுத்தி வருகின்றனர்.

இது தவிர சீனமக்கள் உலக மக்களின் நட்புறவை வேண்டி நிற்கின்றார்கள் என்பதை வெளிப்படுத்தும் ஒரு சுவாரஸ்யமான சம்பவமொன்றும் அண்மையில் சீனாவில் இடம் பெற்றிருந்தது.

சில வாரங்களுக்கு முன்னர் சீனாவின் பாரம்பரிய காப்பரண் என்று வர்ணிக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவரை மோட்டார் சைக்கிளில் பிரிட்டிஷ்காரர் ஒருவர் பாய்ந்து கடந்திருந்தார். இது ஒரு 'கின்னஸ்' புத்தக சாதனையாகவும் அமைந்திருந்தது.

எனவே சீனமக்கள் இச்சம்பவத்தை கண்டுகளித்து தமது நாட்டின் நீண்ட பெருஞ் சுவரைக்கடந்த அந்த பிரிட்டிஷ் வீரரையும் பெரிதும் பாராட்டியிருந்தனர்.



## பொஸ்னிய முஸ்லிம்களும் போரிடும் சேர்பியர்களும்!

பிணக்காடாக மாறியுள்ள பொஸ்னியாவில் அகதிகளின் எண்ணிக்கை பத்துலட்சத்தையும் தாண்டிவிட்ட நிலையில், அமெரிக்கா தனது இராணுவத்தை பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்த அனுப்பி வைக்குமா? என்பதே இன்று உலக அரங்கில் எழுந்துள்ள கேள்வியாக இருக்கின்றது.

பொஸ்னியாவில் வாழும் முஸ்லிம்களை ஒழித்துக் கட்டுவதென்ற முடிவுடன், அங்குள்ள சேர்பிய இனத்தீவிரவாதிகள் இரவு பகலாக கண்மூடித்தனமான நடவடிக்கைகளில் குதித்துள்ளனர்.

இதன் காரணமாக பொஸ்னியாவில் உள்ள முஸ்லிம்கள் தமது உயிர் உடமைகளை இழந்து வருவதுடன், அநாதரவான நிலையில் லட்சக்கணக்கில் அகதிகளாகியுள்ளனர்.

பொஸ்னியாவில் , சேர்பிய இனத்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான மோதல்கள் ஆரம்பித்ததிலிருந்து பொஸ்னியாவில் 70 சதவீதமான நிலப்பரப்பை சேர்பியர்கள் தற்போது ஆக்கிரமித்துள்ளனர்.

எனவே இந்த ஆக்கிரமிப்பானது ஓர் இன அழிப்பு நடவடிக்கையாகவே பூதாகரமடைந்துள்ளது.

மேற்கு நாடுகள் பொஸ்னிய விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அக்கறை காட்டுகின்ற போதிலும், அவை எதுவித காத்திரமான நடவடிக்கைகளையும் முன்வைப்பதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே பொஸ்னியாவில் ஐக்கிய நாடுகள் - ஸ்தாபனத்தின் அமைதிப் படையினர் முஸ்லிம்களை, அவர்கள் சுற்றிவளைக்கப்பட்ட பகுதிகளிலிருந்தும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தியுள்ள போதிலும், பொஸ்னிய முஸ்லிம்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் அமெரிக்கா தற்போது பொஸ்னியாவில் காலடி எடுத்து வைத்து அங்கு இடம் பெற்றுவரும் மோதல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்கும் சூழ்நிலைகள் தென்பட ஆரம்பித்துள்ளதையே உலக சமூகம் தற்போது உணர ஆரம்பித்துள்ளது.

முன்னைய யூகோஸ்லாவியாவில் ஒரு பிரதேசமாக இருந்த பொஸ்னியா இன்று இனவாதிகளின் போர்களமாக மாறியநிலையில், இங்கு பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் இனத்தவர்களுக்கு பாதுகாப்பளிப்பது மிகவும் இன்றியமையாததாக இருப்பதையும் மேற்கு நாடுகள் நன்கு உணர ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் அமெரிக்கா தனது வழமையான நடவடிக்கையான இராணுவ ரீதியிலான அணுகுமுறையை பொஸ்னியாவில் ஆரம்பிப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வரையிலான உயர் மட்டத்திலும் தற்போது பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.

பொஸ்னியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான சேர்பியர்களை அமெரிக்கா இராணுவ ரீதியாக அணுகும் பட்சத்தில், ஒரு பெரும் யுத்தம் பொஸ்னியாவில் ஏற்படும் சூழ்நிலை ஆரம்பித்துள்ளது.

வியட்நாம், வளைகுடாப்பகுதிகளில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையை ஒத்ததாக அமெரிக்க அணுகு முறை காணப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

ஆனால் வளைகுடாவில் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வந்ததைப்போல பொஸ்னியாவில் கொண்டு வருவது கடினமாகவே இருக்கும். ஏனெனில் இங்கு அமெரிக்கா தனித்து நின்றே போரிடும் பட்சத்தில் சேர்பியர்கள் மலைப்பாங்கான பொஸ்னியாவில் இருந்து ஒரு நீண்டகாலப் போருக்குத் தயாராகவும் கூடும்.

இந்நிலையில் வியட்நாமில் அகப்பட்டது போல பொஸ்னியாவிலும் சிக்கலான நிலையை எதிர்நோக்க நேரிடும் என்பது அமெரிக்காவின் யோசனையாகக் காணப்படுகின்றது.

# சரிந்த கோடுகள்



ஆண்கள் அணியும் ரைகளில் கவனித்துப் பார்த்தீர்கள் என்றால் அவற்றில் கோடுகள் சரிந்தே காண்பபடும். இது ஏன் தெரியுமா? ரையைக் கழுத்தில் மாட்டி முடிச்சுப் போடும் போது ரை கண்டபடி வளைக்கப்பட்டு முறுக்கப்படுகிறது. ரை தயாரிக்கும் போது துணியின் குறுக்கு அல்லது நெடுக்கு இழைகளுக்கு 45 டிகிரி கோணத்தில் கத்தரியைச் செலுத்தி வெட்டினால், அந்த ரையில் முடிச்சுப் போடுவது சுலபமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. துணியில் கோடுகள் சாதாரணமாக நீளப் பக்கத்திற்கு அல்லது அகலப் பக்கத்திற்கு இணையாகவே அச்சடிக்கப்பட்டிருக்கும். அதை மூலை விட்டத்திசையில் வெட்டும் போது கோடுகள் வலமிருந்து இடமாகச் சாய்ந்து விடுகின்றன.

# முட்டை விளம்பரம்

உலகில் புதுவிதமான விளம்பர யுக்திகள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன. வியாபாரப்போட்டி அதிகமாக இருப்பதால் ஏட்டிக்குப் போட்டியான விளம்பரங்களும் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

இந்தியாவின் தலைநகரான டில்லியில் முட்டை விளம்பரம் ஒன்று பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. காரணம் முட்டைகளில் சிவப்பு வர்ணத்தாலான பீடா விளம்பரம் பொறிக்கப்பட்டிருந்தது.

விளம்பரத்தைப் பார்த்து வியந்தவர்கள் அந்த முட்டைகளை வாங்க மட்டும் மறுத்து விட்டார்கள். ஏனென்றால் முட்டையில் விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த சிவப்பு வர்ணம் முட்டையை உடைக்கும் போது உட்கருவுடன் சேரும் வாய்ப்புண்டு. அதனால் அதனை உட்கொள்வோருக்கு விரும்பத்தகாத பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று வதந்தி பரவியது.

பீடா வெற்றிலை தயாரிப்பாளர்கள் முட்டைகளில் விளம்பரம் தீட்டப்பட்டதற்கு தாங்கள் காரணமல்ல என்று கூறினார்கள்.


அந்த முட்டை விளம்பர மர்மம் தெரிந்தவர்கள் மௌனம் சாதித்தனர். ஏனென்றால் உண்மையை உடைக்க முற்பட்டால் அவர்கள் முகங்களை நோக்கியும் முட்டைகள் வீசப்படலாம் அல்லவா!

# ஆண்களும் அம்மாவாகலாமா?

## ஒரு ஆராய்ச்சி

மேற்கு நாடுகளிலுள்ள மருத்துவர்களும், விஞ்ஞானிகளும் ஆண்களை கருத்தரித்துக் குழந்தை பெற வைப்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

பரிசோதனைக்குழாய்க் குழந்தைகள் இப்போது சர்வ சாதாரணமாகி விட்டன.



கருவை ஏற்று அதனை சிசுவாக வளர்த்தெடுப்பதற்கேற்ற கர்ப்பப்பை போன்ற ஒரு பையை உருவாக்கி அதனை ஆண் வயிற்றில் பொருத்துவது எப்படி என்பதுதான் இப்போதுள்ள கவலை.

ஒரு பெண் கர்ப்பம் தரிக்க முடியாத நிலையில் இருந்தால் அல்லது குழந்தை பெறுவதால் அவள் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற பயமிருந்தால் பரிசோதனைக் குழாய் மூலம் குழந்தை பெற வைக்கும் முறையை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அது வெற்றியளித்தது போலவே ஆண்களையும் குழந்தை பெறும் தாய்மார்கள் ஆக்கும் முறை சாத்தியமாகுமா? ஆராய்ச்சி நடக்கிறது.

இந்தியாவில் பெங்களூரைச் சேர்ந்த பூஜப்பா என்ற பதினேழு வயது இளைஞனின் வயிற்றிலிருந்து ஒரு ஆண் சிசுவுக்கான- சற்று வளர்ச்சியடைந்த கருவினை அண்மையில் அகற்றியுள்ளனர். ஓரடி நீளமான அக்கருவில் நன்கு வளர்ச்சியடைந்த கை கால்கள் காணப்பட்டன.

கரு உயிரற்றிருந்தது என்பது உண்மைதான். ஆனால் ஆணின் வயிற்றில் ஓரடி சிசு வளர முடியுமானால் ஏன் முழு அளவிலான உயிருள்ள குழந்தைக்கு ஒரு ஆண் அம்மாவாக முடியாது?

# தகவல் பெட்டி

## மாண்டவர் மீண்டபோது.....

கிரேக்க விவசாயியான லாசரஸ் அன்று மாலை வயலில் இருந்து வீடு திரும்பும் போது ஆச்சரியம் காத்திருந்தது. வீடு நிறைந்த கூட்டம். உறவினர்கள் எல்லோரும் கூடி இருந்தனர். ஒருவர் இறந்துவிட்டதற்கான அடையாளங்கள் தென்பட்டன. இறுதிச் சடங்குகளும் நடந்து கொண்டிருந்தன.

லாசரஸை கவலை தொற்றிக் கொண்டது. தான் வயல் வேலையில் ஈடுபட்டிருந்தபோது தனது நெருங்கிய உறவினர்கள் யாரோ தான் இறந்து விட்டார்களோ என்று கவலைப்பட்டார். அயலூரில் இருந்து உறவினர்களே வந்து விட்டார்கள். தனக்கு மட்டும் வீட்டார் எப்படி அறிவிக்காமல் இருந்தார்கள் என்று நினைத்து சற்றுக் கோபமும் பட்டார்.

சிந்தனை வயப்பட்டவராக லாசரஸ் தனது வீட்டிற்குள் நுழைந்தபோது,

அவரைக் கண்ட உறவினர்கள் சிலர் பேயறைந்தது போல் எழுந்து ஓடத் தொடங்கினார்கள்.

"இறந்து போன லாசரஸ் பேயாக வருகிறானே" என்று சிலர் ஓலமிட்டனர்.

அதிர்ச்சி அடைந்த லாசரஸிற்கு விசயம் மெல்ல விளங்கியது.

"ஏய் நான் சாக்காட்டிலிருந்து வரவில்லை. வயல்காட்டில் இருந்துதான் வருகிறேன்" என்று லாசரஸ் உரத்துக் கத்தினான்.

அப்போது தான் உறவினர்களுக்கு உண்மை புரிந்தது. வந்தது பேயல்ல மனிதன்தான் என்று.

லாசரஸ் தன்னுடைய மோட்டார் சைக்கிளைத் தனது நண்பனுக்குக் கொடுத்திருந்தான். அந்த நண்பன் ஒரு விபத்தில் சிக்கி மரணமானான். அதனைத் தவறாகப் புரிந்து கொண்ட பொலிசார் விபத்தில் மாண்டது லாசரஸ் என்று அவரது வீட்டில் அறிவித்து விட்டனர். சகல குழப்பத்திற்கும் அதுதான் காரணம்.

# சைக்கிள் ஓடும் போது தலைக்கவசம்

**வீதி** விபத்துக்களில் ஒவ்வொரு 50 நொடியிலும் ஒருவர் மரணமடைகிறார். ஒவ்வொரு 2 நொடியிலும் ஒருவர் விபத்துக்களில் காயமடைகிறார். உலகளாவிய கணக்கெடுப்பில் இதனை உலக சுகாதார அமைப்பு கணக்கிட்டு அண்மையில் ஓர் அறிக்கையில் வெளியிட்டுள்ளது. உலக சுகாதார தினத்தை அனுசரித்து ஐ. நா. முகவர் அமைப்பான இந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒவ்வொரு வருடமும் வீதி விபத்துக்களில் 700,000 பேர் இறந்துபோகின்றனர் என்று கணக்கிட்டுக் கூறுகிறது. வளர்முகநாடுகளிலேயே வீதி விபத்துக்களால் இறப்போர் தொகை அதிகமாகக் காணப்படுவதனால், பாதுகாப்பு நடவடிக்கைகளை அந்நாடுகள் மேற்கொள்வது அவசியம் என்று அவ்வறிக்கை கூறுகிறது.

மேற்படி கணக்குகளின் பிரகாரம் வளர்முகநாடுகளில் மூன்றில் இரண்டு தொகையினர் விபத்துக்களில் சாகின்றனர். இதற்காக உலக சுகாதார அமைப்பு "உயிரைக் கவனமாகப் பேணுங்கள். வன்முறையை தடை செய்யுங்கள். அத்துடன் கவனக் குறைவாக இருக்காதீர்கள்" என்ற ஒரு பிரசாரத்தை ஆரம்பித்துள்து.

வளர்ச்சியடைந்த நாடுகளில் சிறந்த வீதிப்பராமரிப்பு, பயணிகளைப் பாதுகாக்கும் பட்டிகள் பொருத்துதல் மற்றும் வேகத்தடை முறைகள் இருப்பதனால் கடந்த 10 ஆண்டுகாலத்தில் இத்தைகைய மரணங்கள் 18 வீதம் குறைந்துள்ளன. ஆனால் வளர்முகநாடுகளில் விபத்துக்களுக்கான சூழ்நிலைகள் அதிகரித்துக் கொண்டேயுள்ளன. உலகளாவிய நிலையில், விபத்துக்களில் சிக்கிக்காயமடைவோர் தொகை ஒருகோடி முதல் ஒன்றரைக்கோடி வரையாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வீதிகளிலல்லாமல் வேறு விபத்துக்களிலும் திட்டமிடப்பட்ட வன்முறைச் சம்பவங்களிலும் சிக்கிச்சாவோர் தொகை 3 1/2 கோடியாகும். இத்தொகையுள் 750,000 தற்கொலைகளும் 275,000 கொலைகளும் அடங்கும். அத்துடன் தவறுதலாக நீருள் மூழ்குதல், நஞ்சருந்துதல் ஆகியவகைச் சாவுகளும் இத்தொகையில் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

சகல வீதி விபத்துக்களிலும் மூன்றாம் உலக நாடுகளில் 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் சிக்கினால் ஐந்தில் ஒரு பிள்ளை இறந்து விடுகிறது. கைத்தொழில் நாடுகளை விட இது இரு மடங்கு அதிகமாகும்.

இளவயதான வண்டிச் சாரதிகளின் சாவு அதிகரித்துள்ளது. பெரும்பாலும் இவர்கள் மது போதையில் வண்டி ஓட்டுவதனால் விபத்துக்களில் சிக்க நேரிடுகிறது. வளர்முக நாடுகளில் மதுப்புட்டிக்கும் வண்டிச்சக்கரத்துக்கு மிடையிலுள்ள உறவு முறைபற்றிச் சரியாகத் தெரியாதமையினால் இந்நிலை ஏற்படுகிறது என்று உலக சுகாதார அமைப்புத் தெரிவிக்கிறது.

அமெரிக்காவில் தான் மோட்டார் வாகனங்கள் மிக அதிகம் இருப்பினும் வீதிப் பாதுகாப்பு ஒழுங்குகள் உயர்தரத்தில் பேணப்படுகிறது. இங்கு ஒவ்வொரு 10,000 வாகனங்களுக்கும் 2.5 விகிதம் தான் இறப்பு நேரிடுகிறது.

எத்தியோப்பாவில் 1,000 பேருக்கு ஒரு மோட்டார் வீதம் தான் உண்டு. இருந்த போதிலும் 10,000 வாகனங்களுக்கு 150 சாவு ஏற்படுகிறது. உலகிலேயே மிக மோசமான பாதுகாப்பு இங்கே தான் என்று சொல்ல வேண்டியுள்ளது.

ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்டுள்ள உலக சுகாதார அமைப்பு சாதாரண சைக்கிள்வண்டிச் சவாரி போவோரும் தலைப்பாதுகாப்பு அணி (ஹெல்மெற்)களை அணிவதனால் விபத்துக்களில் தலைகளுக்கு அடிபடாமல் பாதுகாக்க முடிகிறது என்று கூறுகிறது. இதனால் 75 சதவிகிதம் தலையில் அடிவிழுந்தும் மூளை பாதிக்கப்படாதிருக்கும் என்று அறிவுறுத்துகிறது. அவுஸ்திரேலியாவில் மட்டும்தான் சைக்கிளில் சவாரி செய்வோர் தலைப் பாதுகாப்புக் கவசங்களை விரும்பி அணிகின்றனர்.

# சிந்தியா பதில்கள்

டியர் சிந்தியா – உன் பதில்களில் தேன் சிந்துமா?

செல்வி ஜீவரானி
பேலியகொடை

*சுவைத்துப் பார்க்கு முன்பே அவசரப்படலாமா?*

சிந்தியா, நம் நாடு முன்னேற பெண்கள் பங்களிப்பு எப்படியானதாக அமைய வேண்டும்?

எம்.எச்.எம். சாஜித், கண்டி

*பெண்கள் நாட்டின் கண்கள் அல்லவா? கண்களே தூங்கிக் கொண்டிருந்தால் நாடு எப்போது சோம்பல் முறித்து எழுந்து கொள்வது? எம்மாலும் முடியும் என்பதை உணர்ந்து விழித்துக் கொள்ளட்டும். பின்னர் பங்களிப்புக்கள் யாதென்று புரியும்.*

கவர்ச்சி முக்கியமா சிந்தியா!

ஆர். ரகுதேவன்
பண்டாரவளை

*நீர் என்ன முனிவரா ரகுதேவன்.*

பிள்ளைகளின் மனநிலையைப்புரிந்து கொள்ளாத சில பெற்றோர்கள் பற்றி தாங்கள் கூறுவதென்ன?

ஆறுமுகம் விஜயகுமார்
நுவரேலியா

*அவர்களுக்கு ஐந்தில் வளைக்கவும் தெரியவில்லை. ஐம்பதில் வளையவும் தெரியவில்லை.*

ஹலோ சிந்தியா, நீங்கள் ஆணா, பெண்ணா?

செல்வன்–எம்–ஹயாத்
கொழும்பு–15

*ஹயாத், அதை அறிந்து நீர் என்ன செய்யப் போகிறீர? விண்ணப்பம் போடும் எண்ணமா?*

இளம் கலைஞர்களுக்கு உங்களின் ஒத்துழைப்புக் கிடைக்குமா?

ஏ.ஜே.எம். பைஸர்
கொழும்பு 12

*நிச்சயமாக கிடைக்கும் பைஸர்.*

சிந்தியா, எனது அபிமான நடிகர் சூப்பர் ரஜினி எடுத்துக் கொண்டிருக்கும் சொந்தப் படமான வள்ளி வெற்றி பெறுமா?

வி. உதயகுமார்
தெஹிவளை.

*ரஜனி நடித்து வெளிவரும் – எந்தப்படமும்- இன்றைய தேதியில் தோல்வியில் சுருண்டதில்லை. சூப்பர் ஹிட் ஆகாத படங்களும் கூட தயாரிப்பாளர்களின் கையைக் கடிப்பதில்லை. அமோக வெற்றி என்பது ரசிகர்களின் கையில் தான் இருக்கிறது.*

சத்தியராஜ் ஏன் எம்.ஜி.ஆர். பாணியில் நடிக்கிறார்? அவருக்கும் எம்.ஜி.ஆர் போல் முதல்வராக ஆசையோ?

ப. புவனேஸ்வரன்
தலவாக்கொல்ல

*இப்போது எந்தப் பத்திரிகையாளரைக் கண்டாலும் உங்கள் சத்தியராஜ் "கண்ணு சௌக்கியமா" என்று கேட்கமறந்தாலும், மறந்துவிடாமல் முதலில் சொல்வது இதுதான் – "நான் வாத்தியார் ஸ்ரைலை கைவிட்டுவிட்டேன்"*

எனது வயது 21, ஏழு வருடகாலமாக பெண்களை காதலித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு பெண் கூட என்னைக் காதலிக்கவில்லை. என் மனம் உடைந்து விட்டது. ஆறுதலடைய வழி சொல்லவும்.


எஸ்.டி. ரமேஸ், புத்தளம்.


*டியர் ரமேஸ்– "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்." பேரழகி கிடைப்பதற்காகத்தான் காலம் தள்ளிப் போகிறது என்று வைத்துக்கொள்ளுங்களேன்.*

டியர் சிந்தியா, கமலின் கலைஞன் வெற்றிப் படமா? அவரிடம் தற்போது உள்ள படங்கள் என்ன?

ஏ.சீம்ரான் ராஜேசகரன்
மகரகம







*தமிழில் சிவாஜிக்கு பின் வந்த கலைக்கூடம் கமல். கலைஞனில் அவர் வீணடிக்கப்பட்டிருந்தாலும் படம் வெற்றிதான். கதை விவாதங்கள் நடக்கின்றன. பெயர் சூட்டல் இன்னும் இல்லை.*

சிந்தியா! பதில் சொல்வதற்கு உங்களை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள்?

கரீம்ஸ், குருநாகல்

*எப்படி சமாளிப்பது என்பது எனக்குத் தெரியும் என்பதால் அறுத்துக் கொண்டிருக்காமல் இதையாவது செய்யட்டும் என்ற நல்ல நோக்கத்தால்.*

பெண்களை எந்த வகையில் திருப்திப்படுத்தலாம்?

எம்.சிரஜ் ஆப்டின்
கொழும்பு–2

*எந்த விசயத்தில்? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அணுகுமுறை உண்டல்லவா ஆப்டின்.*

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காதல் ஏற்படுவது போன்று, ஆணுக்கும் ஆணுக்கு மிடையே காதல் மலர வாய்ப்புண்டா?

து.ராம்குமார்.

*உண்டு. ஆண்-பெண் காதலில் காமமும் இருக்கும்- ஒரு பாலாருக்கிடையே நட்பில் மலரும் அன்பில் பரஸ்பர நேசம் இருக்கும். சிறந்த நட்புக்கு புராதன உதாரணம் மகாபாரத கர்ணன். நவீன உதாரணம் கியூபாவின் பிடல்கஸ்ரோ சேகவாரா நட்பு- விதிவிலக்கான உறவுகளும் உண்டு. எய்ட்ஸ் ஜாக்கிரதை.*

உங்களிடம் எவ்வாறான கேள்விகளைக் கேட்கவேண்டும்?

செந்தமிழ்ச் செல்வன்
சிலாபம்

*என்னை வெட்கப்பட வைக்காத கேள்விகளாக கேட்க வேண்டும்.*

இந்திய சஞ்சிகையான இந்தியா டுடே அருமையான இலக்கிய ஆண்டு மலரொன்றை வெளியிட்டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த படைப்புகள், அம்சமான கட்டமைப்பு. மொத்தத்தில் நிறைகள் அதிகம். தினமுரசு வாசகர்களுக்காக அதிலிருந்து ஒரு கதை முத்து— தமிழக எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் வண்ண நிலவன். அவர் எழுதியது. ஓவியம் வரைந்திருப்பது தமிழ்த் திரையுலகின் வெற்றிகரமான கலை இயக்குநர் தரணி. இனி கதை:

# பெண்ணின் தலையும் பாம்பின் உடலும்

பாவா அவளைக் கூட்டிக் கொண்டு போக வந்த போது மத்தியான மாயிருந்தது. மணி இரண்டு கூட இருக்கும். இந்த நேரத்துக்கு ஊருக்குள் வருகிற பஸ் கிடையாது. சிவந்திபுரம் வந்து அங்கேயிருந்து நடந்துதான் அவர் வந்திருக்க வேண்டும். தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டே, சாணம் போட்டு மெழுகியிருந்த திண்ணையில் உட்கார்ந்தார். வழுக்கை விழுந்திருந்த தலையில் துண்டால் ஒத்தியெடுத்தார். அனேகமாக முடிகள் உதிர்ந்து போயிருந்தன. இரண்டு காது மடல்களுக்கும் பின்னால் தலையைச் சுற்றி அரை வட்டமாக நரை முடிகள் மட்டும் கொஞ்சம் தலையில் ஒட்டிக் கொண்டிருந்தது மாதிரி இருந்தது.

எதிர்த்த வண்டிக்காரர் வீட்டுக் கூரை மேல் வெருகுப் பூனையொன்று மெல்ல நடந்து போய்க் கொண்டிருந்தது. வெள்ளையும் பழுப்பு முடிகளும் கலந்த அதன் திரேகத்தை வெயிலில் பார்க்க ரொம்ப அழகாக இருந்தது.

அவர். வந்ததுமே, ஸ்டால் வேலைக்குப் கூட்டிக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறார் என்பது தங்கத்துக்கும் பச்சைக்கும் தெரிந்து போயிற்று. அவரை "வாங்க" என்று கேட்டுவிட்டுத் தொடர்ந்து அரிசி புடைத்துக் கொண்டிருந்தாள் தங்கம்.




பச்சை அப்போதுதான் மேலத் தோட்டத்து பம்ப் செட்டில் குளித்து விட்டு வந்து தாவணி மாற்றிக் கொண்டிருந்தாள். மருந்து வரவில்லையென்று இரண்டு நாளாய் அவள் தீப்பெட்டி ஆபீசுக்கே போகவில்லை.

தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்து விட்டுப் பெரிய விருந்து சாப்பிட்டவர் மாதிரி நீளமாக ஏப்பம் விட்டார். தலையைக் கொண்டை போட்டுக்கொண்டே அவர் எதிரே உட்கார்ந்தாள் பச்சை. அவருடைய கண்கள் குழி விழுந்து போயிருந்தன. போன தடவை வந்திருந்த போது இருந்ததைவிட இப்போது ரொம்ப மெலிந்து போயிருந்தார். அவர் மேலே போட்டிருந்த மஞ்சள் ஜிப்பாவைக் கழற்றினால் உள்ளே எலும்புக்கூடுதான் இருக்கும் போல.

"நல்ல மத்தியான வெயில்ல வந்திருக்கேளே...." என்றாள் தங்கம்.

"ஆமா!.....சோலி இருக்கும் போது வெயிலப் பாத்தா முடியுமா?...." என்று சொல்லி விட்டு, எதிரே இருந்த பச்சையைப்பார்த்து, "என்ன, ஒனக்கு இன்னைக்கு வேலை இல்லியா?" என்று கேட்டார்.

"மருந்து இல்லைன்னு லீவு விட்டுட்டாங்க...." என்றாள் பச்சை.

"ஒன் வெசயமாத்தான் வந்தேன்..." என்று சொல்லி விட்டுத் தெருப்பக்கம் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார். "இந்தக் கனிப்பெயல சுருட்டு வேண்டிட்டு வர அனுப்பினேன்....ஆளக் காண மில்லய?....." என்று சலிப்புடன் சொன்னார். கனியும் அவருடன் வந்திருக்கிறான் என்றால் ஸ்டாலுக்குக் கூப்பிடத்தான் வந்திருக்கிறார் என்பது நிச்சயமாகி விட்டது. முகத்துக்குள் சுற்றிச் சுற்றி வந்த கொசுவை விரட்டிக் கொண்டே தங்கம், "என்ன, ஸ்டால் போடப் போறேளா?...." என்று கேட்டே விட்டாள். அவளுக்கு எதிரே தரையில் சிந்திக்கிடந்த குருணையை ஒரு குருவி பயந்து பயந்து கொத்திக் கொண்டிருந்தது.

"மாதா கோயில்ல கொடி ஏறியாச்சு!...நாளை செண்டு திருவிழா ஆரம்பிக்குது. அதுக்குத் தான் பச்சையைக் கூட்டிக்கிட்டுப் போலாம்னு வந்தேன். திருவிழாவுக்கு ஸ்டால் போடலாமுன்னு பாக்கேன்!..." என்று சொல்லி விட்டு, வீட்டினுள் திரும்பி, அரைகுறை வெளிச்சத்தில் தெரிந்த தங்கத்தின் முகத்தையே பார்த்தார் பாவா.

"அவ இப்பம் தீப்பெட்டியாபீசுக்குப் போயிக்கிட்டு இருக்காள...நேத்தும் இன்னைக்கியும் தான் மருந்தோ என்னம்போ வரலைன்னு வூட்டுல இருக்கா... அவள எப்பிடி அனுப்பட்டும்?...." என்று சடைத்துக் கொண்டாள்.

"ஒரு பத்தே பத்து நாப்பாடு!.... நெதசரி சாப்பாடு போவ பதினஞ்சு ரூவா சம்பளம் தந்திருதேன்!...."

"அவ போன தடவயே வரலன்னு சொன்னாளே...மருகி மருகிக் கூப்புடுதேளேன்னுதான் அனுப்பிச்சு வச்சேன். போயிட்டு வந்தம் பொறவு புள்ள ரொம்ப வருத்தப்பட்டாள். ஸ்டாலுக்கு வெளையாட வார ஆட்கள் ரொம்பக் கேலி பண்ணுதாவன்னு சொல்லி அழுதா..." என்று ஆற்றாமைப்பட்டாள் தங்கம்.

"வேணும்னே மேல வளையத்தைப் போடுதாங்க... அந்த மாதிரி எடத்துக்குத் திரும்பவர முடியுமா பாவா...?" என்றாள் எதிரே உட்கார்ந்திருந்த பச்சை.

"இந்தத் தடவை வளையம் போடுத ஸ்டால் இல்ல.. பாம்பு ஸ்டால் போடப் போறேன். கண்ணாடிக் கூண்டுக்குள்ள இருக்க வேண்டியதுதான்...." என்று சமாதானம் சொன்னார். ஒரேயடியாகத் தாயும் மகளும் முடியாதென்று சொல்லி விடுவார்களோ என்று அவருக்குப் பயமாக இருந்தது.

"மனுசத் தலையும் பாம்பு ஒடம்பும்தான?..... இப்பம் அத எல்லாம் யாரு பாக்க வாரா?..... போன வருசம் பொருட்காட்சில அந்த ஸ்டால் தான போட்டோம்.... வசூலே ஆகலையே.... நீங்கல்லா கைய வுட்டுக் காசு தர வேண்டியிருந்திச்சு...." என்றாள் பச்சை.

"இல்லை தாயி! இது கெராமாந்தரமான எடம்..... அதனால சனங்க வந்து பாக்கம்ங்க...நீ எதுக்கு அதப் பத்திக் கவலைப்படுத? நாம் பாத்துக்கிடுதேன்...." என்றார் பாவா.

அதற்குள் கனி சுருட்டு வாங்கிக் கொண்டு வந்து விட்டான். அவனைப் பார்த்ததும் "கனியும் ஸ்டாலுக்கு வாரானா?...." என்று வாசலருகே வந்து நின்று கேட்டாள் தங்கம். அவள் கேட்ட விதம் பச்சையை அனுப்பி வைக்கச் சம்மதித்து விடுவாள் போலிருந்தது.

"பின்னே?....அதான அவெனக் கூட்டிக்கிட்டு வந்திருக்கேன்....அவென் அப்பங்கிட்ட சொல்லிக் கூட்டிக்கிட்டுத்தானே நேரேஇங்க வாரேன்....." என்று சற்று நம்பிக்கையுடன் சொன்னார்.

வெகு நேரம் மன்றாடிய பிறகு, இதுதான் கடைசித் தடவையென்று சொல்லி தங்கம், பச்சையை அவருடன் அனுப்பி வைத்தாள். மூணு பேரும் புறப்பட்டுப் போகும் போது சாயந்தரமாகிவிட்டது.

"வாங்க சார்! வாங்க!.... வாங்கம்மா வாங்க!.... காண்பதற்கு அரிய காட்சியைக் காண வாருங்கள். பெண்ணின் தலையைக் கொண்ட பாம்பை எங்காவது பார்த்திருக்கிறீர்களா? அந்த அதிசயத்தை இங்கேயே இப்போதே பாருங்கள் ...... ஐம்பதே பைசா செலவில் அந்த அதிசயத்தைப் பார்க்க வேண்டாமா நீங்கள்? ...அழகான பெண்ணின் தலையைக் கொண்ட பாம்பின் உடம்பு.... இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அதிசயம். இந்த அதிசயத்தை அதிக செலவில்லாமல் வெறும் ஐம்பதே ஐம்பது பைசா செலவில் காண விரைந்து வாருங்கள். சினிமா நடிகை கவர்ச்சிக் கன்னி காஞ்சனாதேவி பார்த்துப்பாராட்டிய இந்த அதிசயத்தை குடும்பத்தோடு நீங்கள் பார்க்க வேண்டாமா?... ஐயாமாரே, அம்மாமாரே, சகோதர சகோதரிகளே! ஐம்பதே ஐம்பது பைசா செலவழிக்க மாட்டீர்களா? பெண்ணின் தலை... பாம்பின் உடம்பு...."



என்னெவல்லாமோ சொல்லி மெகாபோனில் அழைத்துக் கொண்டிருந்தான் கனி. ஆனால் ஸ்டாலுக்கு எதிரே, அவன் வயதையொத்த பையன்கள்தான் மேலே கட்டியிருந்த துணி பேனரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பெரிய ஆட்கள் பேனரைப் பார்த்ததுமே, கிண்டல் செய்து கொண்டு போனார்கள். பச்சை அக்கா சொன்னது சரியாகத்தான் போயிற்று.

ஆனால் பாவா, கனி விளம்பரம் சொல்லுகிற விதம்தான் சரியில்லை என்று நினைத்தார். "டேய்!.... சனங்களைப் பார்த்துச் சொல்லுடா.... மேல மானத்தப் பார்த்துச் சொன்னா ஆருக்குடா கேக்கும்?...." என்று அடிக்கடி அவனுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தார். அது அவனுக்கு ரொம்ப எரிச்சலாக இருந்தது. 'நீரு சொல்லித்தான் தெரியணுமாக்கும்' என்று அவன் முணுமுணுத்தது மெகாபோனில் கூட லேசாகக்கேட்டது.

மத்தியானம் மூணு மணிக்கு ஆரம்பித்தது. அவனும் இத்தனை நேரமாக மூச்சுவிடாமல் கத்திக் கொண்டு தானிருக்கிறான். யாரோ இரண்டு பட்டிக்காட்டு ஆட்கள் ஒரு ரூபாய் கொடுத்துப் பார்த்துவிட்டுப் போனதோடு சரி.

அவன் இன்னும் ஒரு சாயா கூடக் குடிக்கவில்லை. முதல் இரண்டு மூன்று நாட்கள் சாயந்தரம் நாலரை மணியானால், அவனை சாயாக்கடைக்குப் போய் ஒரு சாயா வாங்கிச் சாப்பிட்டு விட்டு, பாட்டிலில் அவருக்கும், உள்ளே கண்ணாடிக் கூண்டுக்குள் இருக்கிற பச்சைக்கும் சேர்த்து சாயா வாங்கி வரச் சொல்லுவார். இப்போது இரண்டு நாட்களாக அவரே ஸ்டாலுக்குப் பின்னால் ஸ்டவ்வைப்பற்ற வைத்து பால் விடாத சாயா போட்டுத் தந்து விடுகிறார். வரவர சாப்பாடு கூட ரொம்ப மோசமாகிவிட்டது. ஸ்டால் போட்ட அன்றைக்கும் மறுநாளும் கருவாட்டுக் குழம்பு வைத்ததோடு சரி. பிறெகல்லாம் மூணு நேரமும் வெறும் சோறும் மிளகாயும்தான். அவரைப் பார்த்தாலும் பாவமாகத்தான் இருக்கிறது. இந்த வருஷம் திருவிழாவில் வசூலே இல்லை. அவனுக்கும் பச்சைக்கும் பேசினபடி சம்பளத்தையாவது ஊருக்குப் போகும்போது தருவாரோ என்னவோ?

இன்று ஆறாம் திருவிழா. இந்த ஆறு நாளில் ஐம்பது ரூபாய் கூட வசூலாகவில்லை. ஜனங்கள் ரொம்பப் படித்து விட்டார்கள் போல. எளிதில் ஏமாந்து போகத் தயாராயில்லை. கேளிக்கையாக இருந்தாலும் கொடுக்கிற காசுக்குத் தகுமா என்று பார்க்கிறார்கள். காசைக் கணக்குப் பார்த்துச் செலவு பண்ணத் தெரிந்து கொண்டு விட்டார்கள். பெறுமதி இல்லாத கேளிக்கைக்கோ, விநோதத்துக்கோ யாரும் காசை அவிழ்க்கத் தயாராக இல்லை.

தவிர, இப்போதெல்லாம் திருவிழாவுக்குத் திருவிழா மரணக்கிணறு விளையாட்டுக்காரர்களும், மிருகக்காட்சிச் சாலைக்காரர்களும் தவறாமல் வந்துவிடுகிறார்கள். இதெல்லாம் போதாதென்று ராட்சஸ ராட்டினம் வேறு சுற்றுகிறது. போன வருஷமாவது கையில்லாத கண்ணம்மா சிலேட்டில் காலால் எழுதுவதையும், காலால் ஊசியில் நூல் கோர்க்கிறதையும், ஸ்டவ் பற்றவைப்பதையும் பார்க்கக் கூட்டம் வந்தது. இந்த வருஷம் அங்கேயும் கூட்டமில்லை என்று அந்த ஸ்டாலைக் குத்தகைக்கு எடுத்திருக்கிற செவல்காரர் சொல்லிக் கொண்டிருந்தார். பாவம், கையில்லாத பெண் இவ்வளவு வேலையையும் கஷ்டப்பட்டுச் செய்கிறதே என்ற இரக்கம் கூட ஜனங்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

கனி மெகாபோனில் கூப்பிடுகிறது போதாதென்று, பாவாவும் போகிற வருகிறவாகளையெல்லாம் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். கனி தன் வேலையில் ரொம்பக் கவனமாக இருந்தான். இப்போது தன் விளம்பரத்தில் 'சூப்பர் ஸ்டார் சுரேஷ் காந்த்



**தமிழ் திரையுலகில் மட்டுமல்ல- தமிழ் உலகத்திலும் தடம்பதித்தவர் கவியரசு கண்ணதாசன். அவரது புலமைக்கு காரணம் பழந் தமிழ் இலக்கியங்களோடு இருந்த பரிச்சயம். அவரது ஆக்கங்கள் அனைத்தும் இன்று நூல்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்காக எடுத்துத் தருவது இலக்கியக் காதல் என்னும் புத்தகத்தில் (பொட்டகத்தில்) இருந்து.**

கணவன் தாசி வீடு சென்றான்.

வந்தாரிடம் மயங்கி, வருவாரை வழி பார்த்து நிற்கும் அந்தத் தாசி, அவனைப் பள்ளிக் கழைத்தாள்; பஞ்சணையில் அமர வைத்தாள்; வெற்றிலை கிள்ளிக் கொடுத்தாள்; வேண்டும் கனி தந்தாள்; தங்கப் பதுமையென மலரணையில் சாய்ந்தாள்; பொங்கிவரும் காமத்தைக் கண் வழியே கொட்டினாள்; அந்தச் சிங்க வடிவினன் முகத்தைத் தன் முகத்தில் சேர்த்தாள்; கிள்ளினாள், துள்ளினாள்! கிளர்ச்சி பெற வைத்தாள்.

பின்....

வெள்ளத்தினோடொரு வெள்ளமுமாய், அவர் வீணையும் நாதமுமானார்!

கலவி நடுப் பாதியிலே காதல் பேசினார்!

ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவெரனும் தோற்ற மின்றி மகிழ்ந்தார்!

ஈரிரண்டு நான்கு பூக்கள் புல்லிதழிற் போயொடுங்க, தமை மறந்து பூரித்தார்!

நலம்பாடி இரவு சென்றது; பொழுது விடிந்தது. வேண்டும் போது இன்பம் விளைக்கும் அந்த மடந்தையை விட்டுக் கணவன், வீடு திரும்பினான்.

நாணுகின்ற பெண்ணாள் - நலம் பாடும் கிள்ளை மொழி- தேன் சொரியும் மலரினத்தாள்- தித்திக்கும்- செங்கரும்பு- 'வருவார் கொழுநர்' எனத் திறந்ததும், 'வாரார் கொழுநர்' என அடைத்ததும், திருகும் குடுமி தேய வழி பார்த்த விழியும் ஓய , கால்கள் தள்ளாடிச்சாய, மலரணையில் விழுந்து கிடந்தாள்.

கணவன் கதவைத் தட்டினான்; கண்மணி திறந்தாள். உள்ளே வந்த கணவன், தன் நடத்தையை மறைக்க அவளருகில் சென்றான். சமாதானம் கூற முயன்றான்.

'கண்ணே' என்றான்; கனி மொழி பேசினான். கட்டியணைக்கப் போனான்; அவள் எட்டி எட்டி நடந்தாள். வெட்டிப் பேசாத வேல் விழியாள் அவன் விருப்பத்தைத் தட்டி நடந்தாள்.

# என்னைத் தொடாதே

தொட்டுப் பேசி அவளைத் துவள வைத்தால் தான், தன் கள்ளத்தனத்தை அந்தக் கற்பின் செல்வி மன்னிப்பாள் எனக் கருதி, பலவந்தமாகக் கட்டிப் பிடிக்கப் போனான்.

கண்களில் பொறி பறக்க அந்தத் தமிழ் பெருமாட்டி அவனைப் பார்த்து, "தூர நில்" என்றாள்.

"ஆ! கற்பு என்னாவது? கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்; கணவன் எங்கே சென்று வந்தாலும் மனைவி அடங்கி நடக்க வேண்டும்; தாசி வீடு சென்று வந்த கணவனைத் தாள் பணிந்து வரவேற்றாள் கண்ணகி! அதல்லவா கற்பு அப்பொழுதே" என்று சீறுவர். சினப்பர் ஒரு சாரார் கற்பில் ஊறிய பெரியோர்.

ஆனால் தீண்டாதே என்று தன் கணவனுக்கு ஆணையிட்ட அந்தத் தலைவி தான் சீர்திருத்த யுகமும் ஒப்புக்கொள்ளக் கூடிய மாபெரும் கற்பினள். கண்ணகியின் கற்பு தங்கம் என்றால், இந்தத் தலைவியின் கற்பு வைரம் பதிக்கப்பட்ட தங்கம்.

'கற்பு நெறியென்று சொல்ல வந்தால்- இரு கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்' என்றான் பாரதி. அதைத் தான் செயலில் காட்டினாள் நான் குறிப்பிடும் தலைவி, அவள் ஏகம்பவாணணின் மனைவி.

***வேண்டிய போதின்பம் விளைக்கும் மடந்தையரைத்***
***தீண்டியகை யாலென்னைத் தீண்டாதே - பாண்டியா***
***முல்லைக் கதிபாப முகம் பார்த் தகலநின்று***
***சொல்லக் கடவெதலாஞ் சொல்!***

"முகம் பார் தடையில்லை, ஆனால் தொடாதே , உன் கை, வேண்டியபோது இன்பம் விளைக்கும் மடந்தையரைத் தீண்டிய கை!

நான் உன்னையே எண்ணி, உன் கரம் பற்றி ஒரு துளி நினைவும் வேறு புறம் செல்லாமல் உன்னுடன் வாழும் உத்தமி. களங்கத்தில் பட்ட உன் கரம், என் மாசறு மேனியைத் தொட அருகதையற்றது.

சொல்ல வேண்டியதை எட்டி நின்று சொல். நீ கெட்டுப் போனவன்!"

பெண் கெட்டால் ஏற்க மறுக்கிறதே சமுதாயம், ஆண் கெட்டால் மட்டும் எப்படி ஏற்பது?

விவாதத்திற்கு வந்தாலும் இது தங்கும், தலை தூக்கி நிற்கும்.

இந்தக் கற்பு கண்ணகியின் கற்பைப் போல் அடங்கி நடக்கக் கூடிய கற்பு. அதே நேரத்தில் கணவனிடம் களங்கம் கண்டால் ஆணையிடும் கற்பு.

இப்படி ஒரு அன்னை இருந்தது- இருந்ததாகக் காணப் படுவது- தமிழ் பண்பாட்டுக்கே பெரும் சிறப்பு.



# கத்தரித்த கடி ஜோக்ஸ்

**அவன்:** இங்கிலாந்து கிரிக்கட் வீரர்களில் பிரகாசமானவர் யார்?
**அவள்:** தெரியாது
**அவன்:** அலன் லாம்ப்

■

**பாபு:** நான் ஹோம் வேக் கொடுத்தால் செய்ய மாட்டேன்.
**கோபு:** ஏன்?
**பாபு:** நான் ஹொஸ்ரல்லதானே தங்கி இருக்கேன்.

■

**ஆசிரியர்:** கல்லைத் தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடும் அது ஏன்?
**மாணவன்:** அதுக்கு நீச்சல் தெரியாது.

■

**அவன்:** பிக்பொக்கட் காரனுக்குப் பிடிச்ச காய் என்ன?
**அவள்:** தெரியேல்லையே.
**அவன்:** 'கத்தரி'க்காய்

■

**பாபு:** முதல்ல ஒரு மாத்திரை சாப்பிட்டேன். சரியாக வில்லை. இரண்டாவது மாத்திரை சாப்பிட்டேன் சரியாகி விட்டது.
**கோபு:** முட்டாள், அந்த இரண்டாவது மாத்திரையை முதலிலையே போட்டிருக்க வேணும் நீ.

■

**அவன்:** அன்பே அமெரிக்காகாரன் சந்திரனுக்குப் போனானாம். நாம் ஏன் சூரியனுக்குப் போய் காதலர் சரித்திரம் ஒன்றை ஏற்படுத்தக் கூடாது?
**அவள்:** ஐயையோ சூரியன் ரொம்ப சூடான கிரகமாம்.
**அவன்:** அன்பே அறிவில்லாமல் பேசுகிறாய். நாம் அங்கே இரவில் தானே போய் இறங்கப் போகிறோம்.

■

**அவர்:** உங்கள் மகனால பெரிய தலைவலியாக இருக்கிறதென்று சொன்னீர்களே! இப்போது சரியாக இருக்கிறதா?
**மற்றவர்:** ஆமாம் சரியாகி விட்டது.
**அவர்:** எப்படி?
**மற்றவர்:** நல்ல வைத்தியர் ஒருவரிடம் காட்டினேன். சரியாகி விட்டது.

■

**பாபு:** கோவலன் மனைவிக்குக் கண்ணே தெரியாது.
**கோபு:** எப்படியடா சொல்லுகிறாய்?
**பாபு:** அவ கண் 'நஹி' ஆச்சே. (இந்தி மொழியில் நஹி என்பதற்கு இல்லை என்று பொருள்)

■

**நண்பர்:** சைக்கிள் உயரமா இருக்கெண்டு சொன்னியே என்ன ஆச்சு?
**மற்றவர்:** காற்றைக் கழட்டி விட்டன் சரியாப் போச்சு.

■

**மாலா:** அமெரிக்க ஜனாதிபதி பழத்தை மட்டும் தான் சாப்பிடுவாராம்.
**நீலா:** ஏனாம்?
**மாலா:** அவர் 'கிளி' ண்டன் ஆச்சே

■

**நீலா:** எளிதில் தீப்பிடிக்கும் பழம் எது?
**மாலா:** தீய பழம்.
**நீலா:** யூ ஆர் ரோங். முந்'திரி'ப் பழம்.

■

**வாணி:** நேற்றுப்பூரா ஒரே வயிற்று வலி.
**ராணி:** வயித்தில் ஒண்ணுமில்லையெண்டா வயிற்று வலி வரும்.
**வாணி:** நீ ஒரு பக்கம்,தலைவலி.
**ராணி:** தலையில ஒண்ணுமில்லையெண்டா தலை வலி வரும்.

■



ரசித்துப் பாராட்டிய பெண்ணின் தலையைக் கொண்ட வினோதப் பாம்பைக் காண குடும்பத்தோடு வாருங்கள்' என்று அழைத்துக் கொண்டிருந்தான். தன் குரலைக் கூட ஒரு பிரபலமான அரசியல் தலைவருடையதைப் போல மாற்றிக் கொண்டிருந்தான். ஒரு வெறியுடன் வயிற்றை எக்கி எக்கிக் கத்திப் பேசிக் கொண்டிருந்தான்.

பாவாவுக்குக்கூட அவனுடைய சாதுர்யமான பேச்சு திருப்தியாகத்தானிருந்தது. என்ன இருந்தாலும் அவர் முதலாளியல்லவா? அவ்வளவு லேசில் தன் திருப்தியைக் காட்டி விட முடியுமா என்ன?

"லே மக்கா!.... கூட்டத்தைப் பார்த்துச் சொல்லு மக்கா!...." என்று அவனை விரட்டிக் கொண்டிருந்தார்.

தலை துண்டிக்கப்பட்டுப் பதப்படுத்தப்பட்ட மலைப் பாம்பின் உடலோடு பொருந்தியிருக்கும்படியாய், தன்தலையை மணிக்கணக்கில் ஆடாமல் அசையாமல் வைத்திருப்பது பச்சைக்கு அலுத்து விட்டது. அதுவும் அவள் முகத்துக்குப் போடப்பட்டிருந்த மட்டமான மேக்கப் பவுடர் கலவை காய்ந்து போய் இறுகக் கவ்விப் பிடிப்பது போலிருந்தது. யாராவது ஆட்கள் வந்து போய்க் கொண்டிருந்தாலாவது நேரம் போகும். எவ்வளவு நேரம்தான் கண்ணாடிக் கூண்டுக்குள் தலையை வைத்துக் கொண்டு வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பது? எப்போதாவது காற்றில் தூக்கிக் கொள்ளும் டெண்ட் துணிக்குக் கீழே, வெளியே போய்க் கொண்டிருக்கிறவர்களின் கால்கள் மட்டும் தெரியும். மரணக் கிணற்றில் கூட்டம் சேர்ப்பதற்காகப் போடும் சினிமா பாட்டுக்களைக் கூடக் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. அதே பாடல்களைத் தான், அதுவும் அதே வரிசையில் தான் திரும்பத் திரும்பப் போடுகிறார்கள். வந்த இரண்டாவது நாளிலேயே வசூல் ஆகாது என்று தெரிந்து போயிற்று. 'ஊருக்குப் போகணும்' என்று எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்து விட்டாள். 'ஆறாம் திருவிழா தங்கச் சப்பரம் வரும். ரொம்பக் கூட்டம் வரும்' என்று சொல்லித் தடுத்துவிட்டார்.

இன்று ஆறாம் திருவிழாதான். ஆனால் இவ்வளவு நேரமாகியும் ஒரு ரூபாய்க்குத்தான் டிக்கெட் விற்றிருக்கிறது. இன்னும் பாவா சாயா கூட வாங்கித்தர வில்லை. இப்படி வந்து மாட்டிக்கொண்டு விட்டோமே. கண்ணாடிக் கூண்டுக்குக் கீழே அவள் இருப்பதற்காகத் தோண்டியிருந்த பள்ளம் ரொம்ப சிறியது. அதில் உடம்பை நுழைத்து மண்டி போட்டுக்கூனிக் குறுகி உட்கார்ந்தே இருந்தது வேறு உடம்பெல்லாம் வலித்தது. பதினைந்து ரூபாய் சம்பளத்துக்குப் போய் என்னபாடுபட வேண்டியதிருக்கிறது.

பாவா எப்போதும் ஸ்டாலுக்கு முன்பக்கம் தான் படுப்பார். படுக்கிறதுக்காக மடக்குக் கட்டிலொன்று கொண்டு வந்திருந்தார். பச்சையும் கனியும் ஸ்டாலுக்கு உள்ளே கண்ணாடிக் கூண்டுக்குப் பக்கத்தில் சாக்கை விரித்துப்படுத்துக் கொள்வார்கள். அவர்களோடு தலை துண்டிக்கப்பட்ட மலைப்பாம்பின் உடல், வளைந்து நெளிந்து கண்ணாடிக் கூண்டுக்குள் பார்க்கக் கோரமாகக் கிடக்கும்.

வழக்கம் போல அன்று பத்து மணிக்கு மேல் மூணுபேரும், மத்தியானம் பொங்கித் தண்ணீர் விட்டு வைத்திருந்த பழைய சோற்றைத் தின்றுவிட்டுப் படுத்துக் கொண்டார்கள்.

மறுநாள் காலையில் பாவா எழுந்தபோது, கண்ணாடிக் கூண்டுக்குள் தலையை இழந்த, பதப்படுத்தப்பட்ட அந்த மலைப் பாம்பு மட்டும் வளைந்து நெளிந்து கிடந்தது. பச்சையையும் கனியையும் காணவில்லை. வெளியே தேடிப்பார்த்தார். நேரம் ஆக ஆக அவர்கள் ஓடிப்போய் விட்டார்கள் என்பது உறுதியாகிவிட்டது. பாவாவுக்கு அழுகை வந்தது.

■

## சொன்னார்கள்

- கோபத்துடன் எழுந்திருப்பவன் நஷ்டத்துடன் அமருகிறான்.
- பலவந்தன் பத்து தைரிய சாலிகளைப் பயந்தாங்கொல்லிகளாக ஆக்கி விடுவான்.
- நீங்கள் செல்வத்தைக் காக்கிறீர்கள். அறிவோ உங்களைக் காக்கிறது.
- செல்வந்தர்களுக்கு விரோதிகள் அதிகம். அறிஞர்களுக்கு நண்பர்கள் அதிகம்.
- கொடுக்கக் கொடுக்கப் பெருகுவது அறிவு குறைவது செல்வம்.
- பலர் கூடியிருக்கும் போது ஒருவருக்கு அறிவுரை கூறாதே.
- தெரியாதவற்றைத் தெரிந்தவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வெட்கப்படாதே.
- தற்பெருமை உள்ளத்தில் விஷத்தைக் கலந்து விடுகிறது.
- சினமுள்ளோரே தற்பெருமை கொள்வர்.
- பேசுபவனைக் கவனியாதே அவன் பேச்சைக் கவனி.

தொகுத்தவர்:எம்.டபிள்யூ.பாருக்
கொழும்பு-12


அடுத்தவாரம்- அசத்தப் போகும் அம்சங்கள்!

முத்தான சிறுகதைகள் மூன்று

லேடீஸ் ஸ்பெஸல்

உங்கள் குழந்தையும், நீங்களும்

சமைப்போம் சுவைப்போம்

பாப்பா முரசு+படக்கதை

தூரத்து நாகரீகம்

சினி விசிட்- புத்தம் புதிய சினிமா செய்திகள்- வண்ணக்கலரில்

உலக அதிசயங்கள்— இது ஒரு வித்தியாசமான புதிய பகுதி

தேன் கிண்ணம்

வாசகர் கவிதைகளை ஏந்திவரும் புதிய பகுதி மற்றும் இளமைத் துடிப்புள்ள அம்சங்களோடு தயாராகிக் கொண்டிருக்கிறது.

பிரதிக்கு முந்துங்கள் பிரமிப்புக்குத் தயாராகுங்கள்.

# பாப்பா முரசு

## முதலை நாட்டாமை



"குழந்தைகளே, இப்ப நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன் கேளுங்கள்" என்று சொன்ன தாத்தா கதை சொல்ல ஆரம்பித்தார்.

நாட்டுப்புறத்து மக்கள் ஒவ்வொரு பிராணிகளின் வித்தியாசமான உருவ அமைப்பையும், பழக்க வழக்கங்களையும் பார்த்து அதற்கும் கற்பனையாக ஒரு கதையைக் கட்டி இருக்கிறார்கள்.

கோழி தன் அலகால் கொத்தி, காலால் கிளறிக் கிளறி குப்பையைக் கிண்டுவதைப் பார்த்து அதற்கும் ஒரு 'கதை கட்டி' இருக்கிறர்கள்.

அது மாதிரித்தான் எலி தன் வளையில் தானியங்களைச் சேகரிப்பதற்கும் ஒரு கதை இருக்கிறது.

ஒரு காட்டுல ஒரு எலியும், ஒரு குருவியும் சேக்காளியாக (நண்பர்களாக) இருந்தன. அந்தக் காட்டுக்குப் பக்கத்துல இருந்த வயல்ல நெல் கதிர் விளைந்து கிடந்தது.

எலியும் குருவியும் சேர்ந்து, நெல் விளைந்து கிடந்த வயலுக்குப் போய் அங்கிருந்து சிறிது தானியங்களை எடுத்து வந்து சேமித்தன.

வயலில் அறுவடை முடிந்தது. அதன்பின் எலியும் குருவியும் தான் சேர்த்து வைத்திருந்த நெல்மணிகளைப் பங்குபோட ஆரம்பித்தன.

பங்கு போடும்போது எலிக்கும் குருவிக்கும் சண்டை வந்தது. எலி: "நான்தான் அதிகமாகச் சேமித்தேன். எனக்குத்தான் அதிகப் பங்கு வேண்டும்" என்றது. குருவியும் அதே போல சொன்னது. எனவே இருவருக்கும் சண்டை முற்றியது.

தரையில் வாழும் பிராணியான எலி அதன் இனத்தைச் சேர்ந்த தலைவரான சிங்கத்திடம் போய் முறையிட்டது.

அதே போல குருவியும் வானத்தில் பறக்கும் தன் பறவை இனத்தின் அரசனான கழுகிடம் போய் முறையிட்டது.

எனவே, எலிக்குச் சாதகமாக சிங்கம் படை எடுக்க, அதை எதிர்த்து குருவிக்குச் சாதகமாக கழுகு படை எடுக்க காட்டில் பெரிய யுத்தமே ஆரம்பித்து விட்டது.

பறவைகள் பறந்து, பறந்து தாக்கி பல மிருகங்களைக் கொன்று குவித்தன. மிருகங்களும் பாய்ந்து, பாய்ந்து சண்டை போட்டு சில பறவைகளைக் கொன்று குவித்தன.

இப்படியாக, வனத்திலிருக்கும் மிருகங்களும், வானத்திலிருக்கும் பறவைகளும் ஒன்றுக்கொன்று சண்டை போட்டு மாய்வதைக் கண்ட நீர் வாழினங்களின் ராஜாவான முதலை ரொம்ப வருத்தப்பட்டது.

சிங்கப் படைக்கும் , கழுகுப் படைக்கும் நடைபெறும் சண்டையை தான் நாட்டாமையாக இருந்து தீர்த்துவைக்க விரும்புவதாகச் சொல்லி அனுப்பியது முதலை.

முதலையின் தீர்ப்பை ஏற்பதாக சிங்கமும், கழுகும் சொல்லி வழக்கைக் கொண்டுவந்தன. வழக்கை விசாரித்த முதலை நாட்டாமை கடைசியில் "எலி , இனிமேல் தான், தனியாகச் சென்று தானியங்களைச் சேகரித்து தனக்கென ஒரு வளையைத் தோண்டி அதில் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். அதே போல குருவியும், தன்னால் இயன்றால் தனக்குத் தேவையான தானியங்களைத் தன் கூட்டில் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். சேமிக்க இயலவில்லை என்றால் அன்றைக்கு தனக்குத் தேவையான உணவைத் தேடிக்கொள்ள வேண்டும். இப்போது ஏற்கனவே அவை ரெண்டும் சேமித்து வைத்திருக்கும் தானியங்களைச் சமமாகப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்" என்று தீர்ப்புக் கூறியது.

முதலை நாட்டாமையின் தீர்ப்பை எலியும் குருவியும் ஏற்றுக் கொண்டன. அன்றிலிருந்து எலி தனக்குத் தேவையான உணவை தனக்கென ஒரு 'வளை' தோண்டி அதில் சேகரிக்க ஆரம்பித்தது.

குருவி அன்னாடம் (அன்றன்று) கிடைத்ததைச் சாப்பிட்டுக் காலங்கழிக்க ஆரம்பித்தது என்று கதையைச் சொல்லி முடித்தார் தாத்தா.

### மகிழ்ச்சியான செய்தி

**பாப்பா முரசிற்கு நீங்களும் கதை-கவிதை-கட்டுரை போன்றவற்றை அனுப்பிவையுங்கள். அவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.**

## புதிர் கதை — எ. சோதி

### குர்– ஆன் இல்லையா? நூலகத்தைக் கொளுத்து

மொகலாய மன்னர் ஒருவரால் அலெக்சாந்திரியா நகரம் கடும் போருக்குப் பின் கைப்பற்றப்பட்டது. வெற்றி பெற்ற அம்மன்னர் அந்நகரத்தில் இருந்த உலகப் புகழ்பெற்ற நூல் நிலையத்திற்குள் நுழைந்தார். பல ஆயிரக்கணக்கான நூல்கள் அங்கே இருந்தன. தலைமை நூலகர் மன்னரை உரிய சிறப்போடு வரவேற்றார்.

மதப்பற்று மிக்க அம்மன்னர், "நூலகரே! நாங்கள் குர்–ஆனை மட்டுமே நம்புபவர்கள். இங்கே இரண்டு வகையான நூல்கள் தான் இருக்க முடியும். ஒன்று குர்–ஆன் கருத்துக்கள் உள்ள நூல்கள்; மற்றொன்று அதற்கு மாறான கருத்துக்கள் உள்ள நூல்கள். குர்–ஆன் இருக்கும் போது அதே கருத்துக்கள் உள்ள வேறு நூல்கள் எதற்கு? மாறான கருத்துக்கள் எங்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதனால் அந்த நூல்கள் எதற்கு? ஆகையால் இங்குள்ள நூல்கள் எல்லாவற்றையும் அழிக்கப் போகிறேன். உன்னுடைய பதில் என்ன?" என்று நூலகரைப் பார்த்துக் கேட்டார்.

அறிவு நிறைந்த அந்த நூலகர் அங்குள்ள நூல்கள் அனைத்தையும் பாதுகாக்கக் கூடிய பதில் ஒன்றைக் கூறினார்.

அது என்ன பதிலாக இருக்கும்?

நீங்களும் யோசித்துப் பாருங்கள். விடை அடுத்த முரசில்!

## "மாறட்டும் சட்டம் வாழட்டும் மனிதம்"

**—திலகவதி— தமிழ் நாட்டின் முதல் பெண்போலிஸ் அதிகாரி. சிறந்த இலக்கியவாதி. காக்கி உடைக்குள் இருக்கும். கலை இலக்கிய நெஞ்சில் இந்த சமூகம் மீதும் நிறையக் கோபம். அவரது கருத்துக்கள் சில:**



***இன்றைய சமூகம் சமூக ஒழுங்கை நிலைநாட்டும் சட்டங்கள் குறித்து........***

சட்டம் என்பது இலக்கியத்துக்கு இலக்கணம் மாதிரி. இலக்கியம் வளரும். அதைத் தொடர்ந்து இலக்கணமும் வளர வேண்டும். அதைவிடுத்து, இதுதான் இலக்கணம்; இலக்கியம் இதுக்குள் மட்டுமே இருக்க வேண்டும் என்று கட்டுப்படுத்துவது தவறு! முடியாது. உலகம் என்பதும், சமூகம் என்பதும், மானுடம் என்பதும் காலத்திற்கு காலம் மாறிவருகிற அமைப்புகள்.

15ம் நூற்றாண்டில் இருந்த மாதிரி இப்போது 20ம் நூற்றாண்டில் இருக்க முடியுமா? இல்லையே! எவ்வளவு மாறியிருக்கிறோம். அன்று ஆடம்பரங்கள் என்று கருதப்பட்ட சாதனங்கள் இன்று அத்தியாவசியங்களாக மாறியிருக்கின்றன. மனிதன் உன்னதமானவன். அவனை அனுசரிச்சு, அவன் சந்தோசத்துக்காகவும் வசதிக்காகவும் சமூக அமைப்பும் சட்ட திட்டங்களும் இருக்க வேண்டும்.

*பெண்களின் இன்றைய நிலை*

பெண்களுக்கு கஷ்டங்கள் அதிகம். ஏன் எனில், தமது சொந்த வாழ்க்கையைப்பற்றிக்கூட அவர்கள் முடிவு எடுக்க முடியாது. இந்தநிலை மாறி, பெண்கள் எல்லோரும் ஆண்களை அடிமையாக்க வேண்டும் என்ற கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. இதைப்பற்றி பல தமாஷான கதைகள் வந்துள்ளன. ஆனால் யாரும் யாரையும் அடிமைப்படுத்துகிற அமைப்பு சரியாக இருக்காது.

## அழகு பேரழகாக வேண்டுமா?

தொப்பை விழுகிறதா? உடனே இந்தப் பயிற்சியைச் செய்யுங்கள் பிளீஸ்.

இரண்டு கைகளாலும் கால் முட்டியை மடக்காமல் குனிந்து தரையைத் தொடவேண்டும். வெறும் வயிற்றில் இந்தப் பயிற்சியை செய்வது முக்கியம். 50 தடவை பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். எடுத்த எடுப்பில் செய்யாமல் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பிக்கலாம்.

☆☆☆

பாதிநரை-பாதி கருப்பு முடி உள்ளவர்கள் அதற்கு டை அடித்துக் கொண்டு வெய்யிலில் போகும் போது சில இடங்கள் பழுப்பாக வாய்ப்புண்டு.

தொடர்ந்து இரசாயன டை பாவித்தால் கண்கள் பழுதாகும் வாய்ப்பும் உண்டு.

☆☆☆

வேப்பிலை- கருவேப்பிலை பொன்னாங்காணி ஆகியவற்றை எண்ணெயாகக் காய்ச்சி பயன்படுத்தினால் தலை நரைக்கும் சாத்தியம் குறையும்.

☆☆☆

## சகோதரி! அச்சம் தவிர்!!

**உன் வயதை**
**நீ எண்ணி**
**உருக்குலையாதே!**

**அன்பு காட்ட**
**எவருமில்லை**
**என நினைக்காதே!**

**மின்னிவரும்**
**வாழ்வினிலே**
**மோகங்கொள்ளாதே!**

**அண்மி (த்து) வரும்**
**கேடுகளில்**
**சிக்கிவிடாதே!**

**சீதனந்தான்**
**அனைவருமே**
**கேட்பர் என்று**

**ஆதனந்தான்**
**இல்லையென்று**
**அவதிப்படாதே!**

**இன்றுனக்குத்**
**துன்ப மழை**
**பெய்த போதிலும்**

**வருமொருநாள்**
**உன்வாழ்வில்**
**தென்றல் வீசிடும்.**

**சோதரி நீ**
**எப்போதும்**
**சோகம் கொள்ளாதே......**

**அச்சம் தவிர்**
**எழுந்துவிடு**
**சூழ் கவலை**
**தொலைத்துவிடு!**

**-பலப்பிட்டி அரூஸ்-**

## லேடீஸ் ஸ்பெசல்

### ஆலோசனைகள் சில

* இஞ்சி-பூண்டு ஆகியவற்றைத் தட்டியோ அரைத்தோ சமையலுக்குச் சேர்க்கும்போது அவற்றின் தோலை அகற்றி விடக்கூடாது. தோலுடன் சேர்த்தே தட்டி அல்லது அரைத்துப் போடவேண்டும். அப்பொழுதுதான் அவற்றின் முழுமையான மணத்தையும், ருசியையும் பெற முடியும்.
* புளியை நீண்ட நாட்கள் வைத்துக் கொள்ள பானையில் போட்டு வைக்கவும். பானையின் அடியில், புளியைப் போட்டு அதன் மேல் கொஞ்சம் உப்பைத் தூவினால் புளி கெடாமல் இருப்பதோடு, காய்ந்து போகாமலும் இருக்கும்.
* தக்காளி அழுகி விட்டதா? தூர எறிய வேண்டாம். இரும்பு, அலுமீனிய, பித்தளைப் பாத்திரங்களில் கறை படிந்தால், தக்காளியைத் தேய்த்து அலம்ப கறை நீங்கிப் பளபள வென்றிருக்கும்.
* பட்டுத்துணிகள் மற்றும், உயர் ரகத் துணிகள் துவைத்திடும் போது ஒரு ஸ்பூன் வினிகரை கலந்து துவையுங்கள். துணியின் பளபளப்பு குறையாமல் இருக்கும்.

# ஒதுங்கிக் கொள்கிறாள் ஒரு தமிழ்ப் பெண்!

**-முகில் வண்ணன்-**



அந்தக் கடிதம் கிடைத்ததில் இருந்து அந்தத் தாய் பதறித் துடித்துக் கொண்டு திரிகின்றாள். என்ன செய்வது என்று தெரியவில்லை. தனது வயிற்றிலே பிறந்ததொன்றுக்கு ஏதும் என்றால் எந்தத் தாயால் தான் பொறுத்துக் கொள்ள முடியும்?

கொழும்பிலே அவளைத் திருமணம் செய்து வாழக் கொடுத்ததும் போதும் தான் படும் கஷ்டமும் போதும் என்று எண்ணியது அவள் உள்ளம். காலம் சீராக இருந்தபோது அடிக்கடி யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து அவளைப் பார்த்துச் சென்றாள். இப்போது கடந்த மூன்று வருடங்களாக வர முடியவில்லை. கஷ்டமான வழிப் பயணங்கள் அவளைத் தடுத்து நிறுத்தி இருந்தன. ஆனால் அதற்கிடையில் மூன்றாவது குழந்தையையும் தனியே பெற்று எடுத்து விட்டாள். இந்த முறைதான் பத்தியம் காக்க வைக்க அரைத்துக் கறி சமைத்துக் கொடுக்க அவளால் செல்ல முடியவில்லை.

'என்ர மோள் மூன்று குஞ்சானோட என்ன பாடுபடுகிறாளோ' என்று எண்ணாத நேரமில்லை அந்தத் தாயுள்ளம். அப்படி இருக்கும் போது இப்போது இந்தக் கடிதம். யாரோ வருபவர்களிடம் கொடுத்து அனுப்பி இருக்கிறாள். குழந்தை பிறந்து ஐந்து மாதம் இருக்கும்.

'அந்தக் கடிதத்தை ஒருக்காப் படிமோனை' என்று இளையவள் மங்களாவிடம் கூறினாள்.

'என்னம்மா எத்தனை தரம் படிக்கிறது? எனக்குப் பாடமாய் போயிடும்' என்றவாறு கடிதத்தை எடுத்துப் படிக்கிறாள்.

அன்புள்ள அம்மாவுக்கும், தங்கைக்கும்,

எனக்கு உடம்பு சரியான சுகம் இல்லை. அவரையும் குழந்தைகளையும் என்னால் இதோடு கவனிக்க முடியவில்லை. எனக்குத் தெரியும்

உங்களுக்கு வீட்டையும் காணி மாடுகளையும் விட்டுவர முடியாது என்று. அப்படி நீங்கள் வரமுடியாவிட்டால் தங்கச்சியை என்றாலும் அனுப்பி வையுங்கள். அவ்வாறு நீங்கள் வரத் தவறும் பட்சத்தில் எனது பிணத்தில் கூட விழிக்க முடியாமல் போகும்.

இப்படிக்கு
அன்பு மகள்
மங்கையற்கரசி.

இவ்வளவுதான் விடயம்.

"எடி மோனை அவளுக்கு ஏதோ கஷ்டம் போல கிடக்கு அது தான் இப்படி எழுதி இருக்கிறாள். ஏதும் பாரதூரமான வருத்தமாகக் கிடக்கிறாளோ என்னவோ. ஒருக்காப் போய்ப் பார்த்து வரலாமென்றால் இந்தக் கிளாலிப் பாதைப் பயணக் கஷ்டம் நினைத்தால் குடலே நடுங்குது. சும்மா போற சனத்தையுமல்லோ வெட்டிப் போடுகினம். போறதுக்கு வேற வழியும் இல்லை. இதால செத்துச் செத்துப் போறத்தைவிட நான் கடலிலே விழுந்து செத்துப் போவன். நீ ஒருக்காப் போய் கொக்காவைப் பார்த்து வந்தாலென்ன?" என்றாள்.

கடிதத்தைப் படித்ததில் இருந்து அந்த எண்ணக் கனவுகளிலே லயித்துப் போய் இருந்தாள் மங்களா. தன்னோடு படித்த எத்தனை பெண்கள் கல்யாணம், வெளிநாட்டுப் பயணம் என்று குடாநாட்டை விட்டு வெளியேறி கொழும்புக்குச் சென்று இருக்கிறார்கள். ஒரு சிலர் வெளிநாடு செல்ல மற்றவர்கள் கொழும்பிலே தங்கி நிற்பதாகக் கேள்வி. தனக்குத் தான் இன்னும் கல்யாணம் காட்சி என்று எதுவும் அமையாவிட்டாலும் கொழும்புக்கு என்றாலும் சென்று வரலாம் என்ற ஆசை துளிர்விட்டிருந்தது.

ஆசையை அடக்கிக் கொண்டு கேட்டாள். "எப்படி நான் தனியே போறது?" என்று.

"ஏன் தனியே போக? ஒரு நாளைக்கு எத்தினைபேர் போகினம். அவர்களோடு சேர்ந்து போறதுதான். தெரிந்தவர்கள் யாரும் போவினம் தானே!"

"அது சரி நாங்க பவுண் கட்டவில்லையே. எப்படிப் பாஸ் எடுக்கிறது. அதுவும் எனக்குப் பாஸ் தருவாங்களா?"

"ஒரு சோடிக் காப்பைக் கொடுப்பம். என்ர மகளையும் பிள்ளைகளையும் பார்க்காம இதெல்லாம் தேடி வைச்சு என்ன பயன்? எல்லாம் அதுகளுக்குப் பிறகுதானே! நீ எண்டாலும் போய்ப் பார்த்து வந்தா அவளுக்கு ஒரு ஆறுதலாக இருக்கும்" என்றாள்.

அடுத்து சில நாட்களில் பவுண் கட்டி ரசீது பெற்றுக் கொண்டு பாஸ் எடுக்கும் விடயமாக ஓடித்திரிந்தாள். ஒரு கிழமை அங்கும் ஓடித்திரிந்து கை ஒப்பங்கள் வாங்கிக் கொடுத்ததில் ஒருவாறு பாஸ் வழங்கப்பட்டது. யாருடன் போவது என்ற கேள்விக்கு பாஸ் எடுக்கும் போதே விடை கிடைத்தது. தங்கள் தூரத்துச் சொந்தம் ஒன்று அனைத்தையும் எழுதிக்கொடுத்து விட்டு கொழும்பு செல்லவிருந்தனர். அவர்களுடன் செல்வதாக ஏற்பாடு. மகளுக்கும் மருமகனுக்கும் என்று ஆசையாகச் சில பொருட்களைத் தாயார் தயாரித்துக் கொடுத்து இருந்தாள். முட்டை மா, ஒடியல் மா, பருத்தித்துறை வடை என்பன அவற்றில் சில. தன்னால தூக்கிப்போக ஏலாது என்று பலவற்றை ஒதுக்கி விட்டாள் மங்களா.

அவர்கள் புறப்படும் அன்று அவர்களிடம் கொண்டு சேர்த்தாள். "மகள் சாமான்கள் கவனம். கவனமாகப் போய்ச் சேர். சேர்ந்ததும் கடிதம் போடு. பொடியள் கவனமாகக் கொண்டு சேர்ப்பினம் பயப்படாதை." என்றவள் அவர்களிடம், "இவள் பிள்ளைக்கு கொழும்பைப் பற்றி ஒண்டும் தெரியாது. தயவு செய்து வீட்டு விலாசத்தில கொண்டுவிட வேணும்" ஆட்டோ செலவை பிள்ளை கொடுப்பாள். காசு கொடுத்து விட்டிருக்கிறன். அங்கையும் அவளுக்கு என்ன கஷ்டமோ நல்லூர் முருகனே நீதான் காப்பாத்த வேணும்" என்று கூறி அழுதாள்.

"நீங்க ஏன் அழுறீங்க? அவளும் எங்கட பிள்ளைபோல தானே, நாங்க கூட்டிக்கொண்டு விடுறம். நீங்க கவலை இல்லாமல் போங்கோ" என்று அனுப்பி வைத்தார்கள்.

"கவனம் மகள் கவனம் மகள்" என்றுபலமுறை சொல்லி விட்டுச் சென்றாள் அந்தத் தாய்.

பலத்த சிரமத்தின் பின்னர் கொழும்பு வந்து சேர்ந்தாள் மங்களா. அவர்கள், வீட்டில் கொண்டு விட்டனர். வீடென்றதைப் பார்த்து அதிர்ந்து போய் இருந்தாள் மங்களா. நடுங்கும் பலகைப் படியில் குத்தென ஏறிச் செல்ல வேண்டும். மேல் மாடியில் ஒரு பெரிய அறை. அதை நடுவில் கதவில்லாத தடுப்பு பிரித்து இருந்தது. அதற்குள்ளேயே குசினியும் சமையலும் நடந்து கொண்டிருந்தது. தண்ணீருக்கும் கக்கூசுக்கும் கீழே இறங்கி வர வேண்டும். அதுவும் பொதுவாக அமைந்து இருந்தது. இதற்கும் அட்வான்ஸ் 35 ஆயிரம். வாடகை ஆயிரத்தி ஐந்நூறு என்று கூற மூச்சு நின்று விடும் போல் இருந்தது மங்களாவுக்கு.

"நீ இதற்கே வியப்படைகிறாய் இது நாங்கள் மாறி இருக்கும் மூன்றாவது வீடு. ஏற்கனவே இருந்ததைப் பார்க்க வேண்டுமே! அதற்கு இது வசதியாக இருப்பதால்தான் இதற்கு வந்தோம்" என்றாள் மங்கை.

போளினில் நின்று கக்கூசுக்குப் போய் குளித்துவிட்டு வந்து உடுப்பு மாற்றினாள்.

"என்னக்கா வருத்தம் என்றும் வராவிட்டால் உயிரை விட்டு விடுவேன் என்றும் பயம் காட்டி எழுதியிருந்தாய். இங்கு ஒன்றையும் காணோம்" என்றாள் மங்களா.

"நீ வந்ததும் தான் நான் ஒழுங்காக மூச்சு விடுகின்றேன். நீ வந்து முதலில் சாப்பிடு. பிறகு ஆறுதலாப் பேசுவோம்" என்றாள் மங்கை. இப்படிக் கூறினாலும் எப்படி.... தொடங்குவது என்று தான் புரியவில்லை.

வழமையான ரூட்டின் வேலைகள் நடைபெற்றன. 'எப்படி மங்களா ஊர்ப் புதினங்கள். மாமி எப்படி சுகமா?' என்று கேட்டுவைத்தார் அத்தான், கந்தோருக்குப் புறப்பட்டுக் கொண்டு.

"எதுக்கும் நீங்கள் கந்தோருக்குப் போயிட்டு வாங்களன்" எல்லாம் இயந்திர கதியில் நடந்தன. அத்தான் சாப்பிட்டு விட்டு மதியச்சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். பிள்ளைகள் சாப்பிட்டு விட்டு கீழே விளையாடச் சென்று விட்டார்கள்.

எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு 'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்ட மங்கை சொன்னாள். "இனி இரவுச் சாப்பாட்டுக்குத் தான் வேலை. அதுவரை ஓய்வு மத்தியானத்துக்கு அத்தானுக்குச் சமைப்பதுடன் எங்களுக்கும் சமைத்துப் போடுவேன்... இனி ஆறுதல் தானே" என்றாள்.

ஊர்ப் புதினங்களை பகல் முழுவதும் மாறிமாறிக் கேட்டு கதைத்துக் கொண்டிருந்தார்கள். புற்றுக்குள் இருந்து பாம்பு எட்டிப்பார்ப்பது போல் அடிக்கடி 'அக்கா ஏன் அப்படி எழுதினாள்?, என்ற எண்ணம் பேசிக்கொண்டு இருக்கும் போதும் வந்து சென்றது.

மதியம் சாப்பிட்டு விட்டு பிள்ளைகளையும் தூங்க வைத்து விட்டு இருவரும் சற்றுச் சாய்ந்தனர். மங்களா பிரயாணக் களைப்பில் கண்ணயர்ந்த போது 'மங்களா' என்றாள் மங்கை.

'என்னக்கா?' என்று விழித்துக் கொண்டாள்.

"நீ எனது தங்கை என்பதை மறந்து ஒரு தோழி போல் சொல்கிறேன். தவறாக எடுத்துக் கொள்ளாதே. அத்தானுக்கு எந்தக் கெட்ட பழக்கமும் இல்லை என்று நீ அறிவாய். ஆனால் அத்தான் என்மீது புரியும் பலாத்காரத்தைத்தான் என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை"

"என்னக்கா சொல்லுகிறாய்?" என்று எழுந்து அமர்ந்தாள் மங்களா. ஆனால் மங்கை கண்ணை மூடிக்கொண்டு தரையில் படுத்தபடி பேசிக் கொண்டிருந்தாள். தங்கையைப் பார்த்துப் பேச வெட்கமாக இருந்தது போலும்.

"ஆமாண்டி அவருக்கு எப்போதும் நான் வேணும். ஆனால் என்னால் வலியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தினமும் என்றால் எப்படிப் பொறுப்பது? ஆரம்பத்தில் போகப் போக சரிவரும் என்று யாரிடமும் சொல்லாமல் பொறுத்து இருந்தேன். பின்னர் ஒரு பிள்ளை பெறும் வரை என்று காத்திருந்தேன். ஒன்றென்ன மூன்றாகியும் எனக்கு இந்த வதை போகவே இல்லை. அதுதான் நீங்கள் யாரும் கூட இருந்தால் இதில் இருந்து தப்பிக் கொள்ளலாம் என்று வரச் சொன்னேன். இல்லை என்றால் வலி பொறுக்க முடியாமல் நான் தற்கொலைதான் செய்து கொள்வேன். எனக்கு இப்போதெல்லாம் அப்படித் தான் இருக்கிறது" என்றாள்.

மங்களாவும் மெல்லச் சாய்ந்து விட்டாள்.

"எங்கே பிழை என்று எனக்கு விளங்கவில்லை. பொருத்தம் பார்த்துதானே எனக்குக் கல்யாணம் செய்து வைத்தார்கள். 80 வீதம் பொருத்தம் என்றால் எல்லாப் பொருத்தமும் பொருந்தி இருக்க வேண்டுமே. பொருந்தாதவற்றில் யோனிப் பொருத்தமும் ஒன்றாக இருக்குமோ என்னவோ? ஏன் இப்படிச் செய்தார்கள் என்று எனக்கு விளங்கவே இல்லை. நான் ஒரு தமிழ்ப் பெண்ணாயிற்றே என்ன செய்வேன்?" என்று கலங்கினாள்.

அக்கா தன் கஷ்டத்தை வாய் திறந்து சொன்னதும் வாய்மூடி மௌனியானாள் மங்களா. என்ன தான் அவளால் பேச முடியும்? எப்படி இவர்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியும்? தன்னை அல்லது அம்மாவை ஒரு தடையாக உபயோகிக்க எண்ணி இருக்கிறாள் என்பது மட்டும் விளங்கியது. இதற்குள் எப்படிப் படுப்பது? அவளுக்குப் புதிராக இருந்தது.

மூன்று நாட்கள் கடந்து விட்டன. அக்காவும் தங்கையும் ஒன்றாக பிள்ளைகளுடன் படுத்தனர். அத்தான் பின்கட்டில் படுத்தார். நாலாம் நாள் 'மங்களா நீ பின்கட்டில் பிள்ளைகளுடன் போய் படு' என்றார் அத்தான். அவளால் எதுவும் பேச முடியவில்லை.

"தங்கச்சி வந்திருக்கிறாள் பேசாமல் படுங்கள்...." ஐந்து ஆறு என்று நாட்கள் நகர்ந்தன. தான் எதிர்பார்த்தது வெற்றி என்று எண்ணினாள். ஏழாம் நாளும் கூறிவிட்டுப் படுத்துத் தூங்கி விட்டாள். நடுச்சாமத்தில் பேச்சரவம் கேட்டு விழித்தாள். அத்தானை பக்கத்தில் காணவில்லை. மங்களா விசும்பும் ஒலி கேட்டது. அதற்குப் பிறகு மங்கை தூங்கவே இல்லை.

காலையில் எழுந்து முழுகி விட்டுத் தலைவிரி கோலமாக ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டாள். வழமையான காலை வேலைகள். அத்தான் காரியாலயம் செல்வது எல்லாம் நடந்தேறியது. ஆனால் அக்காவும் தங்கையும் தான் பேசவில்லை

அத்தான் வேலைக்குப் போனதும் அக்காவும் தங்கையும் கட்டிப் பிடித்து அழுதனர். "என்னைப் பாதுகாக்கப் போய் உன்னை இழந்து விட்டேனே! இனி என்ன செய்வேன்?" என்று அழுதாள் மங்கை.

அடுத்து ஒரு கிழமைக்கு அத்தான் தன்னை நாடாததில் மங்கை புரிந்து கொண்டாள். மங்களாவும் வேதனைப்பட்டதாகத் தெரியவில்லை. தவறாகத் தங்கையின் சாதகத்தைக் கொடுத்துப் பொருத்தம் பார்த்தார்களோ என்ற சந்தேகம் வந்தது அவளுக்கு இப்போது. ஆமாம் அத்தான் அவளுக்கே பொருத்தமானவர் என்ற எண்ணம் வலுப்பெற்றது.

மூன்று நாட்களின் பின்னர்.

"அத்தான் நான் இரவுக்கு ஊருக்குப் போறன். மங்களா உங்களுடன் இருப்பாள். நான் போய் அம்மாவைப் பார்த்திட்டு வாறன். நேரத்தோட வந்திடுங்க ரெயில்வே ஸ்டேசனுக்குப் போக வேண்டும் என்றாள்.

"அக்கா.........!" என்றாள் மங்களா.


"மங்களா இந்தச் சில நாட்களிலே அத்தான் உனக்குத்தான் பொருத்தமானவர் என்று அறிந்து கொண்டேன். எங்கோ திருத்த முடியாத பிழை ஏற்பட்டுவிட்டது. நீயும் உன் வாழ்க்கையைப் பாழக்கிக் கொண்டாய். அது என்னால் வந்தது. எனக்குத்தான் தண்டனை தர வேண்டும். அது தான் நான் ஒதுங்கிக் கொள்வது என்று தீர்மானித்தேன். கவலைப்படாதே நான் பங்கு போட வரமாட்டேன். நீ அத்தானோட சந்தோசமாயிரு. நான் குழந்தைகளுடன் ஊர் போய்ச் சேர்ந்து அம்மாவுக்கு எல்லாம் விளக்கமாகச் சொல்லுகிறேன். ஆனால் ஒன்று என்னைப் போல் நாலரை வருடத்தில் மூன்று குழந்தைக்குத் தாயாகாமல் பாதுகாப்பு நடவடிக்கையை கைக்கொள்.

"அக்காவின் வாழ்க்கையை பாழ்படுத்திவிட்டேன் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் எண்ணி வருந்தாதே. எனக்கு நீ தந்தது விடுதலை. நான் அடைய முடியாது என்று எண்ணித் தவித்த விடுதலை. இதை எண்ணி நான் பெருமைப்படுவேனே தவிர கலங்க மாட்டேன்" என்று கூறித் தங்கைக்கு முத்தமிட்டு கண்ணீரைத் துடைத்துவிட்டாள்.

தன்னை விட்டு இறுதியாகப் பிரிகிறாள் என்று அறியாத கணவன் அவளையும் பிள்ளைகளையும் கோட்டை ரெயில் நிலையத்தில் வழியனுப்பி வைத்தான்.

பிள்ளைகள் 'டாட்டா' காட்ட ரெயில் மெல்லவே ஊரத் தொடங்கியது. நெஞ்சில் சுமையில்லாமல் ஒதுங்கிக் கொள்கிறாள் தமிழ்ப் பெண்.





# அதிர வைக்கும் அந்தரங்க நாட்குறிப்பு

(சென்ற வாரத்தின் தொடர்:-)

**மதியம் 1.30**


வேறு வாகனங்கள் எங்களைச் சூழ வரவில்லையானால் நான் அவரது கவனத்தை ஈர்ப்பதற்காக எனது மேல் சட்டையை சற்றுத் தளர்த்திக் கொள்வேன். என்கிறாள் ஜினி.

ஜினியின் கணவர் டெவின் தனது அனுபவம் ஒன்றை பில் டொனாஹீ தொலைக்காட்சி நேயர்களோடு பகிர்ந்து கொண்டார். அவரது அனுபவம் சுவாரசியமானது.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் அவர் வீதியில் சென்று கொண்டிருந்த போது அவரது அருகில் ஒரு வாகனம் வந்து நின்றது. அது ஒரு விளம்பரத் துறையைச் சேர்ந்த வாகனம். அந்த வாகனத்தில் இருந்து கவர்ச்சியான இளமங்கை டெவினை நோக்கி இறங்கி வந்தாள். அவள் திடீரென்று தனது மேலங்கியினை விலக்கியபடி .........

"வாரும், எங்களுடைய புதிய போக்கினை வந்து பாரும்" என்று தன் இளமையை கண்ணுக்கு விருந்தாக்கினாள். டெவினுக்கு அவள் அவ்வாறு செய்தது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அச்






சம்பவத்தைப்பற்றி ஜினியிடம் விபரித்தார். அவ்வாறு செய்வது டெவினுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று புரிந்து கொண்டு ஜினியும் இப்போது அதே முறையைக் கையாளுகிறாள்.

**பிற்பகல் 2 மணி**

இல்லம் சென்று சுத்தமாகக் குளித்தவுடன் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

"எங்கள் மகன் சிறுவனாக இருக்கும் போது அவன் பாடசாலையில் இருந்து வீடு திரும்புவதற்கிடையில் எமது லீலைகளை முடித்து விடுவோம். இப்பொழுது அவன் வளர்ந்து விட்டான். தானாகவே தன் கருமங்களைப் பார்க்கக் கூடியவனாக இருக்கிறான்" என்கிறார் டெவின்.

இப்போது எமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள போதிய அவகாசம் கிடைக்கிறது என்கிறார் ஜினி.

**மாலை 4.30**

ஜினி தனது அலுவலகத்துக்குச் செல்லுகிறாள். டெவின் தனது தொழில் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களோடு உரையாடுகிறார்.

**இரவு 7.30**

இரவு உணவை முடித்துக் கொண்டு டெவின் ஜினி தம்பதியின் மகன் தனது நண்பர்களோடு வெளியே சென்று விடு வான். ஜினி சமையல் அறையில் பாத்திரங்களை கழுவுவதில் ஈடுபடுவாள்.

"நான் அவளின் பின்புறமாகச் சென்று அவளுடைய கழுத்தில் முத்தமிடுவேன். வேளை வந்து விட்டது என்பதனை அவள் அறிவாள்" என்கிறார் டெவின்.

"நான் அவரது அழைப்பை புரிந்து கொள்வேன். வேண்டுமென்றே பாத்திரங்களைக் கழுவுவது போல் தாமதம் செய்வேன். சில நேரங்களில் தாமதப்படுத்துவதும் ஆசையை அதிகமாக்கி விடுகிறது" என்கிறாள் ஜினி.

இருவரும் குளியலறையில் ஒரே தொட்டியில் ஒன்றாகவே குதிப்போம். அது எங்களுக்குப் புத்துணர்வினைக் கொடுக்கிறது என்கிறார் டெவின்.

குளித்து முடித்தவுடன் இன்பக் கடலில் குளிக்க சென்று விடுகிறார்கள்.

**இரவு 9 மணி**

நண்பர்களைச் சந்திக்கும் நேரம். அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு உரிய நேரம்.

"ஜினி ஓர் அதிசயமான பெண். நாள் முழுவதும் அலுவலகக் கடமைகளில் ஈடுபட்டு எனது மூளை களைத்துப் போய் இருக்கும். சமயத்தில் நடமாடக் கூட முடியாத நிலையில் நான் இருப்பேன். ஆனால் அவளோ மேலும் வலுவுள்ளவளாக மாறி விடுகிறாள்" என்று டெவின் கூறுகிறார்.

"அவள் மீது நான் மாபெரும் மதிப்பு வைத்திருக்கிறேன். சகல பெண்களையும் நான் மதிக்கிறேன்" என்கிறார்.

**இரவு 11 மணி**

தூங்கும் நேரம். ஜினி மாலை நேரப் பணி புரிகிறவள். டெவின் காலையில் தொழிலுக்குச் செல்லுகின்றவர். ஆயினும் தூங்கச்செல்லும் போது இருவரும் ஒன்றாகவே கட்டிலறைக்குச் செல்லுகிறார்கள்.

"அன்போடு முத்தங்களைப் பரிமாறிக் கொள்ளுவோம். பின்னர் உடல்கள் பேசிக் கொள்ளும். கலத்தல் முடிந்ததும் நான் தூங்குவேன். ஜினி விழித்திருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காண்பாள்."

**பின்னிரவு 2 மணி**

"சில சந்தர்ப்பங்களில் இரவு



வேளைகளில் இருவரும் விழித்துக் கொள்ளுவோம். அப்போதும் கலத்தலில் ஈடுபடுவோம். ஆனால் அது தினசரி நிகழ்ச்சியல்ல. என் இனிய துணைவி களைப்படையக் கூடாது என்று நான் கவனமாக இருப்பேன்." என்கிறார் டெவின்.

"உடலும் உள்ளமும் கலந்தது தான் மகிழ்ச்சியான வாழ்க்கை. இத்தகைய உறவு வைத்துள்ள எங்களைப் போன்ற தம்பதியினர் இன்பத்துக்காக வேறு இடங்களுக்கு ஏன் செல்லப் போகிறார்கள்?" என்று வினவுகிறார் ஜினி.

"நாங்கள் ஒருவரை ஒருவர் எப்போது பார்க்க நேர்ந்ததோ அன்று முதல் இன்று வரை ஒருவருக்கொருவர் உண்மையானவர்களாகவே வாழ்ந்து வருகிறோம். செக்ஸ் என்பது வாழ்க்கையின் இனிய பகுதி. அதனைப் புரிந்து கொள்ளாத தம்பதியினர் பலர் வீணான மனக் கிலேசங்களுக்கு உள்ளாகின்றனர்" என்று டெவின் கூறுவதோடு அவர்களது தொலைக்காட்சிப் பேட்டியும் முடிவடைகிறது.



---

# காமன் தொடுக்கும் கணைகள்

**டாக்டர் லவ் அமெரிக்காவின் நியூயோர்க் நகர வானொலியில் செக்ஸ் பிரச்சினைகள் குறித்து தனியான சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ் பெற்றவர். காதல் உறவில் மகிழ்ச்சி அடைவதற்கான வழிமுறைகளை பற்றி இறுக்கமான ஐம்பது கேள்விகளுக்கு அவர் பதில் அளித்துள்ளார். அவற்றில் மிக முக்கியமான கேள்விகளையும் பதில்களையும் இங்கே தொகுத்துத் தருகிறோம்.**




கேள்வி: பாலியல் தொடர்புகள் பெண்களை விட ஆண்களுக்குத் தான் பிரதானமானதா? எனது சிநேகிதி அப்படித்தான் கூறுகிறாள்.

பதில்: நிச்சயமாக இல்லை. உணர்வுகளின் அளவுகள் ஒவ்வொருவருக்கும் மாறுபட்டு இருக்கும். சில சந்தர்ப்பங்களில் ஆண்களை விடப் பெண்கள் அதிகமான உணர்வுத் தூண்டுதல் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

கேள்வி: எனது கணவர் மிகவும் உற்சாகமாக காதல் உறவில் ஈடுபடுவது போல் தெரியவில்லை. அதனால் இன்புறும் நேரமும் குறைவாகவே இருக்கிறது. என்ன செய்யலாம்?

பதில்:- கலத்தலில் ஈடுபடுவதற்கு முன்னர் மகிழ்வூட்டும் செயல்பாடுகளில் நீங்கள் இருவரும் ஈடுபட வேண்டும். சராசரி 20 முதல் 30 நிமிடம் வரை அது நீடிக்கட்டும். இதழால் கவிதை எழுதுங்கள். உணர்வுத் தந்தியின் இனிய நரம்புகளை மீட்டுங்கள். நீங்கள் தயாராகும் வரை அவரை அடுத்த கட்டத்திற்குச் செல்ல அனுமதிக்காதீர்கள்.



கேள்வி:காதல் இன்பம் அனுபவிப்பதற்கு ஏற்ற சரியான நேரத்தை நாங்கள் இனிமேல் பெறமுடியாது போல் தோன்றுகிறது. எனது துணைவர் ஆசையோடு காத்திருக்கும் நேரத்தில் நான் குழந்தைகளின் அலுவல்களைக் கவனித்துக் கொண்டு இருப்பேன். நான் படுக்கைக்குச் செல்லும் போது அவர் தூங்கிவிடுவார். நாங்கள் இருவருமே களைப்படைந்து இருப்போம். ஏதாவது யோசனைகள் தரமுடியுமா?

பதில்:- காதல் இன்பம் பெற வேண்டிய தினத்தை தனியாக ஒதுக்கி அதற்காக திட்டமிடுங்கள். உங்கள் குழந்தைகளை பாட்டன் பாட்டியரிடமோ அல்லது நண்பர்களிடமோ ஒப்படையுங்கள். பூமி அதிர்ச்சி தவிர வேறு எதுவுமே உங்களுடைய திட்டங்களை ஒத்தி வைக்காதிருக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

கேள்வி:- எனது கணவருக்கு வேலைப்பழு அதிகரித்து விட்டது. அதனால் காதல் உறவில் நாட்டம் இன்றி இருக்கிறார். இப்பிரச்சினையில் இருந்து அவரை மீட்டெடுக்க நான் எத்தகைய உதவியினைச் செய்யலாம்?

பதில்:- அவருக்குள்ள பழுவின் தாக்குதலில் இருந்து அவரை மீட்பதற்கு எதையெல்லாம் செய்ய முடியுமோ அவை அனைத்தையும் செய்யுங்கள். விடுமுறைகளுக்கு மகிழ்ச்சியான வெளி இடங்களுக்குச் சென்று வாருங்கள். பழுவை எப்படிக் குறைக்கலாம் என்று திட்டம் இடுங்கள்.

கேள்வி:- வயது வந்தோருக்கான வீடியோ படங்களைப் பார்ப்பதன் மூலம் தான் அதிக காதல் லீலைகளைப் புரிய முடியும் என்று எனது கணவர் விரும்புகிறார். இத்தகைய படங்கைளப் பார்ப்பது எனக்கு நல்லதாகத் தென்படவில்லை. நான் என்ன செய்யலாம்?

பதில்:- அவர் அப்படங்களைத் தானாகத் தனிமையில் பார்க்கட்டும். இது முதல் அம்சம். அடுத்ததாக பெண்களுக்குரிய காதல் லீலைகளைக் காட்டும் படங்களை நீங்கள் பார்க்கலாம். நியூயோர்க்கில் இத்தகைய தரமான வீடியோப் படங்கள் கிடைக்கின்றன. இப்படங்கள் எவ்வளவு அழகாகவும் மகிழ்வூட்டுவதாகவும் இருக்கின்றன என்பது உங்களுக்கு வியப்பை அளிக்கும்.



# டிஸ்கோ நடனமும் ஜப்பான் யுவதிகளும்

இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபோது ஜப்பானின் கதையும் முடிந்துவிட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள்.

ஆனால்–சோர்வின்றி துடிப்போடு உழைத்த ஜப்பான் மக்கள் உலகில் அதிசிறந்த கைத்தொழில் நாடாக அதனை மாற்றியமைத்துள்ளனர்.

இப்போது ஜப்பான் நாட்டு இளைய தலைமுறையிடம் நிறைய மாற்றங்கள். மேற்குலக நாகரிகம்மீது மோகம் ஏற்பட்டு வருகிறது.

ஜப்பான் நாட்டுப் பெண்களின் பாரம்பரிய உடையான 'கிமோனா' ஆண்கள் அணியும் 'யுகத்தா' போன்றவை கைவிடப்பட்டு, நவநாகரீக உடைகள் மீது கவனம் சென்றுள்ளது.

நகரங்களில் விபச்சார விடுதிகள். அங்கு வாடகைப் பெண்கள் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஜப்பான் நாட்டு யுவதிகளும் உண்டு.

திரையரங்குகளில் நிர்வாணப் படங்கள் ஆக்கிரமிப்பு செலுத்தத் தொடங்கியுள்ளன. இத்திரைப்படங்களில் தோன்றுவதற்கு 15–35 வயது வரையிலான யுவதிகள் பயன்படுத்தப்படுகின்றனர். எழில் கொஞ்சும் மேனிகளை காட்சிப் பொருளாக்க அவர்கள் வாங்கும் சம்பளம் ஒர தடவைக்கு ஆக, 3 1/2 இலட்சம்!

ஜப்பானில் இருக்கக்கூடிய அதிக சுதந்திரத்தை காதலர்களும் தமது கையில் எடுத்துக் கொள்ளுகின்றனர்.

பகிரங்க இடங்களிலும் காதல் சாகசங்களை காட்டத் தொடங்கி விட்டார்கள். யார் கண்டாலும் கவலையில்லை. பாடசாலை மாணவிகள் தங்கள் சீருடைகளில் இருந்துகொண்டே காதல் சாகசங்களில் ஈடுபடுவதுதான் கொடுமை. ஆனால் அதுவும் பகிரங்கமாக தொடர்கிறது.

ஜப்பானில் ஆண்களை விட பெண்களே அதிக சுதந்திரத்தை அனுபவிக்கத் துடிக்கின்றனராம். வாயாடித்தனமும் குறும்புத்தனமும் கோலோச்சுகின்றன.

அமெரிக்கா மீது ஜப்பான் நாட்டவர்களுக்கு பிடிப்புண்டு.



வேறு நாட்டவர்களை விட அமெரிக்கர்களையே ஜப்பான் யுவதிகள் விரும்புகின்றனராம்.

அமெரிக்கர்களோடு சுற்றுலாப் போவதற்கு ஜப்பான் யுவதிகள் கூட்டம் கூட்டமாக நிற்கிறார்களாம்.

அமெரிக்கரிலும் அங்கு உள்ள கறுப்பினத்தவர்களை யுவதிகள் அதிகமாக அணைக்கத் துடிக்கின்றனர். கறுப்பினத்தவர்கள் காதல்லீலைகளில் கில்லாடிகள் என்று நினைக்கிறார்கள்.

ஜப்பான் நாட்டின் இயற்கை சூழல் நிறைந்த இடங்கள் காதலர்களின் களியாட்ட அரங்கங்களாக மாறிவருகின்றன. எங்கே போனால் வசதி என்பதையும் ஜப்பான் யுவதிகள் முன்கூட்டியே அறிந்து வைத்துக் கொள்கிறார்களாம்.

டிஸ்கோ நடனம்– அதுவும் எப்படி என்கிறீர்கள்? பாம்புகளை யுவதிகள் தங்கள் உடலில் சுற்றிக்கொண்டே ஆடுகிறார்கள். அதை அவர்களோடு சுற்றுலாச் செல்லும் அமெரிக்கர்கள் ரசிக்கிறார்கள். ரசிப்பது பாம்புகளை அல்ல. பாவையர்களை. பாம்புகளோடு பாவையர் படும்பாட்டை. ரசிப்பதற்கு கூலி கிடையாது. ஒரு இரவை அவர்களோடு கழிக்க வேண்டும். அதுபோதும் எப்படியும் ஆடுவார்கள்.

ஜப்பானின் இளைய தலைமுறையின் சீரழிவு அந்தநாட்டின் கலாசாரம் மீது பற்றுக் கொண்டவர்களை கவலையடைய வைத்துள்ளது.

(சேர்லி அனில் எழுதிய– டோக்கியோ நகரம் என்ற கட்டுரையில் இருந்து)




# தூரத்து நாகரிகம்

## கவர்ச்சிப் புயல்



உலக அரங்கில் பெண் பாடகிகளில் ஒரு கவர்ச்சிக் குயில் சமந்தா ஃபொக்ஸ்.

செக்ஸ் விடயங்களை விலா வாரியாக விபரித்து, அத்தோடு நின்றுவிடாமல் அதிரவைக்கும் போஸ் கொடுத்து உலகைக் கலக்கியவர் பாடகி மடோனா.

அந்த மடோனாவையும் கவாச்சி புயலாக எழுந்து அச்சுறுத்தும் பாடகிதான் சமந்தா ஃபொக்ஸ்.

**உண்மைக் கதை**

## நள்ளிரவுக் காதலன்

என்னதான் வீரமாக, "மாங்குயில்
கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும்
சிறைச்சாலை என்று பாடினாலும்–

சிறைவாசத்தை யாருமே நேசிப்பதில்லை.
பூட்டிய கதவு எப்போது திறக்கும்–

வெளியுலகக் காற்று எப்போது நம் சுவாசத்திற்கு கிடைக்கும்
என்று–

சிறைப்பட்டோர் ஏங்கிடுவர்.
வேதனையில் வெந்திடுவர்.

ஆனால்– நம் அயலகம் இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில்–
சிறைப்பட்ட காளைக்கு அதுவே
சொர்க்கமானது.

"சிறைவாசம் முடிந்தது; போ வெளியே" என்றார்கள்
சிறைக்காவலர்கள்.

"முடியாது, முடியவே முடியாது"
என்று அடம்பிடித்தான் அந்தக்காளை.

வெளியே உள்ள சிலரை கழுத்தைப்பிடித்து 'போ உள்ளே'
என்று சிறையில் தள்ளுவது உண்டுதான்– இவனை
உள்ளிருந்து வெளியே தள்ளிடும் நிலை அன்றோ எமக்கு!

என்று எண்ணியபடி அவன்
கழுத்தைப் பிடித்து சிறையை விட்டு விரட்டினார்கள்
காவலர்கள்.

அவனை எப்படியோ விரட்டிவிட்ட
நிம்மதியில் அன்றிரவு காவலர்கள் விழிகளை
மூடியவேளையிலே கேட்டதுவாம் அந்தச்சத்தம்.

துடித்தெழுந்த காவலர்கள்–தாம் தூங்கியஅறைக்குள்
பதுங்கியிருந்த உருவத்தை பாய்ந்து பிடித்தனராம்.
என்னே ஆச்சரியம்.

மாட்டியது காலையிலே விரட்டப்பட்ட காளைதான்.

எப்படியோ சிறைக்காவல் தாண்டி
உள்ளே புகுந்துவிட்டான் அந்தக் காளை!

"வெளியே என்ன குறை? ஏன் சிறையை நாடுகிறாய்"


காவலர்கள் விசாரிக்க –
காதல் கதையைச் சொன்னான்
அந்தக் காளை.

அவனோ–பூட்டை உடைத்துத் திருடிய காளை
அவன் மனப்பூட்டை உடைத்து திருடி
விட்டாள் ஒரு கோதை.

திருடப்பட்டது– இதயம்.
திருடிய கோதை–
சிறைச்சாலை காவலாளி.
காவலுக்கிருந்தவளே
களவாடிவிட்டாள்.
"காதலுக்கு உள்ள பலமே
தனிதானோ?"

காவலர்கள் வியந்தனர்.
காவலர்கள் மத்தியில் இருந்த
காதலித்து அறிந்தவர்கள்
"காதல் ஒரு வேதம்
அதற்குண்டு
வேகம்" என்று
பேசிக்கொண்டனர்.

**(இந்தியாவில் உள்ள ஒரிசா மாநிலத்தில் சென்கானல் சிறையில், கடந்த மார்ச் மாதம் 21ம் திகதி நடைபெற்ற சம்பவம் அது)**





# கன்னி வெடி

## தூரத்து நாகரிகம்

பக்கம் 16-17



உழைப்பாளி படத்தில் ரோஜா



ஃபாசன்

## தந்தைக்கு நடந்தது தான் தனயனுக்கும்

கராட்டிச் சண்டைகள் மூலம் திரையுலகைக் கதிகலங்க வைத்தவர் புரூஸ் லீ. திடீரென்று ஒருநாள் கொல்லப்பட்டார். இதுவரை காரணம் மர்மமாகவே இருக்கிறது. சமீபத்தில் அவரது மைந்தன் பிரெண்டன் லீ படப்பிடிப்பொன்றின்போது கொல்லப்பட்டார். சண்டைக் காட்சியில் நடிக்கும் போது போலித் தோட்டாவுக்குப் பதிலாக உண்மையான தோட்டா அவரது உடலில் பாய்ந்தது.





ஹொலிவூட்டின் நடிகர்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள். பிரபல நடிகர்களான ஸ்ரீபன் சீகல், கீபர் சதர்லாண்ட் இருவரும் அதுஒரு திட்டமிட்ட கொலைதான் என்று அடித்துக் கூறுகிறார்கள்.

